
மனப் பூ
மேலாண்மை
பொன்னுசாமி
கங்கை
புத்தக
நிலையம்

# மனப்பூ

மேலாண்மை. பொன்னுச்சாமி

கங்கை புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு, தியாகராய நகர்,

சென்னை – 600 017.

முதற்பதிப்பு : நவம்பர், 1999
இரண்டாம் பதிப்பு: ஜுலை, 2005
மூன்றாம் பதிப்பு : மார்ச் 2007

**விலை: ரூ. 36–00**

| | |
|---|---|
| TITLE | : MANAPPOO |
| AUTHOR | : MELAANMAI PONNUCHAMY |
| SUBJECT | : Short Stories |
| LANGUAGE | : TAMIL |
| EDITION | : Third Edition, March 2007 |
| PAGES | : 192 |
| PUBLICATION | : GANGAI PUTHAKA NILAYAM<br>13, Deenathayalu Street,<br>Thyagaraya Nagar,<br>CHENNAI - 600 017 |
| PRICE | : **Rs. 36 - 00** |

Laser Typeset at:
**SPM Graphics,** CHENNAI-600 116

Printed at : Nathan & Company, Chennai - 42.

# சமர்ப்பணம்

இந்திய சுதந்தரப் போராட்டம்
என்னும் மிகப்பெரிய தேசபக்த
வேள்வியில் தம்மையும்
எண்ணெயாக வார்த்துக் கொண்ட
போராளிகளையெல்லாம்
மறக்காமல்—

சுதந்தரப் பொன்விழா கலை
இலக்கிய இரவுகளிலும், பிற மக்கள்
திருவிழாக்களிலும் அந்தப்
போராளிகளை மேடையேற்றி,
பாராட்டி, கௌரவித்து, சிறப்பித்த—

இந்தத் தலைமுறையின்
தேசபக்த இளைஞர்களுக்கும்,
இலக்கிய அமைப்புகளுக்கும். . .

# முன்னுரை

காணும்- உணரும்- வாழ்க்கையை வார்த்தைகளில் பதிவு செய்வது மட்டுமா, சிறுகதையின் இயல்பு? அல்ல.

வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையின் உள்ளும் புறமுமான முழுமையை, உண்மையோடு உணர்த்துகிற தொனியிலேயே வாழ்க்கைத் தீர்வுக்கான வெளிச்சத்தையும் வழங்குவதுதான் சிறுகதைக் கலையின் இயல்பும், பணியும்.

இந்தப் பணி முழுமையாக நிகழ்ந்தேற வேண்டு மானால், சிறுகதையின் வடிவநேர்த்தி மிகமிக முக்கியமான தாகிவிடுகிறது. வடிவநேர்த்திதான் சிறுகதையின் உள்ளடக்க உயிர்ப்பையும் உணர்வுப் பாய்ச்சலையும் நிகழ்த்துகிறது; உயிர்ப்போடு இயங்கி வெற்றிகரமாக்குகிறது.

வாசகரின் உள்ளத்தை எடுத்த எடுப்பில் அள்ளிக் கொண்டோடுவது மொழிநடை. வாசிக்கும் கணத்திலேயே மனசை வசீகரித்து வசப்படுத்துவது கதையின் உத்தி. படைப்பின் சாராம்சத்தையும், சமுதாயநோக்கையும் வாசகப் பண்பாட்டு உணர்வாக்குவது கதைக் கட்டுமானக் கச்சிதமும் வடிவநேர்த்தியும்தான்.

இவை எல்லாவற்றையும்விட மிகமிக முக்கியமானது, படைப்பின் உள்ளடக்க உணர்வு படைப்பாளியின் மனஉண்மை யாக இருக்க வேண்டும். அதுதான் படைப்பின் அழகியலாக பூக்கிறது; வாசமும் பேரொளியுமாய்ப் பரவுகிறது.

ஆனந்தவிகடனில் இருவாரச் சிறுகதையாகப் பிரசுர மாகி... அந்த மாதத்தின் தமிழ்ச் சிறுகதைகளிலேயே சிறந்த சிறுகதை என்ற 'இலக்கியச் சிந்தனை'யின் பரிசையும் பெற்ற "பட்டம்" சிறுகதைக்கு பரந்துபட்ட வாசகத்திரளிடமிருந்தும், அறிவார்ந்த ஆய்வாளர்களிடமிருந்தும் வந்து குவிந்த பாராட்டுகள் (அதில் மிகவும் குறிப்பிடத்தக்க கடிதம், விருதுநகர் மாவட்ட வட்டாட்சியர்களின் மேலாளராக இருக்கிற திரு. சுப்பிரமணியம் என்ற நண்பர் கடிதம்) எனக்கு இதைத் தான் உணர்த்துகிறது.

டவுண்பஸ்ப்பயண மூச்சுத்திணறலும், வெக்கைச் சுவாச மோதலும், இடிபடலும், மிதிபடலும் ஏறக்குறைய சகல

மக்களின் அனுபவமாகி... அடிமன உணர்வாகிக் கிடக்கிறது. எனக்கு அது நிறைய்ய.

அந்தக் களத்திலேயே அந்த அனுபவ உணர்வுண்மையி லேயே நான் கண்டுணர்ந்த சமுதாய நடப்புப் புதிய சலனத்தை இயங்கவைப்பது... எனக்குச் சுவாசத்தைப்போல இயல்பாக இருந்தது.

பழம்பெரும் நாடு; ஞானம் செறிந்த நாடு; உலகுக் கெல்லாம் நாகரீகமும் வாழும் முறைமையும் கற்றுத் தந்த நாடு. இப்படி இந்தியாவுக்கு எத்தனையோ தனித்த பெருமைகள் இருப்பதைப்போலவே, நம் இந்தியாவுக்கே உரித்தான இழிவும் உண்டு. அதுதான் சாதீயம்.

சாதியில் உயர்வு- தாழ்வு சொல்கிற சமூக அநீதியும், சாதீயப்பகைமையால் மனிதன் பிளவுண்டு வெட்டிக்கொண்டு சாவதும், சாகடிப்பதுவும் என்பது இன்றளவும் நீடிக்கிற தலைகுனிவு.

'நிலமான்ய முறைமையை அடித்து நொறுக்காம லேயே... தொழில் முதலாளீய முறைமையின் முகிழ்வு' என்கிற வரலாற்றுப் பிறழ்வு, இந்தியமண்ணில் சாதீயப் பிளவுகளையும், சாதீயப் பாகுபாடுகளையும் இந்த ஜனநாயகக் காலத்திலுதித்த வைகுந்த ஸ்வாமிகள் என்ற முத்துக்குட்டி ஸ்வாமிகள், வள்ளலார், விவேகாநந்தர், வைத்தியநாத அய்யர் போன்ற ஆன்மீகச் சுடர்கள் மட்டுமல்ல... ஈரோட்டு நாயகர் ஈ.வே.ரா. பெரியார், சிங்காரவேலர் போன்ற நாத்திகர்களும், பொதுவுடைமை இயக்கத் தலைவர்களும், வள்ளுவர், கோபால கிருஷ்ணபாரதி, மகாகவி பாரதி, பாரதிதாசன், தமிழ்ஒளி போன்ற கவிஞர் பரம்பரையும் சாதீயப் பாகுபாடு எனும் சமூக அநீதிக்கெதிராக போர்க்குரல் கொடுத்துள்ளனர். துணிச்சலாகப் போராடியுள்ளனர். சிலபல உரிமைகளைப் பெற்றுள்ளனர். சில பல நல்ல விளைவுகளை நிகழ்த்தியிருக்கின்றனர்.

ஆயினும்-

சாதீயப்பேதம் எனும் சமூகநோய் இன்றைய பேனாக் களுக்கும் பெரும் சவாலாகவே இருக்கின்றது. அதில் என் பேனாவும் அந்தச் சவாலை எதிர்கொள்கிறது.

சாதீயப் பகைமையின்மீதும், சாதீயப் பாகுபாட்டின் மீதும் என் எழுத்துகள் சமரசமற்ற பகைமை கொண்டிருக்

கிறது. சாதீயக் கலவரங்களும், தீண்டாமையும் மலிந்த இந்தக் கரிசல்மண்ணின் வெக்கைமிகுந்த வாழ்க்கை நிகழ்வுகள் என் கதைக் கருக்களை நிர்ணயம் செய்கின்றன. 'எழுது, எழுது' என்று முன்வந்து நிற்கிற அந்த அமுக்குத் திரளை அசூயையுடன் பார்க்கிறேன்.

என் கதைகளின் களமும், நான் வாழ்கிற கந்தகபூமியும் விந்தைமிக்க தனித்தன்மை வாய்ந்தது.

காய்ந்தால் ஒரேயடியாகக் காய்ந்து, வறட்சியால் வாழ்வை எரிக்கும்; பெய்தால் ஒரேயடியாகப் பெய்து, கண்மாய்கள் உடைந்து, காடுகரைகள் நாசமாகி, மாதக் கணக்கில் வெள்ளம் பாய்ந்து பெரும் சீரழிவாகும். ஆம், காய்ந்தும் கெடுக்கும்; பெய்தும் கெடுக்கும்.

பெய்து கெடுக்கிற இயற்கையின் உற்பாதங்களை மானுட சக்தி எதிர்கொண்டு, தைர்யமாகச் சமாளித்து, போராடிப் போராடியே முன்னேறிவருகிறது என்பதுவே மனித குல வரலாறு.

இயற்கையின் உற்பாதங்களை எதிர்த்துப் போராடுகிற மனிதகுலம், இயற்கையை உயிரினும் ஆழத்தில் வைத்து நேசிக்கவும் செய்கிறது. மோதலும் நேசமும் இயற்கையால் நிகழ்கின்றன.

இயற்கையின் ஆதாரசக்தியை ஆக்கபூர்வமாக நேசித்து பயன்பாட்டு விஷயமாக்கிக் கொள்கிற அதேசமயம், அதன் குரூர நர்த்தனங்களை- பாதகத்தன்மைகளை- எதிர்த்து முறியடித்து தன்னைக் காத்துக் கொள்ளவும் செய்கிறது, மனிதகுலம்.

தைமாதத்துச் சூரியனை வணங்குவதும், சூரியப்பகுதிகளான தீபவரிசைகளின் பேரழகைக் கும்பிடுவதும், பசிய பயிர்களை- முற்றிய கதிர்க்கொத்துகளை ஆராதனை செய்வதும் வழிபாட்டு இரங்கலல்ல; 'எனக்கு அதைத்தா, இதைத் தா' என்று இறைஞ்சுகிற சடங்காச்சாரமுமல்ல. இயற்கையுடனான மனிதனின் இயல்பான உறவின் வெளியடையாளங்கள்தாம், அவை.

இயற்கையுடனான மனித உறவின் வாசம் என்பது தொப்பூள்கொடி உறவு போன்ற ஆதித்தன்மையும், நிஜத் தன்மையும் கொண்டது; தாய்- மகனுக்குரிய பாசப்பந்தம் அது.

அந்த உறவு கடந்தகாலமல்ல; நிகழ்காலம் மட்டுமல்ல; இனிவரும் எல்லாக் காலங்களுக்கும் சத்தியமானது. நித்திய மானது.

கணினியுகத்திலும் வேப்பமரத்துக் குளுமை மானிட ருக்கு வேண்டும். ஏவுகணை காலத்திலும் சூரியவெளிச்சக் கதகதப்பில்தான் உயிர்ச்சூடு வளர்க்க வேண்டும். செயற்கைக் கோள் யுகத்தின் விரல்நுனியில் உலகம் விரிந்தாலும், தழைகள் வருடிவருகிற மென்காற்றில்தான் உயிர் துடித்திருக்க முடியும்.

பஞ்சபூதச் சதைவடிவமே மானுடன்.

இப்படி டவுன்பஸ்பயண நெருக்கடி என்கிற துகளுக் குள்ளும், இயற்கையுடனான மானுடபந்தம் என்கிற பிரபஞ்சப் பெருவெளியிலுமாகப் பயணமாகிற என் கதைகள், கரிசல்மண் ணின் விளைச்சல்தாம். கரிசல்மண்ணைப் போல கறுப்புதான். எளிமைமிக்க வெக்கைதாம்.

வாழ்க்கைப்பரப்பின் அகலப்பிரம்மாண்டத்தையும், நுட்ப உணர்வின் அணுத்தனமான துல்லியத்தையும் ஒருங்கே கொண்டிருப்பதில்தான், என் கதைகளின் பலம் அடங்கியிருக் கிறது.

மானுடநேயம் மிகுந்த அறிவார்ந்த விமர்சகர்களுடனும், வாழ்க்கையை அதன் தளத்திலேயே நேர்கொண்டு கட்டிப் புரண்டு, நிறம் மாறி, நிறம் மாற்றி இயங்கிக்கொண்டிருக்கிற சராசரி மனிதர்களுடனும் உறவு கொண்டுவிடுகிற என் கதை களின் தனிச்சிறப்புக்குக் காரணம், அவற்றின் உறைந்த நிலை யிலான யதார்த்த உள்ளடக்கமும், யதார்த்த வடிவமும்தான்.

சமூகவாழ்வில் உறைந்து இயங்குகிற சகல மனிதர் களின் அனுபவரீதியான உணர்வுப் பகிர்வுகளின் உண்மைத் தன்மை மிக்கதாக இருக்கிற அதன் எளிமையான யதார்த்த இயல்பு.

ஆனந்தவிகடன், செம்மலர், ஓம்சக்தி, குங்குமம், தினகரன், தினபூமி, தீக்கதிர், இந்தியாடுடே, இதயம் பேசுகிறது போன்ற பிரபலமான- ஆரோக்கியமான- வார, மாத, தினசரி இதழ்களில் தனித்தனியாக வெவ்வேறு காலத்தில் பிரசுரமான

கதைகள், ஒரே தொகுப்பாக அணிவகுத்து உங்கள் கையில் நிற்கின்றன.

பிரசுரித்து கௌரவித்த அந்த இதழ்களின் ஆசிரியர்ளுக்கும், தொகுப்பாக்கி நூலாக வெளியிட முன்வந்த பாரம்பர்யப் பெருமைமிக்க கங்கை புத்தக நிலைய உரிமை யாளர் அவர்களுக்கும், எனது நூல்களை வாங்கிப் படித்து ஆதரவுக் கரம் நீட்டுகிற தமிழ் வாசகர்களுக்கும்,

கதைகள் பிரசுரமான இதழ்களைத் தேடி எடுப்பதில் பெரிய உதவிகள் செய்த திருவேங்கடம் நூலகர் திரு. மாயாண்டி, மதுரை நூலகரும், எழுத்தாளருமான திரு. பாண்டுரங்கன், தோழன் ஹோ. சி. மின் ஆகியோருக்கும்,

சிறுகதைகள் வந்த இதழ்களை பத்திரப்படுத்தி, கத்தரித்து, ஒழுங்குசெய்து, தொகுத்துதவிய என் மகள் வைகறைச்செல்விக்கும், எனக்கு ஆதாரபலமாகவும் ஆணி வேராகவும் திகழ்கிற என் தம்பி கரிகாலனுக்கும்-

என் நன்றிகள் என்றென்றும் உரித்தாகும்.

இதோ... சிறுகதைத் தொகுப்பு உங்கள் கையில். வாசித்து முடித்துவிட்டு மௌனத்தில் உறைந்துவிட வேண்டாம். வாசித்த மனசில் பூத்த உணர்வுகளை வார்த்தை களாக்கி ஓர் அஞ்சலட்டையில் எழுதியனுப்புங்கள்.

நீங்கள் தருகிற முள்குத்தல் போன்ற விமர்சனமும் என்னை மேலும் நெறிப்படுத்தும்; பயணவேகத்தை ஒழுங்கு படுத்தும்;

நீங்கள் வீசியெறிகிற பூக்கள் போன்ற பாராட்டு வார்த்தை களும் என்னைப் பரவசப்படுத்தும்; என் பேனாவுக்கு இன்னும் மையூற்றும்.

இரண்டுமே சமூக அக்கறைமிக்க இலக்கியத்துக்கு நல்லது செய்யும்.

நன்றிகள்!

மேலாண்மறைநாடு
626127
விருதுநகர் மாவட்டம்

என்றும் உங்கள்

**மேலாண்மை. பொன்னுச்சாமி**

# ஆசிரியரின் பிற நூல்கள்

சிபிகள் — *சிறுகதைத் தொகுப்பு*
பூக்காத மாலை ,, *(அனந்தாச்சாரியார் அறக்கட்டளை விருது)*
மானுடப் பிரவாகம் ,,
பூச்சுமை ,, *(கோவை லில்லி தேவசிகாமணி இலக்கிய விருது)*
தாய்மதி ,,
காகிதம் ,,
கணக்கு ,,
விரல் ,,
உயிர்க்காற்று ,, *(ஸ்டேட் வங்கி விருது)*
என் கனா ,,
தழும்பு — *குறுநாவல் தொகுப்பு*
கோடுகள் ,,
ஈஸ்வர ,,
முற்றுகை — *நாவல் (கல்கி பொன்விழா நாவல் போட்டியில் முதற் பரிசு)*
இனி ,,
அச்சமே நரகம் ,,
ஊர் மண் ,,
ஆகாயச் சிறகுகள் ,,
முழு நிலா ,,
சிறுகதை படைப்பின் உள்விவகாரம் *(இலக்கியக் கட்டுரை நூல்)*

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பட்டம் | 11 |
| 2. | கிறுக்கு | 33 |
| 3. | தீண்டாதே! | 51 |
| 4. | மானுடம் | 63 |
| 5. | ஏழாப்பு | 81 |
| 6. | மரணம் | 102 |
| 7. | மானத்தீ | 124 |
| 8. | மனப்பூ | 140 |
| 9. | அந்த ஒரு நாள்... | 154 |
| 10. | பொழுது முகம் | 170 |
| 11. | கஞ்சம் | 177 |

# பட்டம்

“இந்தா வந்துருச்சில்லே, நம்ம ஊரு டவுன் பஸ்.”

“ஆமோப்போய்... நெசந்தா... நம்ம பஸ்ஸுதான். ஓடியாங்க.”

“கெழடாய்ட்டா கண்ணு எழவும் தெரிய மாட் டேங்குது. எந்த வண்டிடா ராசா? ஒக்கார எடம் போடுடா.”

“வா... பெருசு, எம் பின்னாடி. இந்தா, வர்ற வெள்ளை வண்டி.”

அல்லோலகல்லோலப்படுகிற பஸ் ஸ்டாண்ட். டவுன் பஸ்கள் பூராவும் வடக்கு ஸைடில். அங்குதான் திருவிழா போல கூட்டம். அங்கும் இங்குமாக ஓடிப்பாய்கிற ஜனம்.

இளவட்டங்களின் ஆரவாரிப்பு. கிழடுகட்டைகளின் குருட்டுப் பரபரப்பு. ஆண்களின் பெண்களின் அலை பாய்வு. முண்டியடித்து, நெருக்கியடித்து, திணறடிக்கிற ஜன அடர்த்தி. மூட்டை முடிச்சுகளும் தலைச்சுமையும்

கைப்பாரமுமாக தத்தளிக்கிற ஜனமொய்ப்பு. பதட்டமும் பரபரப்புமான கணங்கள்.

மனிதக் கற்றைப் பெருவெள்ளப் பெருக்குள் ஊடுருவி, பிளந்து, முன்னேறி... வெள்ளை பஸ்களிடையே நெளிந்து... வழி பார்த்து... வெளியேற்றுவதற்குத் தோதான இடம் பார்த்து நிறுத்துவது, டிரைவரின் மகா பெரிய சாமர்த்திய சாகசம். சாகச நுட்பம்.

அடித்து நொறுக்க வருகிற மாதிரியான ஆவேசத் தள்ளுமுள்ளுகளோடு வந்து மொய்க்கிற மனுச மக்களை உரசிவிடாமல், முட்டித் தள்ளிவிடாமல், வீழ்த்தி இரத்தக் காடாக்கி விடாமல்... பஸ்ஸை நகர்த்திக் கொண்டு வந்து நிறுத்துவது, அத்தனை சாதாரணமல்ல; உலக மகா திறமை. ஆம்ஸ்ட்ராங்கையும் மிஞ்சிய திறமை. சத்தியமாக.

பஸ் நின்றவுடன், குலுக்கலும் இரைச்சலுமாக மூச்சு விட்டது. வெக்கையாவி நாலா பக்கமும். பஸ்ஸுக்குள்ளும் பெருங்கூட்டம். நின்றுகொண்டும் உட்கார்ந்து கொண்டு மாக ஜனம். ஒருத்தர் மேல் ஒருத்தர் கால் கிட்டித்த சதைத் திணறல். வாசல்களை வந்து மொய்க்கிற ரெண்டு பஸ் கூட்டம். இறங்குகிறவர்கள் இறங்க முடியாமல், ஏறுகிறவர் கள் ஏற முடியாமல்... ஏகத் தள்ளுமுள்ளுகள். வசவுகள். சாபங்கள். காட்டுக் கூச்சல். சந்தைக் கூச்சல். மந்தைத் தனம்.

டிரைவர் சிரமம் எதுவுமில்லாமல் இறங்கி விட்டார். கண்டக்டர் கணேசன்பாடுதான் பெரும் திண்டாட்டம். ‘சதைத் திரளின்’ மையத்தில் மாட்டிக் கொண்டார். கடந்து நகரவே முடியவில்லை. இந்த லட்சணத்தில் எப்படி இறங்க?

ரெண்டு டிரிப் முடித்தாகிவிட்டது. இதே மாதிரி ஜனக்கூட்டம்தான். இமாலய இச்சிலாத்தி. தொண்டைத் தண்ணி காய்ந்துவிட்டது. கத்திக் கத்தி நெஞ்சுக் கூடெல்லாம் காந்தல். நின்றும் நகர்ந்தும் முன்னுக்கும் பின்னுக்கும் போய் டிக்கெட் அடித்ததில் கணேசன் குறுக்கெல்லாம் கடுப்பு. தொடைச் சதையில் மெல்லுகிற மாதிரியான வலி. ரணம்.

வண்டிக்கு ரெஸ்ட் டயம் அஞ்சு நிமிஷம்தான். அப்புறம் உடனடியாக வண்டி எடுத்தாக வேண்டும். அதற்கும் முன்பாக டிக்கெட் அடித்தாக வேண்டும்.

கிடைக்கிற இந்த அஞ்சு நிமிஷத்துக்குள்...

ரெண்டு கிளாஸ் பச்சைத் தண்ணீரைக் குடித்து, ஒரு டீயை அடித்துவிட்டு, ஒரு சிகரெட்டையும் சுண்டி, முடித்தால்... அடுத்து ஒரு டிரிப் நரகத்தைத் தாங்குகிற சக்தி வந்துவிடும். உடம்பில் ஒரு தெம்பு வந்துவிடும். கணேசனுக்குள் அலைபாய்ச்சலாக நினைவு.

டீ அடிக்க வேண்டுமானால், பஸ்ஸை விட்டு இறங்கணுமே. எப்படி இறங்க? இறங்குகிற பயணிகளை இறங்கவிடாமல், முண்டியடித்து மோதுகிற ஜனம். போர்க்கள உக்கிரம். இண்டு இடுக்குகளில் புகுந்து நுழைந்துவிடுவதற்கான பகீரத யத்தனிப்புகள்.

"துண்டைப் போடு..."

"இந்தா... ஸீட்டைப் போடு..."

"அடேய்... இந்தாடா பைக்கட்டு... அந்த ஸீட்லே போடு..."

"ஸீட்டே இல்லே... எல்லா ஸீட்லேயும் துண்டும் பைக் கட்டும்."

"இன்னும் ஆளே ஏறலே... அதுக்குள்ளே ஸீட் டெல்லாம் ஃபுல்லா?"

"ஆமா... ஆமா..."

"ஏய்... வழியை விடுங்கய்யா... எறங்கணும்."

"எறங்கவிட்டாத்தானே... ஏற முடியும்?"

"எழவு வுழ... நாசமாப்போக... எறங்குறதுக்கு வழி வுடுங்களேன்..."

"ஏய்... இடிக்காதே..."

"ஏலேய், மிதியாதே... நாயே..."

"கைப்புள்ளைக்காரி எறங்கவுடுங்க. புண்ணியமாப் போகுது."

"புண்ணியத்துலே உக்காந்து போக முடியுமா? ஸீட்டு வேணும்லே?"

"இதென்ன... ராட்சஸக் கூட்டமாயிருக்கு? கெழடு கட்டைக சிக்குச்சுன்னா... நசுங்கிச் சாக வேண்டியதுதான்."

பஸ்ஸுக்கு உள்ளும் வெளியேயும் சத்தக்காடு. கூவ(ல்)க்காடு. வசவும் புலம்பலுமாக கூச்சல். ஏளனமும் விமரிசனமுமாக இளக்காரம். ஒரே சந்தைக் கூச்சல். குழப்பக் கூச்சல். களேபரம். முண்டியடித்து இடம் பிடித்துவிடுகிற மூர்க்கமும் எப்படியாவது இறங்கிவிட வேண்டுமே என்கிற அவலமும் முட்டி மோதிக் கொள்கிற பயங்கரம்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த கண்டக்டர் கணேசன். சதைக்கூட்டம். அசைய முடியவில்லை... கிட்டித்து விட்ட இறுக்கம். நகர இயலவில்லை. பொறுமை சிதைகிறது.

'டீ குடிக்கக்கூட முடியாமப் போயிருமோ'— பயம், ஆத்திரமாக நிறம் மாறுகிறது.

ஜிவ்வென்று மண்டைக்குள் ஓர் உணர்வு. சண்டாள மாக வந்த கோபம். வாசலை அடைத்துக்கொண்டு நின்ற ஜனத்தைப் பார்த்து... காட்டுக் கத்தலாகக் கத்தினான், கணேசன்.

"ஏய் அறிவுகெட்ட நாய்களா... முண்டங்களா... மூதிகளா... எறங்குறவுகளை எறங்கவிட்டுட்டு... அப்புறம் ஏறுங்களேன். ஓய்! பச்சைத்துண்டு எறங்குய்யா... எறங்கு. எறங்கிட்டு வேற பேச்சுப் பேசு..." இடி முழக்கமாக இவனது கத்தலதிர்வு.

கண்டக்டரின் காட்டுக் கத்தலில், வாசலை மொய்த்த வர்கள் வெலவெலக்க... மளமளவென்று இறங்குகிற வர்களை மேலும் விறைப்பாக அதட்டினான். உச்சநிலைக் கோப அதட்டல்.

"எறங்கித் தொலைங்களேன்... சட்டுனு... தேரு அசையுற மாதிரி... ஊர்ந்துக்கிட்டு...! சட்சட்டுனு எறங்குங்க."

எப்படியோ சதையைப் பிய்த்த மாதிரி, கூட்டத்தைப் பிளந்துகொண்டு கணேசன் ஊடுருவி... இறங்கி, அலைவீசி ஆர்ப்பரிக்கிற சதைத் திரட்சியிலிருந்து உருவிக்கொண்டு வெளிக்காற்றுக்கு விலகி வந்தபோது—

'அப்பாடா!' ஒரு பெரும் சுமையே இறங்கிய மாதிரியிருந்தது. உயிரே வந்த மாதிரியிருந்தது. விடுதலை

உணர்ச்சியின் சுரீரிடுகிற உணர்வு. அதுவே எரிச்சலாக வந்தது.

அடியும் பிடியுமாக தடபுடவென்று இடித்துக் கொண்டு ஏறுகிற மனுச ஐந்துகளை வெறுப்புடன் திரும்பிப் பார்த்தான், கணேசன்.

'ச்சேய்...! இதுகளெல்லாம் மனுச ஜென்மமா? ராட்சஸப் பெறவிக. இதுகளோட மாரடிக்குற பொழப்பே தொழிலுன்னு ஆயிப்போச்சே...'— கசந்த மனசின் வெறுப்போடு காறித் துப்பினான்.

பஸ் ஸ்டாண்டுக்குள் வரிசையாகக் கடைகள்... டீக்கடைகள், இனிப்புக் கடைகள், இளநீர்க் கடைகள், புத்தகக் கடைகள்.

எல்லாவற்றையும் கடந்து, நல்ல நிஜ டீ குடிக்கிற எண்ணத்தில் பஸ் ஸ்டாண்டுக்கு வெளியே வந்தான். ரொம்ப நாளைய வழக்கம்.

முழங்கை நீள டர்க்கி டவலை காக்கிச்சட்டையின் காலருக்குள் வைத்திருந்த டிரைவர். முகம் கழுவி துடைத்து முடித்துவிட்ட அடையாளம். பஜ்ஜிகளைச் சாப்பிட்டு, டீ அடித்துவிட்டு, நுனிவிரலில் ஒட்டிய டீயின் பிசுபிசுப்பை யும் கழுவித் துடைத்துவிட்ட ஆசுவாசம்.

கசங்கி நைந்துபோன காகிதப் பிசுறாக வந்த கணேசனை, ஏளனமாகப் பார்த்துச் சிரித்த டிரைவர்:

"என்ன பாஸ், வண்டியை விட்டுட்டு வர மனசில் லியா?"

எரிச்சலும் சிடுசிடுப்புமாக வந்த கணேசன். சிரமப்பட்டு அதிலிருந்து விடுபட்ட கணேசன் வலியச்

*சிரிக்க முயன்ற யத்தனிப்பு. கறுத்த உதடுகளின் விரிவில் ஒரு செயற்கை. பிய்ந்த உதடுகளின் பொய்ச்சிரிப்பு. வலிச் சிரிப்பு.*

*“சும்மா வயித்தெரிச்சலைக் கிளப்பாதீக, பாஸ். கும்பல்லே மாட்டிக்கிட்டேன். பிய்ச்சுக்கிட்டு வர்றதுக் குள்ளே ‘ஆத்தாடி, யம்மாடி’ன்னு ஆயிப்போச்சு.”*

*“இப்பவே அஞ்சு நிமிஷமாச்சு. வண்டியெடுப்பமா?”*

*“கிண்டலா? நான் டீ சாப்புட வேண்டாமா?”*

*“தாகமிருந்தா... நேரத்துல வந்துருப்பீகளே...! ரொம்ப லேட்டாச்சுன்னா... டைம் கீப்பரு கூவக்காடு போடுவா ருல்லே?”*

*“கொஞ்சம் பொறுங்க. அண்ணே, ஒரு டீ போடுங்க. க்விக்” கடைக்காரரைப் பார்த்த கணேசனை கனிவுடன் விசாரிக்கிற கடைக்காரர்—*

*“பஜ்ஜி எடுத்துக்கலியா?”*

*“ம்ம்..”*

*“சட்னி இருக்கு.”*

*“சும்மா இருங்கண்ணே... இப்பவே லேட்டு. பஜ்ஜி சாப்பிட எங்கேயிருக்கு நேரம்? டீ போடுங்க... இந்தா சீரெட்டு வாங்கிட்டு வந்துருதேன்...”*

*பரபரப்பும் பதட்டமுமாக வெத்தலை பாக்குக் கடைக்கு ஓடிய கணேசன். சிகரெட் வாங்கிய துறுதுறுப்பு. கட்கத்தில் இருந்த தோல் பை. ரெண்டு பட்டன் திறந்த காக்கிச் சட்டைக்குள் கலர் பனியன்.*

கணேசன் டீயை எடுக்கப் போனான்.

"பாஸ், மூஞ்சியைக் கழுவலியா?"

"ம்ள்ச்சூ!"

"காய்ஞ்சிப் போய் எப்படியோ இருக்கு."

"இருந்துட்டுப் போவட்டும். டயமில்லியே. அழகுப் போட்டிக்கா போறோம்?"

கடைசி உறிஞ்சு உறிஞ்சுவிட்டு சிகரெட்டைச் சுண்டி யெறிந்த டிரைவர். சூடான டீயை 'அவக் தொவக்'கென்று ஆத்திர அவசரமாகக் குடிக்கிற கணேசன். பற்றவைத்த சிகரெட்டை 'பக் பக்'கென்று அடித்த வேகம். நாசியில் புகை வரும்போதே, உதட்டில் சிகரெட்டை வைக்கிற பரபரப்பு. கொதி டீயில் மரத்துப்போன நாக்கு.

கணேசனின் அவசர அவஸ்தையை மென்னகை யோடு பார்க்கிற டிரைவர். தோழமையும் பரிவுக் குழைவு மாக பார்க்கிற பார்வை.

"கணேசன்."

"ம்."

"சள்ளுபுள்ளுன்னு வுழுவாரு, டைம் கீப்பரு. அவருகிட்டே போய் பேச்சுக்குடுத்து... நைஸ் பண்ணிக் கிட்டிருக்கேன். நீங்க போய் வண்டியிலே டிக்கெட் அடிங்க..."

"ஆட்டும்..."

"வண்டியிலே கூட்டம் சள்ளை பறியுது போலிருக்கே. டிக்கெட் போட்டுருவீகளா? முடியுமா?"

"போட்டுத்தானே ஆகணும்? ஒரலுக்குள்ளே தலையைக் குடுத்தாச்சு. ஒலக்கைக்குப் பயந்தா... முடியுமா?"

"சரி... சீக்கிரம் வண்டிக்குப் போங்க. லேட்டாகுது."

"ம்..."

டிரைவர் ஆபீஸ் ரூமை நோக்கி நகர... கணேசன் இங்கிருந்தே பஸ்ஸைப் பார்த்தான். நல்ல கூட்டம். சாயங்கால வெயில் பஸ்ஸுக்குள்ளும். அடர்த்தியாக நிற்கிற பயணிகள். நிற்கக்கூட இடமில்லாமல், அப்பிப் போயிருக்கிற பயணிகள். கிட்டித்த புளிச்சிப்பமாக இறுக்கமாக அடைந்திருக்கின்றனர். மூச்சுத் திணறுகின்றனர். ஒருத்தர் செவியில் ஒருத்தர் உஷ்ணமூச்சு. ரெண்டு வாசல்களிலும் வாசல் படிகளிலும் இளவட்டங்கள். மேல்நிலைப்பள்ளி மாணவர்கள். காக்கி பாண்ட்டும் வெள்ளைச் சட்டைகளும்.

இன்னும் ஆறு ஸ்டாப், நகர எல்லைக்குள். எல்லா பஸ் ஸ்டாப்புகளிலும் பெரிய பெரிய கூட்டமாகக் காத்திருக்கும், ஏறுவதற்கு. எப்படிச் சமாளிக்க?

இந்த டிரிப், ரொம்ப மோசம். நரகம். பள்ளி விடுகிற நேரம். கூட்டம் வந்து அப்பும். எப்படித்தான் மாரடிக்கப் போறேனோ? மனுசருக்குள் நுழைந்து டிக்கெட் அடிக்க நகர முடியுமா? சதைகளைக் கிழித்து ஊடுருவுகிற மாதிரி, அவஸ்தைப் படணும். டிக்கெட் அடிக்க முடியுமா? இதுலே டிக்கெட் எடுக்காம நைஸா தப்பிக்கப் பார்க்கிற பார்ட்டிகள், பொண்ணுகளை இடிக்குறதுக்காக, வழி மறித்துக் கொள்கிற ஜொள்ளு பார்ட்டிகள், ஐம்பதும் பத்துமாக ரூபாய்த்தாள்களையே நீட்டுகிற லொள்ளுகள்.

இந்த லொள்ளுகள் போதாதென்று வசவுகள் வேறு. கண்டக்டரை எதிரியாகப் பார்க்கிற விஷப் பார்வைகள்.

சில்லறை கொடுக்காமல் மிச்சம் பிடித்து, 'பெருங் கொள்ளை'யடிப்பதாக ஒரு சந்தேகப் பேச்சு. சூடேற்று கிற வார்த்தைத் திராவகம், திராவகம்கள்.

நினைக்க நினைக்க மனசே கிடந்து தகிக்கிறது, கணேசனுக்கு.

'ச்சேய்' என்று வருகிறது. மனிதர்களையே எரித்துப் பஸ்பமாக்கிவிட வேண்டும் என்கிற விநோத வக்கிர உணர்வு. தொழிலின் ராட்சஸத்தில், ராட்சஸமாகிப் போகிற மனசு. தணல் பெருமூச்சு.

'என்ன செய்ய? மூளிச் சமூகத்துலே கொறை மனுசங்க. பேய்ப்பய வேலை. நாய்ப்பய கோணம்... இதுலே யாரைக் கொறை சொல்றது? எம்.ஏ. இங்கிலீஷ் லிட்டரேச் சர். மில்டனையும் ஷேக்ஸ்பியரையும் படிச்ச வேகம். மாக்பெத்தையே சாய்ஸ்லே விட்ட துரிதம். படிச்ச படிப்புக் குத் தகுதியான வேலையில்லே. படிப்பே வேஸ்ட்டாயிருச்சு. ஏழு வருஷக் கல்வியாண்டு. எல்லாமே, வவுத்துக்கு ஆகலே. மூளைக்கு ஆகலே. டென்த்லே வாங்குன நானூத்து முப்பத்திரண்டு மார்க்தான் வவுத்துக்கும் வாழ்வுக்கும் வேலை வாங்கித் தந்துச்சு. புருச லட்சணம் தந்துச்சு.'

மனசுக்குள் பரவிய கசப்பு உணர்ச்சி. ஹாஸ்டல் மைதானங்களில் ரவுண்டடித்த நாள்கள். பேசிப் பேசி அடைகாத்த கனவுகள். 'கல்லூரி விரிவுரையாளர்' கனவுகள். கை நிறைய சம்பளம். வசதியான வாழ்க்கை. 'அறிவுஜீவி' என்கிற அந்தஸ்து. உயர்மட்ட மனிதச் சூழலின் சகவாசம். கோட்டும், பூட்டும், பைப்புமாக ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் 'வேர்ல்ட் லிட்டரேச்சர்' பற்றிய அரட்டைகள். கனவுகள்.

எல்லாமே போச்சு. கட்கத்தில் பையை இடுக்கி... எச்சிலைத் தொட்டு, டிக்கெட் தருகிற அவலம்... கிராமத்து ஜனங்களைத் திட்டி... திட்டு வாங்கி... ஆத்திரப்பட்டு... ஆவேசப்பட்டு... காயம்பட்ட இரத்தக் கனவுகளின் மறுமுக மாக, மூர்க்கத் தினவுகள். குருட்டுக் கோபப் பாய்ச்சல்கள்... பலிகொண்ட சமூகத்தின் மீதான வன்மம். வேட்டையாடி விட்ட உலகத்தின் மீதான வெறுப்பு, கசப்பு, பழிவாங்க வேண்டும் என்கிற உள்தினவு. திசையற்ற தினவு. வன்மத் தகிப்பு.

டவுன் பஸ்கள் நிற்கிற சைடில் ஏகப்பட்ட பஸ் கூட்டம்... ஒன்றுக்குள் ஒன்றாகச் சொருகிக் கொண்டு. ஒன்றையொன்று முந்திக் கொண்டு. விடாத ஹாரன் அலறல்கள். அபாயச்சங்கு மாதிரி. படகுகள் மிதக்கும் சமுத்திரத் தண்ணி மாதிரி. ஜனம். ஜனத்தின் அலை பரபரப்புகள்.

கணேசன் ஒரு பாக்கு வாங்கினான். மூலையைக் கிழித்து, வாய்க்குள் தட்டிக்கொண்டான். பஸ்ஸுக்கு வந்தான். உள்ளேயே ஏற முடியவில்லை.

முகத்தில் சிடுசிடுப்பு. மனசின் தகிப்பு, கண்ணின் கனலாக... உதடுகளின் இறுக்கத்தில் தெறித்தது. கன்னக் கதுப்புகளில் ஆத்திரத் துடிப்புகள்.

வாசலில் அடைத்துக்கொண்டு நின்ற இளவட்டங் களை முறைத்தான். சண்டைக்காரனின் பகைமுறைப்பு. அனல் தெறிப்பு.

“எப்படிப் போறது... டிக்கெட் அடிக்கணும்லே? பஸ் போகணுமா, போக வேண்டாமா? வழியை வுடுங்கப்பா... ச்சேய். ஒங்களாலே உசுர்வதை.”

இவனின் கோபக் கத்தல். மனசின் வெடிப்பு. இறங்கி வழிவிட்ட பையன்கள், கண்டக்டரை முறைத்தனர். மௌன முறைப்பு.

"பெரீ...ய்ய சண்டியர் கணக்கா... சீறுறாரே. கழுத்தைச் சீவிருவாரா?"

"கை நிறைய சம்பளமும் போனஸும் வாங்கு றான்ங்க, இல்லே? அந்தத் திமிரு. சீறத்தான் செய்வான்?"

"செவிள்லே சப்புன்னு அறை வுட்டா... சீறு வானோ?"

கிசுகிசுப்பான உரையாடல். முணுமுணுப்பு போன்ற எதிர்ச் சீறல். எல்லாம் கேட்கத்தான் செய்தது, கணேசனுக்கு. சுள்ளென்று கோபம் வந்தது. 'எங்கேடா... செவிள்லே அறைஞ்சிருவீயா? பாப்பமாடா...?' என்று எகிறிக் குதிச்ச மனசை அடக்கினான், கணேசன். லகான் போட்டுக் கொண்ட உணர்வு, 'பொறு... கணேசா... எகுறாதே! சண்டை சச்சரவு உப்புக்கல்லுக்குப் பொறாது. ஓந்தரத்தைக் கொறைச்சுரும். பல்லைக் கடி. மனசைக் கட்டுப்படுத்து. கொதிப்பை அடக்கு. நிதானமாகு.'

மனசின் சீறலை பெருமூச்சாக நிறம் மாற்றிக் கொண்டான். திருப்பி ஒரு முறைப்பு முறைத்தான். விறைத்த பார்வை. வெடித்துத் தெறித்த தீக்கங்குகள். அதிலேயே பம்மிப்போன அந்த ஆட்கள்.

"டிக்கெட்... டிக்கெட் வாங்குங்க... சில்லறையா எடுத்து வெச்சுக்கங்க... நோட்டை நீட்டாதீக. மனுசனா இருக்க விடுங்க, மனுசனை. ம்ம்... சீட்... சீட்... சீட்டு..."

கட்கத்துத் தோல்பை கைக்கு வந்தது. பைக்குள் ளிருந்து டிக்கெட்டுகள், சுற்றியிருந்த ரப்பரை உருவி

*விரலில் மாட்டிக் கொண்டான். டிரைவர் ஸீட்டுக்குப் பக்கத்தில் நுழையப் போனான். முடியவில்லை. அப்பிப் போயிருந்த ஜனக்கற்றை. கற்றையைப் பிளந்துகொண்டு, திக்கித் திணறி... சிக்கித் தவித்து... உருவிக்கொண்டு போய் நின்...*

*நிற்கவும் முடியவில்லை. ஒரு காலை ஊன்றினால், மறுகாலை வைக்க இடமில்லை. தவமிருப்பவனைப் போல, ஒற்றைக் காலில் நின்ற கணேசன், பக்கத்தில் நிற்பவர் மேல் சாய்வதைத் தவிர்க்கவே முடியவில்லை.*

*“மேலே சாயாதீங்க.. தள்ளி நில்லுங்க...”*

*“எங்க நிக்க? எடமில்லியே...”*

*“மேல சாய்ஞ்சா எப்புடி?”*

*“கூட்டத்துலே ‘அப்புடி இப்புடி’த்தான் இருக்கும். சகிச்சுத்தான் ஆகணும்.”*

*“உங்களை எதுக்கு நான் சுமக்கணும்?”*

*“சிக்கெடுத்தாப்புலே வரணும்னா டாக்ஸியிலே போகவேண்டியதுதானே?”*

*“அதுக்கெல்லாம் வழியிருந்தா... இந்தக் கூட்டத்துலே இடிப்பட்டுச் சாகணுமா?”*

*“அதுக்கு யார் என்ன செய்றது? நானும் கெடந்து சீரழியத்தான் செய்றேன்?”*

*சண்டையாகவில்லை. சத்தம் உயரவில்லை. சண்டைக்கான வெக்கைத் தொனி, உரையாடலில் உள்ளுக்குள் கனன்றது. நீறுபூத்த நெருப்பு. கங்குச் சொற்களின் உரசல்.*

"ம்... டிக்கெட்... டிக்கெட்... எங்க? பி.எஸ்.கே. நகரா? அதுக்கு இதுலேதான் ஏறணுமா? 'சத்திரப்பட்டி சண்டிங்'லே ஏறலாம்லே?"

முதல் துவக்கமே சரியில்லை. கணேசனுக்குள் கனன்றது. மனசுக்குள் கசங்கிப் புழுங்கிய மாதிரியோர் நசநசப்பு.

குலுங்கிக் குலுங்கி அதிர்கிற தோல்பை. சில்லறைச் சிரிப்புகள். "ம்... கொண்டாங்க எங்க? ராசூல்ராமனா? ம்... இந்தாங்க... காரூவா இருக்கா?"

மளமளவென்று வேலை. வியர்த்துக் கொட்டுகிறது. அப்பிப்போன மனிதச் சதை. மனித நெடி. வியர்வை நாற்றம். தகரக் கணகணப்பு. எல்லாருக்கும் வியர்வை நசநசப்பு. தாங்கமுடியாத வெக்கைப் புழுக்கம்.

"வண்டியை எடுங்கப்பா..."

"டிரைவரு ஏறல்லியா?..."

"வேர்வைக்காடு நெருஞ்சிமுள்ளா குத்துது. பஸ்ஸை எடுத்தா... காத்தாச்சும் வரும்."

பயணிகளின் மனவெடிப்புகள். சத்தக் கோபங்கள். கணேசன் டிக்கெட் அடித்தான்.

"ம்... கொண்டாங்க... என்ன இது? ஐம்பது ரூவாயா? ஏன், ஐந்நூறு ரூவாத்தாளு இல்லியா?"

"இல்லே."

"ஏங்கிட்டே சில்லறை இல்லேல்லே?"

"எப்படியாச்சும் பாருங்க."

*"என்னத்தைப் பாக்க? அப்பதையே உங்களைப் பாத்துட்டேன். சில்லறை இருந்தா டிக்கெட் வாங்குங்க. இல்லேன்னா... கீழே எறங்குங்க..."*

*ஐம்பதுக்காரர் முறைக்கிறார். தாட்சண்யமற்ற இவனது பதிலைச் சகித்துக் கொள்ளாத கோபம்.*

*அவரது முறைப்பை அலட்சியப்படுத்துகிற கணேசன். அவரைத் தவிர்த்துவிட்டு, மற்றவர்களுக்கு டிக்கெட் தருகிற வேகம். கிழிபடுகிற டிக்கெட். ஸ்டேஜை கணக்கிட்டுப் பெருவிரலால் துளைபோடப்படுகிற டிக்கெட். வாங்கிய ரூபாய்த்தாள்களை நீளவாக்கில் மடித்து விரலிடுக்கில் சொருகிக்கொள்கிற லாகவம். ஐந்து ரூபாய், ரெண்டு ரூபாய் நாணயங்களை மட்டும் தனிப் பிரித்து சட்டைப்பைக்குள் போட்டுக்கொள்கிற கவன நுட்பம்.*

*"ம், டிக்கெட்... டிக்கெட்... கேட்டுக் கேட்டுச் சீட்டை வாங்குங்க. சீட்டை வாங்குனாத்தான் பஸ் நகரும்... ம்... வழிவிடுங்க... கொஞ்சம் தள்ளுங்க. ரெண்டா? ஆலங்குளமா? ம்... எம்மா... இந்தப் பக்கம் ஒதுங்குங்க... சொன்னா கேளுங்க... ம்... ரெண்டு தொம்பக்குளமா? அம்பது பைசா இருக்கா? 'அண்ணன், சார்'ங்குறதெல்லாம் பெறவு. தயவுதாட்சண்யம், பழக்கவழக்கமெல்லாம்... அப்புறந்தான். டிக்கெட், டிக்கெட், எம்மா, சங்கம்பட்டியா? எத்தினி? ஏழா? ம்..."*

*மளமளவென்று பின்னேறுகிற கணேசன். நிற்கிற, உட்கார்ந்திருக்கிற எல்லோருக்கும் போட்டுக்கொண்டே வந்தான். பாதிக்கு மேல் நெருங்கிவிட்டான். சள்ளையும் தொல்லையுமாக நகர்கிற நேரம். சாய்கிற வேலை.*

டிரைவர் கதவைத் திறந்து ஏறினார். ஸீட்டில் உட்கார்ந்து ஸ்டியரிங்கைப் பற்றிய நிலையில், கழுத்தைத் திருப்பி உள்ளே பார்த்தார். தேடப்படுகிற கணேசன். கண்ணில் படாத கணேசன். சுவராக, ஜனம்.

"என்ன தோஸ்த், டிக்கெட் அடிச்சாச்சா?"

"ம்..."

"வெயிட் பண்ணணுமா, ஸ்டார்ட் பண்ணலாமா?"

"ஸ்டார்ட் பண்ணுங்க... பாஸ். நான் பாத்துக் கிடுதேன்..."

உயிர்பெற்று இரைந்த இன்ஜின். தகரக் கிழிசல்களாக பஸ். பாதி ஆணிகள் காணவில்லை. அதிர்கிற தகரங்கள் பேயிரைச்சலாகி... கர்ண கடூர இரைச்சலாகி... மனசுகளைக் கலவரப்படுத்தி...

பஸ் நகர்ந்தது. ஹாரன் அடித்த வண்ணம் மெதுவாக நகர்ந்தது; ஊர்ந்தது. பஸ் நகர்ந்தவுடன்... அங்கும் இங்குமாக அசால்ட்டாக இருந்துவிட்டு 'மொலோ'ரென்று வந்து அப்பிய இளவட்டங்கள். வேதாளங்களாகத் தொங்குகிற பரிதாபம். ஒற்றைக் காலைக்கூட வைக்க இடமில்லாமல், கம்பிப் பிடியில் தொங்குகிற பயங்கரம்.

"படியிலே நிக்காதீக. தொங்காதீக. உள்ளே வந்துருங்க... மரியாதையா சொல்றப்பவே ஏறிருங்க. பெறவு... 'நாய்... பன்னி'னு பேச வெச்சிராதீக."

என்று பலமாகக் கத்திய கணேசன், காட்டுக் கத்த லாகக் கத்தினான். "கவலையில்லாம நீங்க மண்டையைப் போட்டுருவீக. நசுங்கிச் செத்துப்போவீக. டிரைவரும்

நானும்தான் நாயா பேயா அலையணும், கோர்ட்டுக்கு. உசுரை வாங்காதீக. உள்ளே வாங்கப்பா...”

“ஏய், தலைப்பாகை, எங்க போகணும்? கம்மாப் பட்டியா? மூனா...? பெரிசு, ஆமர் நாடா? கொண் டாரும்யா... ‘சட்’டுன்னு குடும்யா... செல்லும், செல்லும்... அஞ்சுரூவா கந்தலானாலும் செல்லும்...”

எல்லாமே... கோபத் தொனி. எரிச்சல். தாங்க முடியாத சள்ளை. இச்சிலாத்தி பொறுக்காத சிடுசிடுப்பு. காட்டமும் கடுப்புமாக சீறுகிற கணேசன். ‘சள்ளு புள்ளெ'ன்று எரிந்து விழுகிற ஆத்திரம்.

பஸ் மெள்ள மெள்ள உருண்டு... வெளிவாயிலின் விளிம்புக்கு வந்தது. சற்றே திகைத்து நின்றது. இன்ஜினின் கர்ண கடூர இரைச்சல். நின்று இரைகிற இரைச்சல்.

டிக்கெட் கொடுக்கிற வேகத்திலேயே, ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான், ‘ஏன் பஸ் நிக்குது?’ என்று.

“தோஸ்து...”

டிரைவரின் அரூபக்குரல். அசரீரி. அழைப்புச் சத்தம்.

“என்ன தோஸ்து?”

“ரொம்பக் கோபத்துலே இருக்கீகளா?”

“என்ன சங்கதி? சொல்லுங்க.”

“இந்தக் கடைக்காரரை ஏத்திக்கோங்க. லோடுகளை யும் ஏத்திக்கங்க. கோபப்படாதீக. நம்மாளு...”

“உங்களுக்கு வேண்டிய ஆளா?”

"ஆமா தோஸ்து... நம்மாளு."

" 'நம்மாளு' என்பதன் அழுத்தம்... 'உங்களுக்கும் வேண்டியவர்தான்' என்கிற மர்ம உணர்த்தல். கணேசனுக்குள் கேள்வி நமைச்சல். 'யார்?'

சவுண்டை ஏற்றினான், கணேசன்.

"சரக்கு ஏத்தட்டும், வழிவிட்டு ஒதுங்குங்க..."

அதற்கும் பின்பகுதிப் பயணிகளிடையே கசகசப்பு. மெல்லிசான கிசுகிசுப்பு. "எல்லாம் கமிஷன் பண்ணுற கூத்து."

"கடைக்காரன் அஞ்சு ரூவா குடுப்பான்லே? அதுக்குச் சாமியாடுறானுக."

"ஆடுனா ஆடிட்டுப் போவட்டும்... வேண்டாங் கலே. நம்ம மேலே சாட்டையடி வுழுதுல்லே? அதா...ஞ் சிக்கலு."

அந்தப் பொருமலான முணுமுணுப்புகள், ஒரு நிழல் போல மங்கலாக இவனுக்கும் கேட்டது. தீயில் காலை வைத்த மாதிரியிருந்தது. யாரோ நெருப்புச் சாட்டையால் விளாசுகிற உணர்வு. மனசின் ஆழத்தில் சுரீரிடுகிற வலி. நெற்றியில் வந்து விழுந்த சாணி.

எம்.ஏ. பட்டதாரி. உலக இலக்கியங்களை வகைப் படுத்தி ஆங்கிலத்தில் அலசியவன். அலசித் தேர்ந்தவன். அவனுக்கோ இந்த அற்பப் பெயர்? 'அஞ்சுக்குச் சாமி யாடுகிறவன்' என்ற இழிவா? ரோஜாவை மிதிக்கிற சாக்கடைப் பன்றிகள். ச்சேய்ய்க்...

கணேசனுக்குள் சண்டாளமாக வந்த கோபம்.

உள்ளுக்குள்ளிருந்து பொங்கிப் பீறிட்ட தீக்குழம்பு. அடிபட்ட பாம்பாகச் சீறுகிற மனசு. தகிக்கும் கண்ணோடு 'விருட்'டென்று நிமிர்ந்து, முணுமுணுப்புகளைப் பார்த்தான். ரோஷப்பட்ட அக்கினிப் பார்வை.

'கணேசா... வாயை மூடு. நாவைச் சுழற்றிவிடாதே. தீயை எறிந்துவிடாதே... பொறு மனமே... பிழைப்பு முக்கியம். சண்டைபோட்டால், கேவலம். தலைகுனிவு. மெமோ வரும்... ஓர் அற்ப ஆபீஸரிடம் தலை சொறியணும். என்னத்துக்கு...?'

உள்மனசைச் சுண்டுகிற லகான். திமிறுகிற மனசை நிறுத்துகிற லௌகீக மூக்கணாங்கயிறு. மனசின் தீக் கங்குகளை பல்லைக் கடித்து விழுங்கினான். பிரயத்தன சகிப்பு.

சதைத்திரட்சி முறுக்கிக்கொண்ட மாதிரி... நெருக்கியடித்துத் திணறிய ஜனம் சற்றே வழிவிட... பெரிய பெரிய தூக்குப் பைகள் ஏறிற்று. ஸீட்டுக்கடியில் கால்களுக்கிடையில் சொருகப்பட்டன. தக்காளிப் பைகள், காய்கறிப் பைகள், ஸ்டேஷனரி சாமான்கள் உள்ள கனத்த கனத்த பைகள். அரைச்சாக்கு மூட்டைகள் ரெண்டு. கடலெண்ணெய் டின்கள் மூன்று. வாழைத் தார் ரெண்டு.

எல்லாம்... ஏற்றப்பட்டன. ஆளும் பேருமாக ஒத்தாசை செய்தனர். பயணிகளுக்கு இடைஞ்சல் இல்லாமல், ஆங்காங்கே ஸீட்டுக்கிடையில் கச்சிதமாயிற்று.

கடைக்காரரும் சதைகளுக்கிடையில் சதையாகச் சொருகிக் கொண்டார். முற்றலான இளைஞர். கறுத்த ஆள். சில்லறைக் கடைக்காரருக்குரிய யூனிஃபார்ம், அரைக் கைச்சட்டையும் மடித்துக் கட்டிய கைலியும். நனைந்த

சட்டை. வியர்வை முகத்தில் சாக்குத் தூசிகள் அப்பி யிருந்தன. கனத்த சுமைகளை ஓடி ஓடிச் சுமந்த களைப்பு. மூச்சிரைப்பு.

சாலையின் வாகன நெருக்கடிகளுக்கு மத்தியில், பஸ் ஊடுருவி வேகமெடுத்தது.

கணேசன் வேகவேகமாக டிக்கெட் அடித்தான். வாங்கிய தாள்கள் நீள்மடிப்பாக விரலிடுக்கில். சில்லறை களின் கனத்தில் தோல்பை. இவனுக்குள்ளும் வியர்வை நசநசப்பு. மனப்பரபரப்பு. 'துட்டை விட்டுவிடக் கூடாதே' என்கிற எச்சரிக்கை உணர்வு.

இத்தனைக்கும் மத்தியில் இவன் பார்வை அடிக்கடி தாவுகிறது, கடைக்காரன் முகத்துக்கு.

புதிய முகம். இந்த லைனுக்குப் புதுசு. அதுமட்டு மல்ல...

முகத்தில் ஒரு படிப்புக் களை. கண்ணில் ஒரு வித்தியாசம். ஓர் அறிவுக் களை. கடைக்காரருக்குரிய தல்லாத வேற்று முகம். வேற்றுக் களை.

அந்த வித்தியாசம் இவனுள் சுண்டியது. 'யாரிது? நம்மாள்னா... யாரு—'

டிக்கெட் அடித்துக்கொண்டே, கிட்டத்தில் போனான்.

இருபது ரூபாயை நீட்டுகிற கடைக்காரர். உதட்டில் ஒரு மென்னகையின் ஒளி. அறிமுகமாகிக் கொள்ள முனைகிற நயப்பாங்கான ஒரு புன்சிரிப்பு.

"எட்டு லக்கேஜ். ஒரு டிக்கெட்."

"எங்க?"

"ஆலங்கொளம்."

"நீங்க புதுசா...? இப்பத்தான் கடை வெச்சிருக்கீகளா?"

"இல்லே... கடை பழசு. எங்கண்ணாச்சிதான் வாடிக்கையா சரக்கு பர்ச்சேஸ் பண்ண வருவாரு. நான் கடையிலே மட்டும்தான் இருப்பேன்."

"இன்னிக்கு மட்டும் நீங்க வந்தீங்களா?"

"ஆமா..."

பேசிக்கொண்டே இன்வாய்ஸ் எழுத முனைகிற கணேசன். ஆயினும், உள்ளுக்குள் ஒரு நமைச்சல். மன நச்சரிப்பு. மர்மமான ஆர்வக் குறுகுறுப்பு.

"படிச்சிருக்கீகளா?"

"ம்..."

"ப்ளஸ் டூவா?"

மெல்லிசான புன்னகை, கடைக்காரர் உதட்டில்.

"எம்.எஸ்ஸி. கெமிஸ்ட்ரி."

கணேசனுக்குள் ஓர் உலுக்கல். சூறாவளிக்குள் சிக்கி மீண்ட அவரைக்கொடி போல வெலவெலத்தான். சகல நரம்புகளிலும் அதிர்வின் பரவல்.

"எம். எஸ்ஸி—யா?"— மனஅதிர்வில் நடுங்கிய குரல்.

"ம்..."

"எம்.எஸ்ஸி. முடிச்சுட்டா பலசரக்குக் கடை நடத்துறீக?"

*"வேறவழி?"*

*"ஜாப்புக்கு ட்ரை பண்ணலயா?"*

*"ம்ள்ச்சூ... ஜாப் வாங்கணும்னா, ஒரு லட்சம் வேண்டியிருக்கு. குடுக்க மனசில்லே. லஞ்சம் குடுத்து வேலை வாங்கிப் பெருமையடையுறதைவிட... கடையிலே ஒழைக்குறது கௌரவம்னு தோணுச்சு... அதான்"— உதடுகள் அதிராத பேச்சு. அத்தனை மென்மை.*

*ரசாயனச் சலவைக்குள்ளான நிலையில்... கணேச மனசு.*

*அந்தக் கறுத்த முகத்தில் ஓர் ஒளி. அந்த ஒளியில் தன் உணர்வை— சுபாவத்தை— தன்னையே பார்க்கிற போது...*

**அ**ப்புறம்—

*பலிகொண்ட சமூகத்தின் மீதான வன்மம் ஆழத்தில் உறைந்தது. ஆழ்ந்து கிடந்தது.*

*இப்போதெல்லாம்—*

*திருவிழாக் கூட்டம் போல, ஜனக்கூட்டம் பஸ்ஸில் திமிலோகப்பட்டாலும்கூட... கணேசன் சிடுசிடுப்பதும் இல்லை; சிரித்த முகம் மாறுவதுமில்லை. அவன், அவனாகவே இருக்க முடிகிறது.*

**ஆனந்த விகடன், 27–12–1998**

**அந்த மாதத் தமிழ்ச் சிறுகதைகளிலேயே சிறந்த கதை என்ற "இலக்கியச் சிந்தனை" பரிசுபெற்ற கதை.**

# கிறுக்கு

**உ**ள்ளங்கையின் மையத்தில் கருமையான ஈரத் தூள். பேன் மாதிரியான சின்னச் சின்ன இணுக்குகள். மிச்சமிருந்த தூளைத் தட்டிவிட்டு, வெற்றுத்தாளை வீசியெறிந்தான் பூபாண்டி. வலதுகை விரல்களால் பதமாக நசுக்கினான். ஊதினான். சுத்தமான போயிலைத் தூளை விரல் நுனிகளால் கூட்டி, அள்ளி, கீழுதட்டை இழுத்து, உள்பக்கமாய் திணித்துக் கொண்டான், ரூபாய்த்தாளை மடித்து பர்ஸுக்குள் சொருகிக் கொண்ட மாதிரி.

அழுந்த மூடிக்கொண்ட அடி உதடு. கர்ப்பவதி வயிறு மாதிரி புடைத்திருந்தது. திருப்தியும், உல்லாசமுமாய் உள்ளங்கைகளை தட்டி உதறிக்கொண்டான்.

ஈருக்கும் உதட்டுக்கும் நடுவில் திணிக்கப்பட்ட போயிலைத்தூள். ஊறுகிற எச்சிலில் போயிலையின் லாகிரிவாசம், ‘சுரு, சுரு’வென்ற ருசி. கிறங்கடிக்கிற சுகமான உணர்வு. பரவசமான ஒரு காந்தல்.

“அடுத்த வேளை போயிலைத் தூளு இல்லே. வாங்கணும். எங்கே வாங்குறது? ஒருபய கூட கடை தெறக்கலே”

பூபாண்டிக்குள் ஒரு குடைச்சல். மண்டைக்குள் கருவண்டு புகுந்த மாதிரியான குடைச்சல். நிஜமாகவே ஒரு கடைகூட திறந்திருக்கவில்லை. சர்வநிசப்தமாக நகரம். சுத்தமான கடையடைப்பு. பயத்தில் புதைந்திருந்தது.

நகரமே அரண்டு போய் கிடக்கிறது. வெட்டும், குத்துமாக சாதிச்சண்டை. அறுபட்டு விழுந்த தாலிகள் நிறைய்ய. எல்லா நேரமும் எங்காவது வெடித்துக் கொண்டேயிருக்கிற பெட்ரோல் குண்டுகள். அலறியடித்துக் கொண்டு ஓடுகிற ஜனம். எல்லா மனிதர்கள் மனசிலும் கலவரப்பீதி. திகில். எந்நேரம், யார் தலை உருளுமோ? மனசைக் கவ்வுகிற கிலி.

அறுபது ஊர் ஜனம் அன்றாடம் வந்து போகிற பெரிய்ய சந்தை நகரம். வியாபார நகரம்.

இப்போது...

வெறும் நகரம். ஓர் ஈங்குஞ்சு கூட வராது. வர முடியவில்லை. வெறிச்சோடிப்போன மயான நகரம், வாகனங்களின் சத்தமேயில்லை. வாழ்க்கையின் இரைச்சலேயில்லை. காவல்துறை வேன்கள் மட்டுமே ரவுண்டடிக்கின்றன. பல மாவட்டத்து வேன்கள். அடி வயிற்றை கலக்குகிற அசுரப் பேயிரைச்சலாக அடிக்கடி விரைகிற தீயணைப்பு வண்டிகள்.

பூபாண்டி மண்டைக்குள் ‘கிண்ண்’ணென்றிருக் கிறது. கிறுக்கு பிடித்த மாதிரியிருக்கிறது. ‘கணேஷ்

*போயிலை இல்லாம இருக்க முடியாதே... எங்க வாங்குறது? ஹூம்... ஒரு வழியும் புரியலியே...!'*

*வெறிச்சோடிக் கிடக்கிற தெருவுக்குள் இறங்கினான். சின்னச் சின்னத் தெரு. சந்து பொந்துகளில் ஊடுருவி நகர்ந்தான். பூனை நடை. கள்ள நிதானம். ஒரு வீட்டுக் கதவை மெல்லத் தட்டினான்.*

*"யாரு?"*

*உள்ளிருந்து பதற்றமும், அதட்டலுமான குரல்கள்.*

*"நாந்தே...ன், பூபாண்டி."*

*திறந்து மூடிக் கொண்டகதவு. உள்ளே—*

*நீள அகலமாய் பெரிய ஹால். அது நிறைய உட்கார்ந்திருக்கிற ஆட்கள். தள்ளுமுள்ளான நெருக்கடி. இடமில்லாமல் நிற்கிறவர்கள்.*

*சாதிக் கூட்டம் ரகசியக் கூட்டமாக நடந்து கொண்டிருந்தது. போலீஸில் சிக்கியவர்களின் உறவுக்காரர்கள். சிக்காமல் மலைங்காட்டில் பதுங்கியிருப்பவர்களின் இரத்த பந்தங்கள். வெட்டுப்பட்டு செத்தவர்களின் சொந்தக் காரர்கள். சாதி ஜனம், மாமா மச்சினன்கள். கொடி பின்னிக்கிடக்கிற உறவுக்காரர்கள்.*

*அழுகையும், அங்கலாய்ப்புமாக மனிதர்கள். ஆத்திரமும், ஆவேசமுமாய் குமுறுகிற குரல்கள். உணர்ச்சிக் கலவையான பலவகைக் குரல்கள். உஷ்ண மூச்சுகளின் உரசல்கள். வீட்டின் உள்புறமே மூச்சு முட்டலாக இருந்தது. காரமும், வேகமுமான பேச்சுச் சத்தம். ஃபேன் காற்றுகூட வெப்பமாகத் தகித்தது.*

பூபாண்டியும் ஒரு மூலையில் ஜனநெருக்கடிக்குள் தன்னைச் செருகிக்கொண்டான். அங்கே நிலவிய சூழல், பூபாண்டி மனசை என்னவோ செய்தது. ஒரு பிசைவு. அடிவயிற்றில் ஒரு பகீர்.

ஆள் ஆளுக்குப் பேச்சு. காட்டுக் கூச்சல். கோபமும், சோகமுமான சீறல்கள். வாய்ச்சவடால்கள். நொறுங்கிச் சிதைந்த நொம்பலக் குரல்கள்.

மீசை நரைத்த ஒரு பெரியவர், பெரிய சத்தமாய் அதட்டுகிறார்.

"ஏலேய்... என்னலே ஆள்ஆளுக்கு வாய்ச் சத்தம்? சலசலன்னு... ஓலைப்பாயிலே நாயி ஒண்ணுக்கிருந்த மாதிரி. நிறுத்துங்கலே. ஆகவேண்டியதைப் பேசுங்க..."

"என்னத்தைப் பேச? பத்து உசுரைப் பறிகுடுத்துட்டு... பரிதவிச்சுப்போய் நிக்கோம். இந்த லட்சணத்துலே என்ன இருக்கு, பேச?"

"பதிலுக்கு எத்தனையை சாய்ச்சோம்? நாலுதானே? நாலேநாலுதான். அதுவும் ஏலமாட்டாத கெழடு கட்டைக. ஒறங்கிக்கிட்டிருந்த பெரிசுக. துள்ளித் திரியுற எளவட்டப் பய ஒருத்தனையாச்சும் சாய்ச்சிருக்கமா? இல்லே. ச்சேய்! வெக்கக்கேடு."

"இந்தமாதிரி பூட்டுன கதவுக்குள்ளே பம்மிக் கெடந்துக்கிட்டு, வெறும் பேச்சா பேசிக்கிட்டிருந்தா... எங்குட்டுக்கூடிச் சாய்க்க? எளவட்டப்பயகளை 'செட், செட்'டா பிரிச்சுவிட்டு, அருவாக்கம்பு ஆயுதங்களோட களத்துல எறக்கிவிட்டாத்தானே... காரியம் நடக்கும்? அடுத்த சாதிக்காரன் தலைக தரையில உருளும்?"

"கூப்புட்டா... வரணும்லே?"

"வர மாட்டாங்களாக்கும்?"

"நம்ப பயக இப்ப இப்ப, நனைஞ்ச வெறகாயிட்டாங்க. சூடுசொரணையை தொலைச்சிட்டாங்க. அந்தக் காலத்துலேயெல்லாம் இப்புடியா? கட்டிட்டு வாங்கடான்னா... வெட்டிட்டு வருவாங்க."

"அது உங்ககாலத்துலே."

சுய எள்ளலின் குரல். கொதித்த மனசின் நிற மாற்றம். குமுறலின் உள்பொதிந்த உணர்ச்சிக் கற்றை.

பெரியவர் ஆமோதித்தார். "ஆமா... நெசந்தான்" என்று சாந்தமாக எதிரொலித்தார். பூமியின் மையப் பகுதிபோல அவர் மன ஆழத்தில் எரிமலைத் தழல்.

"அந்த காலத்துலே நாங்க துடியா நின்னோம். என்னையே எடுத்துக்கோயேன். ஒல்லியாத்தான் இருப்பேன். நெத்திலிக் கருவாடு மாதிரி. ஆனா... ஏஞ்சத்துக்கு மூணு தலைகளை வெட்டிச் சாய்ச்சிருக்கேன், அறுபத்தஞ்சி கலவரத்துலே. நாலு வைக்கப்படப்புகளை தீ வைச்சு சாம்பலாக்குனேன். ஒத்தையாளாப் போய், மூணு குறுக்கம் வாழைத் தோப்பை ஒண்ணு விடாம வெட்டிச் சாய்ச்சி சீரழிச்சேன்.... இப்ப இருக்குற எளவட்டப் பயலுகளுக்கு இதை நெனைச்சுப்பாக்கவாச்சும் தெம்பிருக்கா?"

பெரியவர் கண்ணில் அந்தக்காலம். முகத்தில் பெருமித ததும்பல். கன்னக் கதுப்பின் துடிப்பில் அந்த ஏக்கம்.

"நாமட்டுமில்லே. அப்ப நம்ம சாதிப்பயக எல்லாருமே வீரமாயிருந்தாங்க. வீமன் கணக்கா ஓங்குதாங்கா....

நல்ல தாட்டியமாயிருப்பாங்க. கம்மஞ்சோறும், காணப் பயத்துத் தொவையலும் தின்னுட்டு, சூடு சொரணையோட இருப்பாங்க. சிங்கம்போல நிமிந்து நடப்பாங்க. முறுக்கி விட்ட மீசையும், நெத்திமட்டத்துக் கம்புமா சூரிக்கத்தியோட களத்துல எறங்கிட்டா... ரெண்டு தலையாச்சும் உருட்டாம வீடு திரும்பமாட்டாங்க. இரத்தக் கவுச்சியோடதான் வாசப் படியை மிதிப்பான். கெண்டைக்கால் ரோமத்துக்குச் சமானம்தான்... உசுருங்குறது"

பூபாண்டிக்குள் பெரியவரின் ஆவி இறங்குகிற மாதிரி— நரம்புகளில் பரவிப் படர்கிற மாதிரியோர்— உணர்வுத் தினவு. இரத்த நாளங்களில் ஓடிப் பரவுகிற வெப்பம். தகிப்பு.

பெரியவரின் கனவு தேங்கிய உதடுகளையே பார்த்தான். வாழ்ந்து கெட்ட சோகத்தைச் சுமக்கிற வெள்ளைமீசை, இப்போதைய அவலத்தில் சிறுமைப்பட்டு நொந்துபோன முதிய கண்கள். அவர்மீதே பூபாண்டியின் பார்வை நங்கூரம்.

"இந்த நாள்லே எவன்கிட்டேயிருக்கு, அந்தத் தைரியம்? இப்ப இப்ப நம்ம சாதிப்பயக 'ஏவாரம், தொழில்'னு வசதியான எடத்துலே உக்காந்துட்டாங்க. படிப்பு, உத்தியோகம், பதவின்னு வெள்ளையும் சொள்ளையுமாயிட்டாங்க. நாலு சில்லறை கைகள்லே சேந்துருச்சு. சொத்து சொகம்னு வந்துட்டா... கோழைத் தனமும் வந்துரும்லே? உள்ளதை உரியதை காப்பாத்திக் கிடணும்னு ஆசை வந்துரும்லே? அருவாக்கம்புகளைப் பாத்தாலே... 'தருக், தருக்'குன்னு கழியுற பயம் வந்துரும்லே? சாதி உணர்ச்சி போயிரும்லே?"

"போச்சு. ரோஷம் மானம் எல்லாமே செத்துப் போச்சு"

"அதனாலேதா... பத்து உசுரைப் பறிகுடுத்துட்டு பம்மிப்போய் கெடக்கோம்? நாயை வெரட்டுற மாதிரி... நம்மளை ஓடவிட்டு ஓடவிட்டு வெட்டிச் சாய்க்கான்."

பெரியவரின் குரலில் கசிந்த துயர உணர்ச்சி. தொண்டை கரகரத்து... கலங்கிய கண்ணின் ஈர மின்னல். மீசைக்கு அடியில் சின்ன உதட்டில் மெல்லிய சோகத் துடிப்பு.

பூபாண்டிக்குள் பற்றிக்கொண்ட தீ, நெஞ்சின் மூலைமுடுக்கிலெல்லாம் 'திகுதிகு'வென்று எரிந்த தீ. அவனை நெட்டி நெட்டித் தள்ளுகிற மனத் தீ. 'ஏதாச்சும் செய்... என்னமாச்சும் செய்... எவனையாச்சும் ஒருத்தனைப் போட்டுத்தள்ளு... குத்தி மலர்த்து' என்று அவனுள் உந்தித் தள்ளுகிற உணர்வுத் தீ. உணர்வை, வெறியாக நிறம் மாற்றுகிற இரத்தத் தீ.

அடைத்த ஜன்னல்கள். ட்யூப் லைட்டின் வெள்ளை வெளிச்சம். வந்து போகாத காற்றின் இறுக்கம். சாதி ஜனம் விட்ட உணர்வுப் பெருமூச்சுகள். கொதிக்கும் மனக் கண்ணீராக அறையெங்கும் பரவித் தகிக்கிற வெக்கை.

"சரி சரி... பழசையே எம்புட்டு நேரத்துக்கு மென்னுக்கிட்டு இருக்கப் போறீக? ஆகுற ஜோலியைப் பாருங்க..."

பொறுமை சிதைந்த உணர்வின் குரல்.

"என்ன ஜோலி?"

"இன்னின்னாரு ஒரு செட்டுன்னு ரெண்டு இளவட்ட செட்டுகளைப் பிரிச்சு விடுங்க... இன்னிக்கே களத்துலே எறங்கட்டும். ரவ்வோட ரவ்வா... நாலு தலைகளைத் தீர்த்துக் கட்டட்டும்."

*பெயர் பெயராகச் சொல்லி வருகிற பெரியவர்.*

*பூபாண்டிக்குள் பரபரப்பு. ஆவல் பறப்பு.*

*'பூபாண்டி பெயரையும் சொல்லப் போகிறார்' என்கிற உணர்வுத் துடிப்பு. ஆர்வத் தீவிரம்.*

*இவன் பெயரை கடைசி வரைக்கும் சொல்லவே யில்லை.*

*ஏமாற்றம், கோபமாக நிறம் மாறியது, பூபாண்டிக்குள்.*

*'பூபாண்டின்னா'... ஆம்பளையில்லியா? எளவட்ட மில்லியா? செட்டுல சேத்துவிட்டு எறக்கிவிடுற அளவுக்கு இவனைப் பொருட்படுத்தலியா? பொண்ணப் பயன்னு நெனைச்சிட்டாகளா?'*

*அவனுக்குள் பொத்துக்கொண்டு பீறிட்ட ரோஷாக்னி. புறக்கணிக்கப்பட்ட அவமானத்தில் கொதித்துப் போன மனசின் நினைவுத் தீ.*

*அரவமில்லாமல் எழுந்தான். ஆட்களை மிதித்து விடாமல் நிதான எச்சரிக்கையோடு தாண்டித் தாண்டி வந்தான். உடைபடாத திராவகப் பல்பாக... அபாய நிலையில், அவன் மனசு. கதவைத் திறந்தான்.*

*"யாருடா... அது? பூபாண்டியா?"*

*"ம்"*

"எங்கடா போறே?"

கழுத்தை மட்டும் வெளியே நீட்டி எச்சிலைத் துப்பினான். காந்தலான கார எச்சில். வாயின் உட்பகுதி முழுதும் ஒரு நமைச்சல். சுகமான நமைச்சல்.

மீண்டும் பெரியவரின் அதட்டல்.

"காதுல வுழுதா? எங்கடா போற?"

"சும்மாதான்"

"இடுப்புல ஆயுதம் வைச்சுக்க. ஜாக்கிரதையா போ."

"ம்"

மனசுக்குள் திருகல் முருகலான நினைவுகள். வீட்டுக்குள் முண்டியடித்து, ஒட்டி உரசி உட்கார்ந்திருக்கும் மொத்தக் கூட்டத்தையும் எகத்தாளமாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு, தெருவில் இறங்குகிற பூபாண்டி.

அவனுள் ஒரு வன்மம். கத்தி தீட்டப்பட்ட கூர்மை யான வன்ம வெறி.

'பூபாண்டின்னா... கொலைச்சுக்கிட்டே திரியுற நாயி இல்லே. கடிச்சுக் கொதறுற நாய்ங்குறது நாளைக்குத் தெரியும்... பாருங்க'

அவனுள் ஜ்வாலைச் சுடர்கள். தீ நாக்குகளின் அலைவுகள். இரை தேடித் திரியும் ஓநாயின் தீ நாக்கு. வெறிச்சோடிக் கிடக்கிற தெரு. ஜன சந்தடியின் உயிர்ப்பற்ற சவச்சாலை. காவல்துறை வேன்களின் உலாவல் மட்டும். காவலர்கள் பூட்ஸின் 'நெறுக், நெறுக்'. அச்சுறுத்தலான 'நெறுக், நெறுக்'. தூக்கி மாட்டிய துப்பாக்கிகளின் பயமுறுத்தல். கிலியூட்டுகிற அசுரத் தோற்றம்.

பயப்படாமல் வன்மத்துடன் பூபாண்டி. குறுகல் குறுகலான சந்துகளில் ஊடுருவி நழுவினான். ஜன்னல் கதவுகள்கூடச் சாத்தப்பட்டுக் கிடந்தன. சந்துகளில்கூட தன் நகங்களைப் பதித்திருந்த கலவர பயம்.

அடி உதடு நமநமத்தது. மனசுக்குள் ஒரு வெறுமை யான பசி உணர்வு. மண்டைக்குள் குடைச்சலெடுக்கிற ஒரு தாகம். ‘கணேஷ் போயிலை இருந்தா... நல்லது. கொஞ்சம் நசுக்கி... உள்ளே திணிச்சா... சுறுசுறுப்பா இருக்கும்...’

கண்ணுக்குள்ளேயே சுற்றும் ஈயைப்போல, அச்சலாத்தியான மன நச்சரிப்பு.

அதைத் தள்ளினான், தூர. “ச்சேய்... நாயே! ஒரு புத்தியோட இரு... இரைமேலேயே கண்ணை வை.”

அவனை அவனே அதட்டிக்கொண்டான்.

அவன் மனசில் அலைவு. இரை தேடுகிற தாக அலைவு. தாகத் தவிப்பு. தீவிர யோசிப்பு.

“ஆ...ங். அந்தப் பயலை போட்டுத் தள்ளிர வேண்டியதுதான்.”

மில்வேலை செய்கிற இளவட்டப் பயல், துடியான பயல். தராதரம் பார்க்காமல் எல்லோரையும் தடாலடியாகப் பேசி எகிறுவான். பஸ்ஸில் ஏறினால்... ஏகச் சலம்பல். கொஞ்சம் லட்சணமான பெண்கள் ஸ்டாண்டிங்கில் வந்தால்... அங்குதான் போய் ஒட்டிக்கொண்டு உரசிக் கொண்டு நிற்பான். அலட்டல் பண்ணுவான். பார்த்தாலே... நமக்கு பற்றிக்கொண்டு வரும். சகிக்கவே முடியாது. அந்த நாயைப் போட்டுத் தள்ளிடவேண்டியதுதான். நாலை

அஞ்சாக்கி... நம்ம சாதி மானத்தையும் காப்பாத்திரலாம். ஒரு நாய்ப் பயலையும் ஒய்ச்சிரலாம்."

குறி கிடைத்துவிட்ட குஷியில் கும்மாளம் போடுகிற வன்மம். சுறுசுறுவென்று அலைந்த நினைவு. இரை கிடைத்த வேகத்தில்... பாய்ச்சலுக்குத் திட்டம் போடுகிற பரபரப்பில் மனசு. மூர்க்கமாகிப்போன உணர்வு. உசுப்பி விடப்பட்டு, சூடும் போடப்பட்ட ஒரு வேங்கையின் வெறி. தன் உயிர்முழுவதையும் கண்ணில் குவித்து... அந்தக் கட்டட மறைவின் இருட்டில் பதுங்கியிருந்தான், பூபாண்டி.

மில்லில் நைட்ஷிப்ட் முடிந்து, இந்தத் தார்ச்சாலை யில்தான் தொழிலாளர்கள் வருவார்கள். நடந்தும், சைக்கிளிலுமாய் பேசிக்கொண்டே வருவார்கள், 'சள சள'வென்று. மஞ்சள் நதியாகப் படுத்துக் கிடக்கிற தார்ச்சாலை, சோடியம் விளக்கு வெளிச்சத்தில். அதில் வடிவங்களாக நகர்வார்கள். அதில் அவன் மட்டும்...

சாலையிலிருந்து விலகி... சந்துக்குள் நுழைவான். இருட்டுச் சந்து. கலவரநேரம். ஆளரவமற்ற குறுகலான சந்து. நல்ல தருணம். வேட்டைக்கான சமயம். உயிர் வேட்டைக்கு உரிய கணம்.

ஓடிப்போய்... பின்பக்கமாய் தழுவி, இடதுகையால் கழுத்தைச் சுற்றி, ஒரு கவ்வு கவ்வி... இறுக்கிய வேகத்தில் வலதுகைச் சூரிக்கத்தியால் ஓங்கி... ஒரு சொருகு... உருவிக்கொண்டு, 'சதக், சதக்'கென்று ரெண்டு குத்து.

விம்மி விடைக்கிற திரேகம் உயிர்ச்சுடர் அணைந்து துவண்டு, சரிந்து... கையெல்லாம் இரத்த வெதுவெதுப்பின் நசநசப்பு, உயிரின் இறுதி ஈரம். அம்புட்டுத்தான் நாலு அஞ்சாகிவிடும். விட்டது.

உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடிவந்தான், வெறிவேக ஓட்டம். சின்னச் சின்ன சந்துகளில் சுண்டெலியாக ஓடிவந்தான். மனசுக்குள் பெருமிதம். காரியம் முடிந்த சந்தோஷம். ஒருத்தனை, ஓர் இளவட்டத்தை 'போட்டுத் தள்ளி'ட்ட உல்லாசம்.

இரத்தத்தில் நனைந்த ஈரச் சொதசொதப்பான துணிமணி. எல்லாவற்றையும் சுழற்றி மூலையில் போட்டுவிட்டு குளித்தான். மாற்று உடையில் புகுந்த வேகத்தில்... இரத்த ஈரத்துணியில் சீமைத் தண்ணீரை (மண்ணெண்ணெய்) ஊற்றி, தீக்குச்சியை உரசிப்போட்டான். சாம்பலாயிற்று. சந்தோஷமாய் படுத்தான். உறக்கமே வரவில்லை. மனசின் ததும்பல். பெருமிதப் பூரிப்பு.

நாளைக்கு...

எல்லோரும் இவனது 'செயலை'ப் பற்றித்தான் பேசுவார்கள். ஊர்முழுக்க. நாளிதழ்களில்கூட நாளைக்கு இந்தச் 'செயல்'தான்.

"மேலும் ஒரு கொலை"

பரவும் கலவரம். கொட்டை எழுத்தில் செய்திகள். நினைக்க நினைக்க மனசுகிடந்து கூத்தாடியது. கும்மாளம் போட்டது.

மறுநாள்.

தெருமுழுக்க ஒரேபேச்சு. கிலியும், திகிலுமான பேச்சு.

"ராத்திரியிலேயும் ஒரு கொலை வுழுந்துருச்சு"

"எங்கனே?"

*"மில்லுகிட்டே..."*

*"யாரு...? இவனுகளா, அவனுகளா?"*

*"ரெண்டுமேயில்லை..."*

*"பெறவு?"*

*"சாதிக் கலவரத்துக்குச் சம்பந்தமேயில்லாத வேற சாதிக்காரன். கலவரத்தைச் சாக்கா வைச்சு, எவனோ சொந்தப் பகையை தீத்துக்கிட்டான்."*

*"செத்தது யாரு?"*

*"மில்லுகிட்டே சைக்கிள்லே டீ வைச்சு விக்கிறவன். பாவம், ஏழைப்பட்டவன். கொஞ்ச வயசுக்காரன். எவனோ போட்டு மலர்த்திட்டான்."*

*"அடக்கொடுமையே..."*

*பூபாண்டிக்குள் கத்தி சொருகின மாதிரியிருந்தது. 'வேறு சாதிக்காரனா?'*

*அதிர்ச்சியில் வெலவெலத்துப் போனான். பெரு மிதப் பூரிப்பும், ததும்பலும் இருந்த இடம் தெரியாமல் மாயமாகி, மனசில் ஒரு பாறையின் பாரம். சுமையின் அழுத்தம்.*

*கிறுக்கு பிடித்தவனைப்போல வெறி வேகமாக ஓடினான். போலீஸ் மயம். அதையும் மீறிக்கொண்டு வேடிக்கை பார்க்க முண்டியடிக்கிற பொதுஜனம்.*

*"அடடா... பாவமே" என்று பரிதாபப்படுகிற ஈரமனிதர்கள்.*

ஈர நெஞ்சின் கொதிப்பு, சாபமாக வெளிப்பட்டது.

"எந்தப் பாவிப்பய செய்ஞ்சானோ... இந்தப் பாதகத்தை? அவன் வெளங்குவானா? நாசமாய்ப் போக"

செத்துக்கிடக்கிற டீக்காரன். போலீஸ் அதட்டி மிரட்டி உருவாக்கியிருந்த வெட்டவெளி. அதன் மூலை யில் கிழிந்த சேலையும், காய்ந்த தலையுமாய் இறந்தவனின் மனைவி. தலையிலும், மார்பிலும் 'மடேர், மடே'ரென்று அடித்துக்கொண்டு அழுது கதறுகிற பரிதாபம்.

"ம்மா... ம்மா... ம்மா..." என்று அவள் தோளைப் பிடித்துக்கொண்டு அழுது சிணுங்குகிற பத்துவயதுச் சிறுவன்.

அழுது அரற்றுகிற அந்தப் பெண். கண்ணீரும் கம்பலையுமாய் கதறுகிற சோகம்.

"ஐயய்யோ... உங்க உசுரைப் பறிச்ச பாவி யாரு? அவன் நாசமாய்ப் போக... 'நா படிக்க முடியாமப் போச்சு. டீ வித்தாச்சும் எம்புள்ளைய பெரிய படிப்பு படிக்க வைக்கணும்'னு வாய்க்குவாய் சொல்லுவீகளே, பாதியிலே போய்ட்டீகளே... நா என்ன செய்வே? ஏது செய்வே? எம்புள்ளையை எப்படி வளர்ப்பேன்?"

அவளது ஒப்பாரியின் ஓலம். மனசின் உள்நரம்பு களை கொத்தாகப் பற்றிச் சுண்டியிழுக்கிற அவலக் கதறல்.

பூபாண்டிக்கு காலடித் தரை உருவிய மாதிரி யிருந்தது. துப்பாமல், போயிலை எச்சிலை விழுங்கிவிட்ட மாதிரி கிறுகிறுப்பாக இருந்தது. நிற்க முடியவில்லை. ஓடினான். பதறியடித்துக்கொண்டு ஓடுகிற பதைப்பு.

அவனைக் கண்டு அவனே பயந்து, அலறாமல் ஓடிய ஓட்டம்.

ஒரு வருஷமாகிவிட்டது.

கலவரம், நகரத்தின் காயத் தழும்பாகி விட்டது. யார் யாரோ... எப்படி எப்படியோ... ஏதேதோ வழக்குகளில் சிக்கிச் சீரழிய... சாதிக்கூட்டம் கண்டு கொள்ளாததைப் போலவே, வழக்கும் இவனைப் பொருட்படுத்தாமல் விட்டுவிட்டது. ஆனால்...

பூபாண்டி, பூபாண்டியை விடுவதாக இல்லை. ரவ்வும் பகலுமாய் மன உளைச்சல். முள்முள்ளாகக் குத்துகிற நினைவுகள். சூரிக்கத்தியின் குத்தல்கள். பற்றி யெரிகிற இரத்தத் துளிகள்.

தலைவிரிகோலமாய் அந்தப் பெண். கண்ணீர் வழிகிற பிஞ்சுக் கன்னத்தோடு அந்தச் சிறுவன். அழிக்க முடியாத பிம்பம். மனசை வதைக்கிற காட்சி. தூங்க விடாமல் தொல்லை பண்ணுகிற மனசாட்சி.

நாள் ஒன்றுக்கு மூன்று பாக்கெட் கணேஷ் போயிலை என்பது, முப்பது பாக்கெட்டாயிற்று. மாறி மாறித் திணித்தான். துப்ப, துப்ப நினைத்தான். போயிலை எச்சிலின் லாகிரிக் கிறுகிறுப்பிலேயே மனசு தூங்க... மனசு கிறுகிறுக்க...

நாளும் பொழுதும் நகர்ந்தன.

இவனுக்குள்ளும் ‘அது’ காயத் தழும்பாகிவிட்டது.

சைக்கிள் பஞ்சராகிவிட்டது. பேக் வீல். உருட்டிக் கொண்டே வந்தான். உச்சிவெயில். உச்சி மண்டை தகித்தது.

வேர்வை வரிவரியாக நெளிந்து இறங்கியது. பனியனும் சட்டையும் 'தொப், தொப்'பென்று நனைந்து விட்டது.

அதோ ஒரு சைக்கிள் கடை. பஞ்ச்சர் பார்த்து விடலாம். ஆறுதல்பட்ட பூபாண்டி மனசு.

அந்தக் கடையில் சைக்கிளை நிறுத்தி, ஸ்டாண்ட் போட்டு கிளிப்பை தட்டிவிட்டு, கடைத் தாழ்வார நிழலில் ஒதுங்கி 'உஸ்ஸ்'ஸென்று உட்காரப் போனான்.

கடைக்குள் ஒரு பையனின் கதறல். 'டபார், டபார்' என்று செவிட்டில் விழுகிற அறை. தீக்கங்காக விழுந்த அடிகள். கடைக்காரன் அடித்த அடியில், துள்ளியடித்து கதறியழுத பையனின் சத்தம். பழகிய சத்தம். மனசுக்குள் உரசுகிற சத்தம்.

'யாரது?' பூபாண்டி உற்றுப் பார்த்தான்.

“வண்டியைக்கூடத் தொடைக்காம... எங்கடா போயிருந்த நாயி? படுவா... ஒழுங்கா வேலை பழகப்பாரு. இல்லே... தொலியை உரிச்சிருவேன். உரிச்சு”

நாக்கை வளைத்துக் கடித்துக்கொண்டு, இன்னும் அதட்டுகிற கடைக்காரர்.

வாங்கிய அடியோடு அழுதுகொண்டே கரித் துணியை கையிலெடுத்து சைக்கிளைத் துடைக்கப் போகிற சிறுவன். அவனது டவுசரும் சட்டையும் கூட கரித் துணிதான்.

பூபாண்டிக்குப் பாவமாக இருந்தான். கருணை பொங்க பார்த்தான், அந்தச் சிறுவனை.

இவனுக்குள் அடிவயிற்றில் ஒரு பிசைவு.

யார் இந்தச் சிறுவன்?

"நா படிக்க முடியாம போச்சு, டீ வித்தாச்சும் எம் புள்ளையை பெரிய படிப்பு படிக்க வைக்கணும்னு வாய்க்குவாய் சொல்லுவீகளே, பாதியிலே போய்ட்டீகளே..."

அழுது கதறிய அம்மாவின் தோளைப் பற்றிக் கொண்டு சிணுங்கிக் கொண்டிருந்தானே... அந்தச் சிறுவனா?

அந்தச் சிறுவனா, இந்தக் கடையில்?

அடி வாங்கி, அழுதுகொண்டு, கிழிந்த கரித்துணியா...

பூபாண்டியின் காயத் தழும்பில் 'சதக்'கென்று பாய்ந்த ஒரு சூரிக்கத்தி. அடிவயிற்றில் புதைந்து, உருவுகிற கத்தி.

"ஐயய்யோ... உங்க உசுரைப் பறிச்ச பாவி... யாரு?"

மனசின் ஆழத்தில் அந்தப் பெண்ணின் அவலக் கதறல், உயிரின் நரம்புகளை உலுக்குகிற ஓலம். நினைவின் ஆணிவேரையே அறுக்கிற அலறல்.

'என்னத்துக்குக் கொன்னேன்... நா? யாரைக் கொன்னேன்? டீக்காரனையா? அவனை மட்டும்தானா? அவன் ஒருத்தனை மட்டுமா?...'

"யாரு... யாரு... யாரு..."

உள்மனசுக்குள் தலைவிரி கோலமாக அழுகிற கேள்வி. விஸ்வரூபமாய் எழுகிற கண்ணீர்த் துளி. படிப்பை விட்டு, சைக்கிள் கடையில் அடிவாங்கிக் கேவுகிற இந்தச் சிறு பூ.

*"யாரு... யாரு... யாரு...?"*

*இந்தக் கேள்வியின் ஓங்காரத்தில், பிரபஞ்சத்தின் சகல ஒலிகளும் அமிழ்ந்து மூழ்கிப் போய்விட...*

*ஓங்காரமே அவனைப் பிடித்து உலுக்க...*

*"நா இல்லே... நா இல்லே... நா இல்லே..." என்று பீதியும், கிலியுமாகக் கதறிக்கொண்டே, தெருவில் கதிகலங்க ஓடினான் பூபாண்டி. ஒரே சொல்லையே மாறி மாறி உச்சரித்தான்.*

*ரவ்வும், பகலும், உறங்கும்போதும், விழித்திருக்கும் போதும், செத்து மடிகிற வரை அவன் உச்சரித்துக் கொண்டிருந்த ஒரே சொல், அதுதான் "நா இல்லே... நா இல்லே... நா இல்லே..."*

**இந்தியா டுடே, மார்ச் 24– 1999**

# தீண்டாதே!

"யம்மோ...வ், சோறு போ...டுங்கம்மா..." என்று ராகத்துடன் மாடத்தி முற்றத்தில் நின்று கத்திய சத்தம் கேட்டவுடன், ரெங்கலட்சுமிக்கு சுள்ளென்று பத்திக் கொண்டு வந்தது.

ஏலேய், துணி கெடக்கு... போய் வண்ணாத்தியைக் கூட்டிட்டு வாடா என்று நேற்று மூத்த பயல் ராமானுஜத்தை அனுப்பி வைத்தாள் ரெங்கலட்சுமி.

அடிபட்ட பந்தின் வேகத்தில் திரும்ப வந்தான்.

"வரமாட்டாளாம்மா...தொறைக்குப் போறாளாம்."

ரெங்கலட்சுமிக்கு மிளகாயை அரைத்து அப்பிய மாதிரியிருந்தது. அடிமனசில் தீப்பற்றிக் கொண்டது.

"நெதம்... நெதம்... நேரம் தப்பாம சோறு எடுக்கவர முடியுது. வருசம் தப்பாம ரெண்டு தரம் தானியக் கூலி வாங்குறதுக்கு வரமுடியுது... அழுக்குத் துணி எடுக்க மட்டும் வரமுடியலியாக்கும்?"

இதெல்லாம்... நேற்று. இப்பவும் அந்த வெளமும் வேசடையும் சூடு குறையவில்லை, கொஞ்சமும்.

பருக்கைகளோடு வாசலுக்கு வந்தாள் ரெங்க லட்சுமி.

வாசலில் ரெங்கலட்சுமியைப் பார்த்ததும், கூழைப் பணிவோடு மாடத்தி, "என்னம்மா... அழுக்குத் துணிகளை எடுத்துப் போட்டுருக்கீகளா?"

இந்தப் பணிவும், குழைவும் ஈரச்சிலிர்ப்பாக அவளைத் தாக்கின. மனத்தீ தணிந்தாலும், அதன் புகை வெக்கை.

"பெறகு... நேத்து வரமாட்டேன்னு சொன்னீ யாம்லே?"

"வேலைப்பாடு அப்புடியம்மா. நீங்க பாத்து எங்கமேலே கோபப்படலாமாம்மா? நீங்க காலாலே தள்ளுற அழுக்கை, கையாலே அள்ளி எடுக்குற சாதி நாங்க. நீங்க போடுற சோத்துலேதான்... எங்க குடும்பமே கொடலை வளக்குது. வீட்லே கெடக்குற அழுக்கெல்லாம் மூலையிலே போட்டு வைங்கம்மா... சோத்துச் சட்டியை வீட்லே வைச்சிட்டு வந்து, எடுத்துட்டுப் போறேம்மா..."

"ஆட்டும்."

முள்குத்தலாக உறுத்திக் கொண்டிருந்த ஒரு குறை தீர்ந்துபோன மனநிம்மதி. சாந்தம். ரெங்கலட்சுமி அழுக்குத் துணிகளையெல்லாம் வாசல் படியையொட்டிய நடையில் போட்டாள். அப்போது,

வாசலில் ஏதோ அரவம். நிமிர்ந்து பார்த்தாள் ரெங்கலட்சுமி.

அயலூர் கிழவன். அழுக்கு வேட்டியும், கக்கத்தில் பம்மிய துண்டும் ரெங்கலட்சுமியைத் துணுக்குற செய்தது. 'துட்டி (இழவு) சொல்லி ஆள் வந்துருக்கோ...'

அவள் பயந்த மாதிரியே செய்தி. இழவு செய்திதான். அதுவும் ஆத்திர அவசரமாக ஓடவேண்டிய நெருக்கமான இழவு. போட்டது போட்டபடி ஓடவேண்டிய அவசரம்.

புஞ்சையிலிருக்கும் புருஷனுக்கு மட்டும் ஒரு பையன் மூலமாகத் தாக்கல் சொல்லிவிட்டு... உறவுக்கார சாதி ஜனத்தோடு சேர்ந்து, ஏழு மணி பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து விட்டாள்.

**ம**தியத்திற்குத்தான் அந்த விபத்து நிகழ்ந்தது. கண்மாய் உடைந்து வெள்ளப் பெருக்கு. கருஞ்சாம்பல் நிறத்து நீர் மூர்க்கம். பாறை முடிச்சுகள், வேலி மரங்கள் எல்லாம் முரட்டு நீர்ப்பரப்பில் காணாமல் போயிற்று.

காய்ந்த வேலி விறகுகள் கம்பங் கதிர்கள்... கூரை முகடுகள்... செத்த கோழிகள், நாய்கள்... மாடு கன்றுகள் எல்லாமே தாறுமாறாகப் புரட்டப்பட்டு வருகிற காட்டாற்று உக்கிரம். பார்த்த மனசுகள் நடுங்கும்.

அதிர்ச்சியும், ஆச்சரியமுமாய் ஓடி வருகிற ஜனம். நிமிசத்தில் ஊரையே துண்டித்து, தனித் தீவாக்கிவிட்ட பயங்கர திகிலில் உறைந்துபோன ஆட்கள். பீதியும், திகிலுமாகப் பதறிப் பதைக்கிற ஜனங்களோடு ராமானுஜமும்.

அழுகையில் விசும்புகிறான். விம்மி விம்மி யழுகிறான்.

'ஊருக்குப் போன அம்மா எப்படி ஊரு திரும்புவா? வெள்ளத்தைத் தாண்டி எப்படி வந்து சேருவா?'

“எம்மா... எம்மா... எம்மா...” என்று விசும்பி விசும்பி கண்ணைக் கசக்குகிற ராமானுஜன். சிணுங்கலாய் நீள்கிற அழுகை.

வெள்ளம் கணத்துக்குக் கணம் அதிகரிக்கிறது. நுரைக்கோடுகள் புதிய புதிய மண்தரையை நோக்கி விஸ்தரித்து முன்னேறுகின்றன...

இழவுக்குப் போன இடத்திலும் எப்படியோ தாக்கல் வந்து சேர்ந்து விட்டது. ‘ஆற்றில் வெள்ளம்’ என்று. ஊருக்குப் போக பாதையில்லை. ரெங்கலட்சுமிக்குள் ‘திக்க்’கென்றது.

புருஷனைப் பார்த்துச் சொல்லவில்லை. ராமானு ஜனைப் பார்க்கவில்லை. ஆத்திர அவசர யாத்திரையில் அவகாசமில்லை. சோறு குழம்பு ஒன்றும் சமைத்து வைக்கவில்லை. ராத்திரி சாப்பாட்டுக்கு ஏதாச்சும் வழி பண்ணணுமே... என்ன பண்றது? எப்படிப் பண்றது? இங்க இருந்துகிட்டு என்ன செய்ய...?

போய்த்தான் என்ன செய்ய? ஆத்து வெள்ளத்தை எப்படி நீந்திக் கடக்க? நடக்குற காரியமா?

இதெல்லாம் யோசிச்சிக்கிட்டு இங்கேயே மருகி நின்னா...

கூட வந்த யாருக்கும் ஊருக்குப் போகிற நினைப்பு இல்லை. இழவு முடிந்தபிறகும், இரவு தங்கி, சினிமா பார்க்கிற ஏற்பாடு! ம்ஹூம்... இந்த ஏற்பாடு நமக்கு ஒத்து வராது.

ஒரு குருட்டு தைரியத்தில் புறப்பட்டு விட்டாள் ரெங்கலட்சுமி.

'புருஷனைத் தவிக்கவிடக் கூடாதே... சின்னவன் ராமானுஜனை அலைபாய விடாம, உலை கொதிக்கப் போகணுமே' என்கிற பாச மூர்க்கமே ஒரு பயண வைராக்யமாக... பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து விட்டாள்.

பஸ்ஸில் உட்கார சீட் கிடைத்திருந்தது. சன்னலோரம். கார்த்திகை மாசத்து மழைகளில் குளித்த புதுப்பெண்களாக மரங்கள். நனைந்த கரிசல்காடு. சின்னச் சின்னக் குழிகளில்கூட சூரிய வெயில்பட்டுத் தெறிக்கும் நீர்ப் பெருக்கு. அவ்வப்போது சிணுங்குகிற மழை. ஊசிகளைக் கவிழ்த்துக் கொட்டிய மாதிரி மழைத்தூறல். மேகத்திலிருந்து சரிவாக இறங்குகிற நீர்க் கயிறுகள். காற்றை நடுங்க வைக்கிற ஈரக் கூதல்.

ரெங்கலட்சுமி ஒரு மனசாக இல்லை. 'எப்படியாச்சும் வீடு போய் விழுந்தாக வேண்டும், இந்தக் கட்டை' என்ற வெறியில் அவள் உயிர் துடித்தது.

பஸ்ஸுக்குள் மழைக்காலப் பகலிருட்டு. ஏழெட்டுப் பெண்கள் மட்டுமே இடமில்லாமல் நிற்கின்றனர். தனியார் பஸ். இளவயசு கண்டக்டர். வயசுக் கோளாறு. தேவையிருந்தும் இல்லாமலும் அந்தப் பெண்களைக் கடந்து போய் வருகிற பாவனை. இடித்து உரசுகிற அற்பசுகம். கட்டைச் சுவரில் உடம்பைத் தேய்க்கிற எருமைத் தோலின் தினவு.

கடுப்பும், காட்டமுமாக அவனையே பார்க்கிற ரெங்கலட்சுமி. அந்தச் சிவந்த பெண். லட்சணமான பெண். குடும்பப் பாங்கு. நடு வயசு. அவளை மிகுந்த வெறுப்பும், அசூயையுமாகப் பார்க்கிற ரெங்கலட்சுமி.

ஒரு தடவை கிணற்றில் தவறி விழுந்துவிட்ட நடுத்தெரு பார்வதி. நீச்சல் தெரியாமல், ரெண்டு தடவை

முங்கி முங்கி வந்து விட்டாள். மரண விளிம்பு. கிணறு முழுக்க சாவின் நிழல். ஊரே கிடந்து கதறியது.

ஒரு வாலிபப் பயல் துணிந்து விழுந்து காப்பாற்றி னான். பதற்றத்தில்— உயிர்ப்பயத்தில்— அந்த அந்நிய வாலிபனை கழுத்தைச் சேர்த்துக் கட்டிக் கொண்டாள். அப்பிக் கொண்டாள். அவனும் சிரமப்பட்டு இழுத்து, கட்டித் தழுவி, அரவணைத்து... தூக்கி தோளில் போட்டுக் கொண்டு, கயிற்றைப் பிடித்து மேலேறினான்.

ஆபத்துக்குப் பாவமில்லாமல் நடந்த அந்தச் சம்பவம். பார்வதி காட்டு வேலைக்கு வருகிறபோதெல்லாம்... சக கூலிக்காரப் பெண்கள் பார்வதியை கேலி பண்ணி, கிண்டல் பண்ணி, பாடாய் படுத்துவார்கள்.

"அவன் எங்கன தொட்டான்...", "எப்படித் தொட்டான்...", "கசக்கிப் பொரட்டிட்டானோ...", "ஒனக்கு எப்புடி இருந்துச்சு...", "நனைஞ்ச துணியா போய் ஒட்டிக் கிட்டியே...", "ஒனக்கும் சொகமாத்தான் இருந்துச்சா?"

ஆள் ஆளுக்கு கேள்வி மேல் கேள்வியாகக் குடையக் குடைய... பார்வதி புழுவாக நெளிவாள். கூசிக் குன்றிப் போவாள். 'இதைவிட அன்னைக்கே செத்துத் தொலைஞ் சிருக்கலாமே' என்று எண்ணி எண்ணி மருகுவாள். மனம் கலங்கி, கண் கசிவாள்.

"வெள்ளம், ஓடுபாலம் தெரியாம ஓடுதாம்... ஆளே எறங்க முடியாதாம். அம்புட்டுத்தான். பஸ் போகாது. இங்கயே எல்லாரும் எறங்கிக்கோங்க."

கண்டக்டரின் சாதாரணக் குரல், அவளுக்குள் அபாயச்சங்காக ஒலிக்கிறது. பதற்றத்தில் திக்கென்கிற

மனசு. அரை மனசாக இறங்குகிறாள். சாயங்காலச் சூரியனை விழுங்கிக்கொண்ட மழை மேகங்கள்.

'வேகு, வேகு' என்று நடந்தாள். இருட்டுவதற்குள் ஆற்றுக்குப் போய்விட்டால்... தண்ணீர்ப் போக்கு ஒரு கட்டுக்குள் இருந்தால்... இறங்கிப் போய்விடலாம். நாம் பார்க்காத வெள்ளமா? சின்னப் பிள்ளையிலிருந்து விவசாய வேலைக்காக ஆற்றைக் கடந்து, சன்னத் தடவைகளா போய் வந்திருக்கிறாள்? வெள்ளம் போகாத வெறும் காலத்திலும் போயிருக்கிறாள். வெவ்வேறு அளவுகளில் வெள்ளம் போன மழைக்காலங்களிலும் போய் வந்திருக்கிறாள். நெஞ்சளவுத் தண்ணீர் என்றால் கூட, பயப்படாமல் இறங்கியிருக்கிறாள். தண்ணிப்பயம் இல்லை. ஆடு மேய்க்கிறவனுக்கு இருட்டுப்பயம் இல்லாத தைப் போலவே, கிராமத்து விவசாயப் பெண்களுக்கு வெள்ளப் பயமும் இருக்காது.

நினைத்ததைவிட நிலைமை ரொம்ப மோசமாக இருந்தது. ஆறு கொள்ளாத வெள்ளம். ஆற்றின் கரைகளை யெல்லாம் விழுங்கி, மூர்க்கவெறியாக புரண்டோடுகிற ஊழிப் பெருவெள்ளம். ஓடு பாலம் தெரியவில்லை. அபாய அளவைக் காட்டுகிற கம்பத்தையும் மறைத்துக்கொண்டு பாய்கிற வெள்ளம். மேடும் பள்ளமுமான கோரச் சுழல்கள். பேயிரைச்சல்.

அவளுக்குள் ஒரு பிசைவு. அடிவயிற்றுக்குள் ஏதோ புரள்கிற ஓர் உணர்வு. நடுக்கிடுகிற அச்சம். ரெங்க லட்சுமிக்குள் தலைகாட்டுகிற பயத்தை மீறிக்கொண்டு... ராமானுஜனின் ஏங்கிய முகம்; புருஷனின் முகம். "வா... வா... வா..." என்று சுண்டியழைக்கிற பாசக்குரல். அன்புக் குரல்கள்.

கரையின் எதிர்ப்புறத்தில்...

உள்ளூர் ஆட்கள். கிழடுகளும், இளவட்டங்களும், ஒன்றிரண்டு பெண்களுமான கூட்டம். ஏதோ சொல்லி கத்தி கைகளை அசைக்கிற அவர்களின் குரல்களை யெல்லாம் பொய்யாக்கிக் காட்டுகிற வெள்ளப் பேரிரைச்சல். வெள்ளக் காட்டின் விகாரக் கூச்சல். பூமியே நடுங்கியதிர்ந்து நகர்கிற மாதிரி ஓர் பயப்பிரமை.

'இறங்காதே' என்று எச்சரிக்கிறார்களா? 'இறங்கு, இறங்கு' என்று உற்சாகப்படுத்துகிறார்களா? ஒன்றும் புரியவில்லை. கண்தான் பார்க்கிறது. காதுகளுக்கு வெள்ள இரைச்சல் மட்டுமே கேட்கிறது.

காலடிச் சேலையையும், பாவாடையையும் முழங் காலுக்கு உயர்த்திக் கொண்டு நீருக்குள் காலை வைத்தாள். வேக இழுப்பான வெள்ளம். தூசியும் துப்பட்டையும் இழுபட்டுச் செல்கிற வேகம். காலில் வந்து மோதி விலகுகிற நுரைக்கற்றை.

பாதத்தில் புல்லின் ஸ்பரிசம். ஈரமண்ணின் ஸ்பரிசம். கட்டை முள்ளின் உராய்வுகள். காய்ந்த வேலிமுள் கவை களை உருட்டிப் புரட்டி இழுத்துச் செல்கிற வெள்ள மூர்க்கம். புரட்டியெடுக்கப்படுகிற முள் கவைக் குவியலைப் பார்த்தால், ஒரு குன்றையே புரட்டிச் செல்வதைப் போன்ற பயங்கரம். பயப்பிரமாண்டம்.

பயந்த மனசைத் திடப்படுத்திக் கொண்டு இறங்கு கிறாள். தொடைக்கு வந்துவிட்ட தண்ணீர். அவளை இழுக்கிறது. காலை மட்டும் கவ்வியிழுக்கிறது. கால் தரையில் பாவ மறுக்கிறது. தரையிலிருந்து காலை எடுத்துவிட்டாள். நீந்த ஆரம்பித்தாள். நீரின் போக்கில்

போய்க்கொண்டே, நீந்தி முன்னேறுகிற கிராமத்து அனுபவம்.

எதிர்க்கரையில் கைகளை ஆட்டுகிற ஊர்ஜனம். பதற்றமாகக் கத்துகிற மனிதர்கள். இவள் நீந்த ஆரம்பித்த வுடன், அங்கும் இங்குமாக நிலைகுலைந்து பரபரக்கிற ஆட்கள்.

இவள் இதையெல்லாம் கவனிக்கவில்லை. கருஞ் சாம்பல் நிறத்து வெள்ளத்தின் அலைவு. மூர்க்க அசைவு. திமிங்கில நெளிவு. சின்னச் சின்ன ராட்சஸச் சுழல்கள்.

ஒரு சுழல், இவளை வெறியோடு அள்ளியணைத்தது. ஆவல் பறப்போடு பிடுங்குகிற மாதிரி, ஒரு சுழற்று சுழற்றி... தன் ஈர இருட்டு மடிக்குள் பதுக்கிக் கொண்டது.

உயிர்ப்பறவை ரெக்கையடிக்க... போராடி வெளி வந்த ரெங்கலட்சுமி. கையிலும், காலிலும் மனப் பயம் இறங்கி... நனைந்த நூலாக செயலற்றுத் துவள...

வெள்ளத்தின் இழுப்பில் வேரிழந்த சருகாகப் புரட்டப்பட்ட பயங்கரத் தருணம். அவிழ்ந்த தலைமுடி முகமெல்லாம் நனைந்து, இருளாகச் சூழ... குடித்துவிட்ட தண்ணீர், நெஞ்சுக்குள் பயச்சிலிர்ப்பாக மூச்சுத்திணற... திகிலில் நனைந்து நடுங்குகிற மனசு.

மரணத்தை உணர்கிற ரெங்கலட்சுமி. ராமானுஜனை ஒரு வெறியோடு நினைக்க... புருஷனை நினைக்க... கண்ணியில் சிக்கிய பறவையின் ரெக்கையாக மன உணர்வுகள் மாரடித்து ஒப்பாரி வைக்க... நல்லவேளை...

ஒரு வேலி மரத்தில் முட்டினாள். உயிர்ப்பறவை துடிதுடிக்க... அதிலிருந்தும் புரட்டப்பட்ட மூர்க்க

தருணத்தில்... வேலிமரத்து விளாரைப் பற்றிக்கொண்டாள். கையில் குத்துகிற முட்கள். காந்தல். ராமானுஜ பாசத்தில் தாங்கிக் கொண்டாள். விளாரைப் பற்றிக் கொண்டாள், அழுத்தமாக. உயிரைப் பற்றுகிற வெறி. மகனைப் பிரசவிக்கிற வலி. வலிமை.

அவளை இழுக்க முயல்கிற வெள்ள வேகம். முள்ளில் சிக்கிய ஈரத்துணியாகத் தண்ணீரில் மிதந்து தொங்குகிற பயங்கரம்.

விளார்... வேலி மரத்தின் பசிய நீள்கிளை. பூமியுடனான ஒரே பந்தம். மகனோடு... புருஷனோடு... வாழ்வோடு இணைக்கிற ஒரே இழை. அது அறுந்தால்... அம்புட்டுத்தான்.

ரெங்கலட்சுமி நடுங்கினாள். அழுதாள். "ஐயய்யோ... எம் மவனே..." கதறிப் புலம்புகிற மனசு. ஊர்ஜனம் சிறிசாக... சின்ன நிழல்களாக... பதறிப் பரபரத்து அலைபாய்கிற நிழல்கள்.

நிழல்கள் அனுப்பிவைத்த நிஜமாக... வெள்ளத்தோடு நீந்தி வருகிற ராக்கப்பன். கருவேலங்கட்டை மாதிரி கருந்திரேகம். மாடத்தி மகன். வலுத்த திரேகம். இளவட்டம். எல்லா வெள்ளங்களிலும் இறங்கிப் பழகி... தண்ணீரே பிழைப்பு இடமாகிப்போய்... மீனுக்குத் தண்ணீர் மாதிரி, அவனுக்கு வெள்ளம் இயல்பாகி...

வெள்ளத்தில் இறங்கி... மீட்காமல் அவன் திரும்பியதே இல்லை. "தலைக்கு மீறின வெள்ளமா? கூப்பிடு ராக்கப்பனை" என்பது ஊரின் சுபாவம்.

ராக்கப்பன் நெருங்குகிறான். தண்ணீரை வாயில் அள்ளியள்ளி கொப்பளித்துக்கொண்டே...

நிழல்களாகத் தெரிந்த ஊர்ஜனமும்... ஓட்டமும் நடையுமாகக் கரையிலேயே வந்து... இதோ ரொம்பப் பக்கத்தில்...

விளாரையும் உருவிக்கொண்டு நகர்கிற உள்ளங்கை. உயிரை— மகனை— வாழ்வை நழுவ விடுகிற இறுதிக்கணம். அவளுக்குள் உயிரின் படபடப்பு. மாரடிக்கிற மனச் சிறகுகளின் சடசடப்பு.

காலால் தள்ளுகிற அழுக்கை... கையால் அள்ளித் துவைக்கிற மாடத்தியின் மகன். தாழ்ந்து ஏந்திய சட்டியில்... உயரத்திலிருந்து கை போடுகிற பருக்கைகளைப் பெற்றுக் கொள்கிற மாடத்தியின் மகன். 'இவனா? இவன் தொட்டுத் தூக்கவா? தொட்டு... அணைத்து... தழுவி... கட்டிப்பிடித்து... ஊர்ஜனம் பார்வையில் கரை சேர்க்கவா?'

பார்வதி பட்டபாடு... கிணற்றில் விழுந்து தூக்கப் பட்ட அவளைப் படுத்திய பாடுகள்... பேசிய கிண்டல், கேலிகள்... குத்தல் முட்கள்...

நெருங்கிவிட்டான் ராக்கப்பன். அவன் திரேக ரோமங்கள்.

"யம்மோ...வ், விளாரை வுட்டுராதீகம்மா... புடிச்சுக் கங்கம்மா... இந்தா வந்துட்டேன்... விளாரை வுட்டுராதீக... நா உங்களைக் கட்டிப்புடிச்ச பெறவு, விளாரை வுட்டாப் போதும்மா... புடுச்சுக்கங்கம்மா..."

எச்சரிக்கையையும், தைரியத்தையும் சொல்லிக் கொண்டு மிதந்து நெருங்குகிற ராக்கப்பன்; வாழ்க்கை; உயிர்.

ரெங்கலட்சுமிக்குள் பார்வதியின் முகம். வெட்க வேதனையில் குன்றிக் கூசுகிற பார்வதியின் முகங்கள்.

'மாடத்தியின் மகன்' என்கிற நினைப்பு. அழுக்கை கையால் எடுக்கிறவன்.

"யம்மோ...வ், ஒங்களைப் புடிக்கட்டா?"

"கையை மட்டும்தான் நீ தொடணும். அதுவும் முனிக்கையை (நுனிக்கை) மட்டும்தான் தீண்டணும்."

"அதெப்புடிம்மா... முடியும்?"

"அது அப்புடித்தான். என்னோட ஒடம்பைத் தீண்டாதே..."

வெள்ளத்திற்குள் நீந்துகிற அவனுக்குள் பற்றி யெரிகிற நெருப்பு. அவமான நெருப்பு. சாவின் விளிம்பிலுமா... சாதி?

அவனுக்குள் திகைப்பு, தடுமாற்றம், தத்தளிப்பு.

'இந்தக் குரலைப் பொருட்படுத்தவா, ஒதுக்கவா? உயிரைக் காப்பாத்துறது ரொம்ப முக்கியமில்லியா?'

'ஆம்பளையா மட்டும் நெனைச்சிருந்தா... 'பரவா யில்லே'ன்னு ஒதுக்கிரலாம். ஏகாலின்னு நெனைச்ச பெறகும்... எப்புடித் தொட?'

அவனுள் ஒன்றிரண்டு கணங்களின் தயக்கம். தீண்டாமைத் தீயின் தகிப்பையும் மீறி, அவனது மனித நேயம் செயல்பட யோசித்த கணத்தில்—

விளாரை நழுவ விட்டுவிட்ட ரெங்கலட்சுமி. பெரும்பாறை முடிச்சுகளில் முட்டிச் சுழன்ற வெள்ளச் சுழலில், ரெங்கலட்சுமியின் உடல் சுழற்றியடிக்கப்பட்டதை மனக்கனத்தோடு பார்த்த ராக்கப்பன்.

அவள் பிரேதம் தட்டுப்பட நாலைந்து நாளாயிற்று.

குங்குமம், 19–3–1999

# மானுடம்

**வெ**ங்கடத்தாய் வெறித்த பார்வையாகப் பார்த்தாள், தெருவையே.

செயலற்றுப்போய் முடங்கிக் கிடக்கிறோமே என்கிற குமைச்சல். காலொடித்த மாதிரியிருந்தது. வீட்டை விட்டு வெளியேற முடியவில்லை. அடைக்கோழி மாதிரி... அடைபட்டுக் கிடக்க வேண்டிய சூழல்.

பனி மாசம் மார்கழி மாசம். மழை மாசம்போல விடாமல் பெய்கிற மழை. நசநசக்கிற மழை. நினைத்து நினைத்துப் பெய்கிற மழை. அடைமழை. அதற்கு அது ஒரு விளையாட்டு மாதிரி. மேகங்களின் ஈர விளையாட்டு. தூறல் விளையாட்டுகள்.

ஆகாயம் தெரியாமல் நீர்கோத்த அழுக்கு மேகம். கர்ப்ப வேதனையோடு இருப்புகொள்ளாமல், நகர்ந்து கொண்டேயிருக்கிற மேகங்கள். தூசிமாவு சிந்திப் பரவுகிற மாதிரி ஒரு நேரம் மழை. நெல்லுமி உதிர்கிற மாதிரி. ஒரு

நேரம். தையல் ஊசிகளை அள்ளிக் கொட்டுகிற தினுசில் ஒரு நேரம். 'சட்டச்சட... சட்டச்சட... சடசட'வென்று கனத்த சீற்றமாய் ஒரு பாட்டம். பொழுதுக்கும் மழை.

ஒரு நாளா... ரெண்டு நாளா...? பத்து நாளாக இதே கூத்துதான். பாட்டம் பாட்டமாக ஓயாத மழை.

பொழுது முகமே கண்ணில் தட்டுவதில்லை. அந்தி மயங்குகிற நேரம் போலவே, எல்லா நேரமும். இருள் கனத்த தவிட்டு நிற வெளிச்சம். நனைந்து நைந்து போன வெளிச்சம்.

எல்லா இடமும் சில்லிட்டுப் போய்க் கிடக்கிறது. நனையாத சுவரின் உள்முகம்கூட சுரீரென்று குளிர்கிறது. வைக்கிற இடத்திலெல்லாம் பாத விரல்களுக்கிடையே பீய்ச்சியடிக்கிற நீரூற்று. நீரும் சகதியுமாக தரை.

வெங்கடத்தாய் விதியைப் பார்க்கிற மாதிரி வெறுப்போடு பார்த்தாள், மழையை. விரோதப் பார்வை. அரை வெட்டாக திறந்திருக்கிற தலைவாசல் கதவு. வீட்டு முற்றத்தில் மழைத் தண்ணீர் பாய்ந்து பாய்ந்து... பாசி படர்ந்திருக்கிறது.

தெருத்தண்ணீர் வற்றாமல் வடிந்து கொண்டிருக் கிறது. சந்தனக் கரைசலாக மழைநீர். ஓடும் நீரில் விழுகிற மழைத்துளிகள். நீர்ச்சுடர்களாக எழுந்து அடங்குகின்றன. அவை எழுப்புகின்ற அலை வட்டங்களையும் அடித்து இழுத்துச் செல்கிற மழைத்தண்ணீர்.

ஈரக்காற்று சுழற்றிச் சுழற்றி அடிக்கிறது. தடாலடி யாகப் புகுந்து, ஆளைத் தழுவி நடுங்கவைக்கிற கூதல். சிலீர், சிலீரென வந்து மோதுகிற அலையலையான கூதல்.

மழையில் நனைந்து ஊறிப்போன ஈரச் சொதசொதப்பான காற்று.

தடுமன் காய்ச்சல் பிடித்தால்... இச்சிலாத்தி தான். சனியன்தான். வெளியே தலைகாட்டவே முடிய வில்லை. இந்த லட்சணத்தில், நோய் நொடி என்றால்... ஆஸ்பத்திரிக்கு எப்படிப் போக?

வெங்கடத்தாய்க்கு மனசு கிடந்து கசந்தது. பாரமாக அழுத்துகிற சலிப்புணர்ச்சி.

"ச்சேய்ய்! நச்சுமழையா பேய்ஞ்சு தொலைக்குது, சனியன். இப்புடி அடைமழை அடைச்சுக்கிட்டுப் பேய்ஞ்சா... மனுச மக்க எப்புடி நடமாட? கடை கண்ணிக்குக்கூடப் போக முடியலே. என்னத்தை வைச்சு கஞ்சி காய்ச்ச? எதை வைச்சு உலை மூட்ட? ஆடு குட்டிக, மாடு கன்னுக... வாயில்லாச் சீவனுக, பாவம். அதுகளுக்கு எங்க போய் இரை பாக்குறது?"

வாய்விட்டே முணுமுணுக்கிற வெங்கடத்தாய். கூதல் தாங்காமல் முதுகுச் சேலையில் தோளையும் சேர்த்து மூடிக்கொண்டாள்.

மொத்த வாழ்க்கையே மழைச் சிறைக்குள் மாட்டிக் கொண்ட மாதிரி இருக்கிறது. முடிச்சுப் போட்டு மூலையில் போட்ட அழுக்குத் துணி மூட்டையாய் மனிதர்கள். மழையின் கைதிகளாகி, எதுவும் செய்ய இயலாத கையறு நிலையில்...

வீட்டுக்குள் மேற்கில் தொழுவம். அங்கே கட்டிக் கிடக்கிற ஜெர்ஸிப் பசுவின் கனைப்பு.

"ஹ்றஹ்றஹ்றம்ம்மேய்ய்..."

மேகமுழக்கம் போல அதன் பசிக்கதறல். புல்லுக்கு எப்படிப் போறது? மழை பண்ணுகிற இந்த நாசக் கூத்தில், மனுசராலே என்னதான் செய்ய முடியும்?

நல்லவேளை... சாக்கை மடித்து கொங்காணி போட்டு... தலையில் போட்டுக்கொண்டு புஞ்சைக்குப் போய்... அகத்திக் கொழையும், ஆமணக்குக் கொழையும் ஒரு கட்டுக்கு ஒடித்துக் கொண்டு சுமைப் பாரமாய் சுமந்து வந்தார், வீட்டாம்பளை.

'பொறுப்பான மனுசரு' என்று புருஷனைப் பற்றிய பெருமித நினைப்பும் பெருமூச்சுமாய் எழுந்தாள். விடாமல் கனைக்கிற பசு. அகத்திக் கொழையை அள்ளி, 'சள், சள்' ளென்று உதறிவிட்டு, தலையில் பழைய துணியைப் போட்டுக் கொண்டு மழைக்குள் இறங்கினாள். 'குடு, குடு' வென்று ஓடினாள். பசுவுக்கு காடியில் கொழையைப் போட்டுவிட்டு, வெள்ளாட்டுக்கு முன்னால் தொங்குகிற கயிற்றில் ஒரு குடங்கை கொழையைக் கட்டித் தொங்க விட்டாள்.

வெள்ளாடு காதுகளை ஆட்டிக்கொண்டே பறப்பெடுத்துப்போய், ஆவல் ஆவலாய் கடித்தது, 'நறுக், நறுக்'கென்று.

மறுபடியும். மழைக்குள் இறங்கி... மழைத்தூறலுக்குப் பதறிப்போய், ஓட்டம் ஓட்டமாய் ஓடி வந்து வீட்டுப்படி ஏறுகிற வெங்கடத்தாய்.

'தஸ், புஸ்'ஸென்று இரைக்கிற மூச்சு.

தன்னைத்தானே ஏளனமாய் எண்ணிச் சிரித்துக் கொண்டாள். மென் சிரிப்பு. 'அதர்மத்தை எம்புட்டோ

தாங்குறோம். தர்மத்தைக் கொஞ்சம்கூட தாங்க முடியலியே...! அக்கினியா கொட்டுற கோடை வெயிலுக் கெல்லாம் பயப்படாம, காடுகரைகள்லே நின்னு பாடு படுறோம். தாய்த்தர்மமா பேயுற இந்த ஈரமழைக்கு இம்புட்டுப் பதறிப் போய்... இப்புடி ஓடியாறோமே...'

கோழிக் குஞ்சு நாய்கூட நடமாடாத வெற்று மழைத் தெரு. உயிர்நடமாட்டமேயில்லை. மழைஊசிகள் மட்டும் உயிர்ப்புடன்...

'இப்ப என்ன நேரமிருக்கும்?'

வெயில் முகமே தெரியவில்லை. பொழுதுக்காலும் தெரியவில்லை. தட்டு தட்டாக மேகங்கள் மட்டுமே உச்சி நிஜமாக...

'கடைக்குப் போய்ட்டு வரலாமா?'

யோசிப்போடு ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தாள். மழை, அந்த யோசிப்பை நனைத்து முடக்கியது.

அடுப்பங்கரையில் சேர்த்து வைத்திருந்த பழைய வேலி விறகு. அடுப்பைப் பற்ற வைத்தாள். காப்பிபோடத் துவங்கினாள்.

மூத்தபயல் நாலாப்பு படிக்கிறான். மழையில் 'தொப், தொப்'பென்று நனைந்து வருவான். பைக்கட்டைப் போட்டவுடன்—

"யம்மா... காப்பி" என்பான், அதிகாரமாய்.

தயாராக இருக்க வேண்டும். இல்லையென்றால், 'தங்கு, புங்'கென்று குதிப்பான். தரையை உதைப்பான்.

*"ஆமா-ச்! ச்சே-ய்ய்! ஒன்னோட இதான் தொல்லை? காப்பி போடாம என்ன செய்ஞ்சுக்கிட்டிருந்தே?" என்று 'காய்ச்சு, மூச்'சென்று கத்துவான், கோபத்தில். சினம் சினமாய்ப் பேசுவான். சீறி விழுவான்.*

*வெங்கடத்தாயுக்குள் சிரிப்பாணி பொத்துக் கொண்டு வரும். ஆனால், கோபப் பாவனையில் முகத்தை விறைப்பாள்.*

*"ஏலேய்... உங்கய்யாகூட என்னை அதட்டிப் பேச மாட்டாரு. நீ நேத்து மொளைச்ச பொடிப்பய. இம்புட்டு அதிகாரம் பண்ணுதீயே... என்ன?"*

*"ம் ம் ம்... அதெல்லாம் எனக்குத் தெரியாது. இப்ப... காப்பி இருக்கா, இல்லியா?"*

*"இருக்குடா" என்று தாழ்ந்து தணிந்த குரலில் கூறினால்தான், அடங்குவான்; அமைதியாவான்.*

*எரிகிற தீயையே பார்க்கிற வெங்கடத்தாய். அதன் நாவுகள். சட்டியின் புறத்தை நக்கி நக்கி நீள்கிற தீநாவுகள். சந்தன நிறமும், நீலநிறமுமாக தகதகத்து அலைகிற தீ. கூதலுக்கு கதகதப்பாக இருக்கிறது. 'ங்ங்ஙீய்ய்'யென்று இரைகிற கொதிநீர்.*

*"யம்மோவ்... சோறு போடுங்க... ம்மோவ்."*

*ராகமான அழைப்பு. பவ்யமும், கெஞ்சலுமான குரல். ஏகாலி கெங்காத்தா வந்திருக்கிறாள்.*

*நீராகாரப் பானைக்குள் கைவிட்டாள். புளித்த நீருக்குள் கிடந்த பழைய பருக்கைகள். பரசி அள்ளிக் கொண்டே "இந்தா... வாரேன் கெங்கா..." என்ற பதில்குரல் கொடுத்துக் கொண்டாள்.*

கைநிறைய பருக்கையோடு வாசலுக்கு வந்தாள், வெங்கடத்தாய்.

வாசல்படிக்குக் கீழே—

வெளியே நின்றாள் கெங்காத்தா. மழையில் நனைந்து ஊறிப்போயிருந்தாள். அவள் போட்டிருந்த கொங்காணிச் சாக்கு 'தொப், தொப்'பென்று நனைந்து, சொட்டடித்தது. இடுப்பில் குத்துச்சட்டி. பல வீட்டுச் சோறு. கலவை நிறம். அதில் இவளது பருக்கைகளும் போய் விழுந்தன.

மனசுக்குள் முட்டி மோதிக் கொண்டிருந்த உணர்வுகள். பகிர்ந்து கொள்ள ஆள் கிடைக்காமல் உள்ளேயே அற்றலைந்த நினைவுகள்.

"என்ன கெங்காத்தா... மழை இப்படிக் கூத்துக் கட்டுது?"

"அதைச் சொல்லுங்கம்மா... சவலைப்புள்ளைக்கு கழிச்சல் எடுத்தமாதிரி... விடாம, மழை ஊத்துது."

"மனுசமக்களை காலை ஒடிச்சுப் போட்ட மாதிரி... மழை நம்மளை வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கெடக்க வைச்சிருச்சே... தலைகாட்ட முடியலே வெளியிலே..."

"ஆமம்மா... ஓடைக்குக் கூடப் போக முடியலே... வெளியே சொன்னா வெக்கக் கூத்து."

"சரி... கெங்கா, அழுக்குத் துணிக நெறைய கிடக்கு. எப்ப எடுக்க வாரே?"

"எடுத்து என்ன செய்ய?"

“என்ன இப்புடிக் கேக்கே?”

“அஞ்சாறு வருஷமா காய்ஞ்சு கெடுத்துச்சு, வானம். துணி தொவைக்க சொட்டுத் தண்ணியில்லாம... நாயாத் திரிஞ்சு, நரம்பாச் சுருண்டோம். இந்த வருஷம் என்ன டீன்னா... ஆத்துக்கே போகவிடாம ஊத்துது வானம். பேய்ஞ்சு கெடுக்குது பே(ய்)ப்பய மழை. இதுலே அழுக்குத் துணியை எடுத்து... நா என்ன செய்ய? வீட்லே கரையான்தான் அரிக்கும்.”

“இதென்ன கெங்கா... அப்ப நா என்னத்தை உடுத்த? இங்க தொவைச்சுப் போட்டாலும், காயவுட மாட்டேங்குதே, மழை?”

“மழை, ஒங்களுக்கு மட்டும்தானா? எங்களுக்கும் தானே? மறிச்சுக்கிட்டு ஊத்துது மழை. தொவைக்கவும் வுடாது. காயவும் வுடாது. நாங்க என்ன செய்ய? எங்க கையிலே மட்டும் மந்திரக்கோலா இருக்குது?”

ஏடாசியும் எகத்தாளமுமான கேள்வி, வெங்கடத் தாயுக்குள் சுள்ளென்று சொருகியது. அரைத்து அப்பிய மிளகாயாகக் காந்தலெடுத்தது. முகத்தில் சிடுசிடுப்பு.

“நெதம் சோறெடுக்க முடியுது. கொறையாம... வருசக் கொத்து (கூலி) வாங்க முடியுது. அழுக்கை வெளுக்க மட்டும் மந்திரக்கோலும், மாயக்கோலும் வேண்டி யிருக்கோ?”

கெங்காத்தாவுக்குள்ளும் அவமானச் சீற்றம். இழிவு படுத்தப்பட்ட உணர்வின் வலி.

“குடுத்த கூலியையும், போட்ட சோத்தையும் ‘சொல்லி’க் காட்டுதீக. சும்மாவா குடுத்தீக? தானமா

போட்டீக? நீங்க காலாலே தள்ளுற அழுக்கை, கையாலே அள்ளி அலசித் தாரோமே... அதுக்குத்தானே? மழை தண்ணி விடாம பேய்ஞ்சா... மனுச மக்க போக முடியுமா? ஆத்துலே தொவைக்க முடியுமா? நாங்களும் மனுச செம்மம்தானே? மரம் மட்டைகளா? சொரணையத்துப் போயா... திரியுதோம்?"

மழையின் ஈரச் சிதறலே தீப்பொறிகளாக— தெறிக்கிற உஷ்ணத்தில் கெங்காத்தா. புண்பட்ட மனசின் கொதிப்பும், ஆங்காரமுமாக வார்த்தைகள் தெறிக்க... அங்கலாய்ப்புடன் மழைக்குள் நடந்து போகிற ரோஷாக்னி.

"அடியாத்தீ... இவளுக்கெதுக்கு இம்புட்டு வெளம் வருது?" என்னும் வியப்பும் விசனமுமாய் அவளையே வெறிக்கிற வெங்கடத்தாய். 'நாம என்னமும் தப்பிதமா சொல்லிட்டமா...?' என்று உள்முகமாகவும் யோசித்தாள்.

'பசுமாதிரி... கெங்காத்தா. அலுங்கப் பேசமாட்டா. அதிர நடக்க மாட்டா. அவளே சீறுதாள்னா... நா பேசுனதுலே ஏதோ தவறுதல் இருக்கத்தான் செய்யும்...'

புரியாமையும் வருத்தமும் அவளுக்குள் உளைச்சல் ஏற்படுத்த... அடுப்பங்கரைக்குள் பெருமூச்சுடன் நுழைந்தாள்.

"எல்லாம்... மழை செய்ற நாசக்கூத்து. பாடு சோலியில்லாம மொடங்கியே கெடந்தா... மூளையும் கொழம்பத்தானே செய்யும்?"

காப்பிச் சட்டியை இறக்கினாள். சோற்றுக்கு உலை வைத்தாள். இருக்கிற அரிசியை சட்டியில் போட்டு தண்ணீர் ஊற்றினாள். கையால் அலசினாள். வேலைகள் தன் போக்கில் இயங்கிற்று.

பத்து நாளைக்கு மேலாச்சு. காடுகரைக்குப் போகலே. புல்மோதிக் கிடக்குது, பருத்திப் புஞ்சையிலே. களை வெட்ட முடியலே. புஞ்சைக்கே போக முடியலே. மழை ஜெயிச் சிருச்சு. ராட்சஸ மழை. மனுச மக்களை நகரவிடலை. காலை ஒடிச்சுப் போட்ட மாதிரி, மொடக்கிப் போட்டுடுச்சு. 'நைய், நைய்'னு விடாத மழை. பாட்டம் பாட்டமா மழை. ஜெயில் மாதிரி.

வெங்கடத்தாய்க்குள் சோம்பலான நினைவுகள். சோர்வும் சலிப்புமாக அயற்சியான நினைவுகள். மனிதரை முடக்கிப் போட்டு மழை ஜெயித்து விட்டதை எண்ணி எண்ணிப் புலம்புகிற மனசு.

தன் உடம்பெல்லாம் நூலாம்படை படிந்து கிடக்கிற மாதிரியோர் நமைச்சலான உணர்வு. செயலற்ற மந்தத் தனத்தின் அலுப்பே ஒரு பாறையாக அழுத்துகிற பார உணர்வு. நாலு சுவருக்குள் மூட்டைப்பூச்சி மாதிரி மாட்டிக் கொண்ட எரிச்சல். 'ச்சீய்ய்'யென்று வந்தது.

லட்சுமணன் தடதடவென்று ஓடி வந்தான். பைக் கட்டு அவன் முதுகில் கிடந்து, ஓட்டத்திற்கேற்ப குதித்தது. நீலநிற பாலித்தீன் மழைத்தாள் நனையவிடாமல் அவனைப் பாதி பாதுகாத்தது.

வேகமாய் ஓடிவந்து, பாய்ச்சலாக வீட்டுக்குள் புகுந்து, உற்சாக மகிழ்ச்சியில் குதூகலிக்கிற லட்சுமணன். "அய்ய்க்... அய்ய்ய்க்"கென்று ஆனந்தக் கூத்தாடுகிற அந்தச் சிறுவன். சிறகு முளைத்த சிறிய பூவான வண்ணத்துப்பூச்சி.

ஓடிவந்த வேகப் பரபரப்பில் 'தஸ்ஸ், புஸ்ஸ்' ஸென்று இளைக்கிறது.

"என்னத்துக்குடா... இப்புடி ஓடியாறே? மழைத்தாளு தான் போட்டுருக்கே இல்லே? நனையாதுல்லே? மெதுவா நடந்து வர வேண்டியதுதானே?"

"நனைஞ்சாத்தானே நல்லாருக்கும்மா?"

" 'கேஸ்ஸ், புஸ்ஸ்'ஸுன்னு எளைக்கேல்லே?"

"எளைச்சா எளைக்கட்டும். ஓடியாந்தா நல்லாயிருக்கும், தெரியுமாம்மா? தெருத் தண்ணியை எத்திக்கிட்டே வரலாம்லே? ஓடியார்ற வேகத்துலே மழைத் தண்ணி தெறிச்சுச் செதறும்லே? அது ரொம்பச் சந்தோஷமாயிருக்கும்மா"

"அதான்... டவுஷரையெல்லாம் சகதியாக்கிட்டு வந்துருக்கே."

"சரி... காப்பி இருக்கா?"

குற்றப்படுத்துகிற அம்மாவைப் பொருட்படுத்தாமல், அதிகாரமாகக் கேட்கிற லட்சுமணன்.

"இருக்கப்பா... காப்பி இருக்கப்பா."

மகனின் அதிகார அதட்டலில் பூரிப்படைகிற அம்மா. போலிப் பணிவும், நிஜ மகிழ்ச்சியோடும் வெங்கடத்தாய்.

பாலித்தீன் தாளிலிருந்து சொட்டடிக்கிற மழைத் தண்ணீர். பைக்கட்டை இறக்கி வைத்தான்.

ரொம்பப் பாரம். பூச்சுமையாக இருக்க வேண்டியது, பைக்கட்டுப் பாரமாகப் போட்டு அமுக்கிறது.

"அய்யாவை எங்கம்மா?"

"மதியம் சாப்புட்டுட்டுப் போனவரு... இன்னும் காணலே. டீக்கடைப் பக்கம் உக்காந்து தரையைத் தேய்ப்பாரு."

"மழை மேலே மழையா பேய்ஞ்சுக் கிட்டேயிருக்கு. நீ புஞ்சைக்கு போயிருக்க மாட்டே. இல்லேம்மா?"

"ஆமாப்பா"

"வீட்டுக்குள்ளே ஒத்தையிலே...யா, இருக்கே? பேச்சுத் தொணைக்குக்கூட ஆளில்லே, என்னம்மா?"

வியப்பும் பரிவுமாய் கேட்கிற பிஞ்சின் கேள்வியில், அந்தத் தாய்மனம் அப்படியே நெக்குருகிப் போய்விட்டது.

தானே உணராத அடிமனக் காயத்தை— தனிமையின் சலிப்பை— தொட்டு வருடுகிற மகனின் கருணை. பரிவு. பாச அக்கறை.

"ஆமடா கண்ணு" என்கிறபோது, நெகிழ்ந்து போன மனசுக்குள்ளிருந்து பொங்கிப் பெருகிவந்த உணர்ச்சிக் கற்றை தொண்டைக்குழிக்குள் இடறுகிறது. குரல் தழுதழுக்கிறது.

நீலநிற பாலித்தீன் தாளை உதறினான். சிந்திச் சிதறுகிற நீர்த்துளிகள். அம்மாவின் குரலில் நிகழும் வித்தியாசத்தை நுட்பமாகக் கவனித்தான். ஆனால் பொருட்படுத்திக் கொள்ளவில்லை.

"காப்பி குடும்மா" அதிகாரமில்லாத மென்மைக் குரல்.

எவர்சில்வர் கிளாஸில் அம்மா தந்த காப்பி, பால்காப்பி, டீத்தூளும், மண்டைவெல்லமும், பாலும் சேர்ந்த 'காப்பி.' ஆவி பறந்தது.

கூதலில் "ஸ்ஸ்ஸ்..... ஸ்ஸ்ஸ்"ஸென்று சத்தமாய் நடுங்குகிற லட்சுமணன். ஆவல் ஆவலாக கிளாஸை வாங்கினான். டம்ளரின் கொதி வெப்பம், ஈர உள்ளங் கைக்கு இதமாக இருந்தது. ரெண்டு உள்ளங்கைகளாலும் கிளாஸைப் பற்றினான். ஆசையின் துள்ளல், கண்ணில் மின்னியது. தங்கநிறத் திரவத்தில் உதடுகளை வைத்தான்.

தெருவையே— மழைத்தூறல் விழுகிற நசநசப்பான சகதித் தரையையே— வெறிக்கிற வெங்கடத்தாய்.

சிறைப்பட்ட சீரழிவு. முடங்கிப்போன உடம்பு. கால்வீசி நடக்க வழியில்லை. கைவீசி காடுகரைக்குப் போக முடியவில்லை. சட்டடியாய் கட்டிலில் சாய்ந்துவிட்ட சீக்காளியின் மனச்சுமை, நகராத பொழுதாக நெஞ்சுக்குள் அமுத்த...

மனிதனை ஜெயித்துவிட்ட மழை. வெற்றி மின்னலால் எகத்தாளமாகச் சிரிக்கிற அடைமழை. ஜெய கோஷமாக மேக முழக்கங்கள். தூரம் தூரமாய் நகர்கிற பெரு முழக்கங்களில் இயற்கையின் கர்வம். உற்பாதம். பளீரிடுகிற மின்னல்களில் இயற்கையின் பத்ரகாளி ரூபம். ருத்ரமுகம்.

'ச்சேய்ய்' என்று கிடந்தது வெங்கடத்தாய்க்கு. 'தான்மட்டுமா? ஊர்ஜனம் பூராவும் இப்படித்தான். ஏலாமையில் சுருண்டு கிடக்கிற சலிப்பு.'

கசந்த மனசின் ஆழத்திலிருந்து ஒரு பெருமூச்சு இரைச்சலாக வெளிப்பட்ட அந்தக் கணத்தில்—

எங்கோ தூரத்தில் ஒரு துர்ச்சத்தம். ஊரே அதிர்ந்து திகைக்கும்படியான சத்த பயங்கரம். ஏதோ இடிந்து தகர்ந்து நொறுங்குகிற அவலச் சத்தம்.

"ஐயய்யோ ஐயய்யோ... ஆத்தா... ஐயய்யோ அம்மா" என்ற பயங்கரமான பீதியலறல்கள். கிலி மிகுந்த கதறல்கள்.

வெங்கடத்தாயுக்குள் திகீலென்று வந்தது. நெஞ்சின் நடுப்பகுதியே காலியாகிப் போன மாதிரியோர் சூன்யப் பகீர்.

'நடக்கக் கூடாதது, என்னமோ நடந்துச்சு' என்று உள்மனப் பட்சி ஊகக் கூவலாகக் கூவிய கணத்தில்—

"யம்மா... என்னம்மா சத்தம்?"

"தெரியலேடா" பயத்தில் நனைந்து நடுங்குகிற குரல். மனப் பதைப்பு. 'என்ன ஆச்சோ...? ஏதும் உசுர்ச் சேதமோ...?' என்ற நினைப்பில் திகிலடைகிற மனசு. பரிவுணர்ச்சியும், மனப் பிசைவுமாக பதறித் தவிக்கிற வெங்கடத்தாய்.

வெளியே—

"சட்டச் சட்டச் சட..... சட்டச் சட்டச் சடசட"

முரட்டு மழை. ஊசி ஊசியாகப் பாய்கிற மூர்க்கத் தூறல்கள். காற்றுச் சலனமேயில்லாமல் நின்று அறைகிற ராட்சஸ மழை. ஊழி மழைபோல— அழிவுக்காலப் பிரளயம் போல— கொட்டுகிற மழை.

மழைச் சத்தங்களையும் மீறிக்கொண்டு மனிதச் சத்தங்கள். பத்துநாள்களாக நனைந்து நைந்து, முடங்கிக் கிடந்த உயிர்ச் சத்தங்கள். பதற்றமும் புலம்பலுமாக ஓடுகிற ஆண்கள்— பெண்களின் ஈரக் கதறல்கள்.

"ஐயோ... ஐயோ... பாதரவே இப்புடியா நடக்கணும்?"

“விதிக் கொடுமை– வீடு இடிஞ்சுவுழுந்து– குடும்பமே பொதைஞ்சு போச்சாம்...”

ஆள் ஆளுக்கு கதறிக்கொண்டு ஓடுகிற ஈரச் சத்தங்கள்.

வெங்கடத்தாயுக்குள் மனசு கிடந்து துடிக்கிறது. ரெக்கையடிக்கிற மனத்தவிப்பின் பரபரப்பு.

“ஏலேய்... நீ காப்பியை குடிச்சுக்கிட்டிரு. நா போய்ப் பாத்துட்டு வந்துருதேன்.”

வெங்கடத்தாயும் மழைக்குள் ஓடினாள். அவளுக்கு முன்னால் அலைய குலைய ஓடுகிற நினைவு. ஆவேச மான ஓட்டம். அவளது காலடி வேகத்தில், தெருத் தண்ணீர் பதறிப்போய் சிதறித் தெறித்தது. வந்து பார்த்த போது—

சன்னாசி வீடுதான் இற்று விழுந்திருந்தது. தரையோடு தரையாக குப்பைக்குமியாக... ஒரு வீடு இருந்த இடமே வெறிச்சோடி... சுத்தமாகக் குலைந்து... இருந்த உயரம் தொலைந்த சூன்யமாக...

அவளுக்குள் பகீரென்றது. ஈரக்குலை நடுங்கி யதிர்ந்தது.

ஊர்ஜனமே வந்து கூடியிருந்தது, மொத்தமாக. பத்துநாளாக மழைக்குப் பயந்து முடங்கிக் கிடந்தவர்கள். தூறல்களுக்கு பயம்.

பயத்தைத் துடைத்துவிட்ட மனிதநேயம். ‘ஐயோ’ என்று பதறுகிற இரக்க உணர்வில் அலறியடித்து ஓடி விட்ட மழைப் பயம்.

மழையில் நனைவதைப் பற்றிய அக்கறையே யில்லாமல், எல்லார் நெஞ்சுக்குள்ளும் ஈரத்தகிப்பு. உயிர்ப்புற்ற உள்அக்னி.

பதைப்பும் அங்கலாய்ப்புமாக சுற்றிச் சுழல்கிற கிராமத்தாட்கள். ஆளுக்கொரு வேலையாக மொய்த்தனர்.

'சன்னாசி... ராமாயி... புள்ளே... மூணுபேரும் என்ன ஆனாக?'

வெங்கடத்தாயுக்குள் குபீரென்று பற்றிக் கொண்ட கேள்வி. துயரத் திகைப்பு.

"இதென்னப்பா... மொத்தமா இடிஞ்சு தகர்ந்து போச்சு?"

"மண்சொவரு. அடாத பத்துநா மழை... நாலுபக்கமும் கெட்டிக் கெடக்குற மழைத்தண்ணி. என்ன செய்யும், பாவம் மண்ணு? நனைஞ்சு நமத்துப் போய்... சரிஞ்சிருச்சு. தாங்க முடியலே"

"செங்க ஒடுக... பனங்கட்டைக... மூங்கித்தப்பைக... எல்லாம் உள்ளே குமிஞ்சு கெடக்கு. என்னமும் தேறுமா?"

"என்ன பேச்சு பேசிக்கிட்டு...? மனுச உசுருக தேறுதான்னு மொதல்லே பாருங்கப்பா. ஆளாளுக்குத் தேடுங்க... ஆளுக்கொரு வேலையைப் பாருங்க"

"ஐயய்யோ... பாதரவே! சன்னாசி என்ன ஆனானோ?"

"அவன் மட்டுமில்லே. மூனு உசுருக. பாத்துத் தேடுங்க"

மழை, மூர்க்க மழையாகக் கொட்டிக் கொண்டிருந்தது. யானை மூத்திரம் பெய்த மாதிரி... வான மூர்க்கம். முரட்டு மழை. குண்டு பாய்கிற மாதிரி 'சட்டே'ரென்று அறைகிற மழைத்துளியின் ராட்சஸம்.

மழையை கால்தூசிக்குச் சமமாக அலட்சியப்படுத்தி விட்டு, அலைய குலைய பாய்கிற மனிதப் பேருணர்ச்சி. மகத்தான மனிதப் பிரவாகம். ஒரே திசையில்— ஒரே துடிப்பாக— ஓடிப் பரபரக்கிற நல்லுணர்ச்சி. மனப் பதைப்பு.

கட்டையை உருவி ஒழுங்குபடுத்துகிற சிலர். மூங்கில் தப்பைகளை உதறி எடுக்கிறவர்கள். உடைபடாத ஓடுகளை ஓடி ஓடி எடுத்து வேறிடத்தில் அடுக்குகிறவர்கள்.

மனிதர்களுக்கு ரெக்கைகள் முளைத்த மாதிரியிருக்கிறது. வேர்வையும், விறுவிறுப்புமாக வேலைகள் சக்கரம் கட்டிக்கொண்டு பறந்தன.

ஒவ்வொரு வேலைக்கும் எல்லோரும் 'நான், நீ'யென்று முண்டியடித்து போட்டி போட்டனர். இதற்கிடையே—

சொதசொதத்த மண்சரிவுகளுக்குள்ளேயே மனித உயிர்களை பதனமாகத் தேடுகிற முயற்சியில் சிலர். பரபரப்பும் மனப்பதைப்புமாக அவர்கள்.

வெங்கடத்தாயும் ஓடி ஓடி கட்டைகளை எடுத்து, தூக்கிச் சுமந்து, அடுக்கினாள். பனங்கட்டைகள். உள்ளங்கையெல்லாம் சிராய்ப்புகள். வலித்தது. 'சுருக், சுருக்'கென்று குத்துகிற வலி.

நனைந்த சேலை காலோடு அப்ப... நாசி நுனியில் மழைத்துளி. செவி நுனியில் நீர்த்துளி.

முகத்தில் 'சட்டேர், சட்டே'ரென்று அறைகிற மழை. அசுரமழை.

லட்சுமணன் கூட ஓடி ஓடி ஓடுகளைச் சுமக்கிற வேகம். உற்சாகமாக நனைகிற மகனின் துரிதம்.

இவளுக்கு வலி போன மாயம் தெரியவில்லை.

கட்டைக் குவியல்களை விலக்கிக் கொண்டு, சன்னாசி, ராமாயி, மகள் மூவரையும் சேறும் நீரும் பயமும் அப்பிய நிலையில் கைத்தாங்கலாக ஏழெட்டுப் பேர் தாங்கித் தாங்கிக் கொண்டிருந்தனர்.

மனித வேர்வைக்கு முன்னால் நிற்க முடியாத பயத்தில், மழை வெறிக்கத் துவங்கியது. அரவமடங்கிய அசுரம்.

வேர்வையும் பரபரப்புமாக, நீரில் நனைந்த உடம்புமாக... சிதைவுகளுக்குள்ளிருந்து வாழ்வை மீட்கிற ஜனங்களின் வெற்றி மின்னல்களைப் பார்க்கிற ஆசையில்—

மேகங்களை விலக்கிக் கொண்டு எட்டிப் பார்த்தது, நீல நிற ஆகாய முகம்.

**தினகரன் தீபாவளி மலர், 1998**
**(நெல்லை பதிப்பு)**

# ஏழாப்பு

இன்னும் மிச்சமாயிருக்கிற மங்கல் இருட்டு. தெருக்களில் பகலின் முகமும் உயிர்க்களையும் வந்து விட்டது. பால் வாங்க சொஸைட்டிக்கு ஓடுகிறவர்கள். தெளித்த முற்றத்தைக் கூட்டிப் பெருக்குகிற பெண்கள். டீக்கடைகளில் உற்சாக வெளிச்சம். துண்டால் தோளை மூடிய கிராமத்தாட்களின் இரைச்சல்.

கழுவாத முகத்தின் உறக்கச் சடவாக சின்ன இருட்டு. ஊர்க்கோடியின் மைதானத்தில் தாவணிப் பெண்களும், பாவாடைச் சிறுமிகளும். தீப்பெட்டியாபீஸ் வேனின் ஹாரன் சத்தம் ‘எப்படா கேட்கும்’ என்ற தவிப்பு.

அவசர அவசரமாக சோற்றையள்ளித் திணிக்கிறாள், ராசாத்தி. எடுக்கிற விக்கல்களில் அதிர்கிற உடம்பு. அதையும் மீறிக்கொண்டு வாய்க்குள் கைச்சோற்றைத் திணிக்கிறாள்.

‘நேரமாச்சே... நேரமாச்சே’ என்று ரெக்கையடிக்கிற மனசு.

மகளையே கனிவும் சோகமுமாய் பார்க்கிற அம்மா.

"விக்குதுல்லே? தண்ணியைக் குடிச்சுக்கோயேன்டி" என்று சள்ளையுடன் சொல்லுகிற தாய்மைப் பரிவு. சோறு வைத்து மூடிய டிபன்பாக்ஸை முந்திச்சேலையால் துடைக்கிறாள்.

வாய் நிறைய சோறு. கன்னம் புடைத்திருக்கிறது. பதற்றமாய் கைகழுவினாள் ராசாத்தி. பாவாடையில் ஈரக்கையை துடைக்கிறாள். சுண்டெலியாய் 'குடுகுடு' வென்று ஓடுகிறாள். மஞ்சள் பிளாஸ்டிக் டப்பாவையும், சிட்டையையும் எடுக்கிறாள்.

எல்லாம் துரிதகதி. ரெக்கையடிக்கிற மனசின் பரபரப்பு. "ஐயய்யோ... பொழுதாகுதே"

'எல்லா 'நாய்களும்' முன்னைக்கூடியே போய் நிக்கும். வேன் வந்தாலும் வந்துருக்குமோ... ஹாரன் சத்தம் கேட்ட மாதிரித் தெரியலியே' பரபரக்கிற நினைவு களுக்குள் சாட்டைக் குச்சியால் அடிக்கிற பதற்ற உணர்வு.

சுவரில் மாட்டியிருந்த கையகலக் கண்ணாடியில் முகம் பார்த்தாள். வீட்டு விளக்கு வெளிச்சம் சரியில்லை. எரிச்சலாக இருக்கிறது. கண்ணாடியில் முகம் சரியாகத் தெரியமாட்டேன் என்கிறது.

உதடு தெரிந்தால், காது தெரியாது. கன்னம் தெரிந்தால் நெற்றி தெரியாது. பவுடர் போட்டு, துணியால் தடவி... சரிபண்ணி, பொட்டு வைத்துக்கொண்டு... நேர்த்தியாக இருக்கிறதா என்று சரிபார்ப்பதற்குள் கழுத்து வலியெடுத்துவிடும்.

பொட்டை சரி செய்து கொண்டாள்.

"எம்மா"

"இந்தாடி... சோத்துச்சட்டி"

"கொண்டா. போய்ட்டு வரட்டா?"

"அடியே, யாருகூடயும் சண்டை கிண்டை போடாதேடி. நீ பாட்டுக்கு கட்டையடுக்கு. பத்திரமா போய்ட்டு வாடி"

"ம்..."

ராசாத்திக்குள் அம்மா சலித்தாள். ஏழாப்பு அரைப் பரீட்சை லீவுக்கு தீப்பெட்டியாபீஸ் வேனில் ஏறியது. அன்றைக்கிலிருந்து அம்மா சொல்லி வருகிற அதே சொற்கள். பாசமும் பதைப்புமான தாய்மைத் துடிப்புள்ள ஈரச் சொற்கள்தான். ஆனால் நாளாக நாளாக சலித்துப் போகிற பதைப்பு. ஒரே தொனியில் வருகிற பாசச் சொல்லும் சலிக்கத்தான் செய்கிறது.

பயத்தில் உலர்ந்துபோன கண்ணீர் வார்த்தைகள் முதுகுக்குப் பின்னால் துரத்தி வர, முற்றத்தில் இறங்கி னாள், ராசாத்தி.

தெருவுக்குள் வந்துவிட்டாள். தெருவின் வெளிச்சத் தில் தன்னையே ஒருமுறை குனிந்து பார்த்தாள். கழுத்தைத் திருப்பி... இருபக்கத் தோளையும், இடுப்பையும் பார்த்தாள்.

மனசுக்குள் திருப்தி. எல்லாம் கச்சிதமாய் அமைந் திருப்பதாக ஒரு நிம்மதி. அரக்குக் கலர் தாவணி. அதற்கு மேட்சான ஜாக்கட், பூப்போட்ட பாலியஸ்டர் பாவாடை. நடக்கும்போது 'டப், டப், டப்'பென்கிற காலடிப் பாவாடையின் சத்தம். மனசுக்குள் சந்தோஷப் பூக்களைத் தூவுகிற சத்தம்.

மாராப்பை இன்னும் கொஞ்சம் இழுத்துவிட்டுக் கொண்டாள். தான் அழகாகவே இருப்பதாக ஓர் உணர்வு. மனசுக்குள் பூஞ்சிரிப்பாக ஒரு வெளிச்ச வாசம். திருப்தி யின் எல்லை விஸ்தாரமாகி... சற்றே கர்வமாக நிறம் மாறுகிற உணர்வு.

பொட்டுவைத்தபோது பார்த்த கண்ணாடி முகம். அகலமான கண்கள். மஞ்சள் பூசிய பவுடர் கன்னம். அறுத்த மாம்பழ நிறத்தின் நீர்க்குழைவு. கன்னமிருது. மிருது மின்னல். நிழல் வாட்டம். வெயில்முகம் பார்க்காத பூ உடம்பு. வாட்டமோ உலர்வோ இல்லாத குழைந்து கனிந்த தங்கக் கலர்.

'நாம கொஞ்சம் லட்சணந்தான். ஆபீஸுக்கு வர்ற எந்த நாயும் கிட்டத்துலே வரமுடியாது, நம்ம அழகு பக்கத்துலே'

அவளுக்குள் ஒரு மனநிறைவு. பெருமிதத் ததும்பல்.

'வேன் வந்தாலும் வந்துருக்குமோ...' அவள் மனசின் மென்மையான உணர்வுகளைக் கிழித்துப் போடுகிற நிதர்சனம். லௌகீக வாழ்வின் நினைவு.

பதைப்பும் பரபரப்புமாக நடையை எட்டிப் போட்டாள். ஓட்டமா நடையா என்று துல்லியப்படுத்த முடியாத ஒரு தினுசான நடை. சிறுமிக்குரிய துறுதுறுப்பு. இளங்குமரிக்குரிய வெட்க நிதானம். ரெண்டும் கலந்த முரண்பாடாய் நடை.

மைதானத்திற்கு வந்தாள், ராசாத்தி. முன்பே வந்த 'நாய்கள்' நின்றன, கைகளில் டிபன்பாக்ஸ், டப்பா, சிட்டை சகிதமாய்.

இவளைப் பார்த்ததும், ஆள் ஆளுக்கு கேலியும், கோபச் சீண்டலுமாய் பிய்த்துப் பிடுங்கினர்.

"ஏண்டி, பூந்தேரு கணக்கா ஆடியசைஞ்சு வாரே? காலா காலத்துலே வந்து சேரவேண்டியதுதானே... நாய்?"

"ம்... சாப்புட வேண்டாமா?"

"நாங்கள்லாம் சாப்புடலியா?"

"சித்தே ஒறங்கிட்டேன்"

"என்னடி ஒறக்கம்? நிதானங் கெட்ட ஒறக்கம்?"

"இப்ப என்ன குடி முழுகிப் போச்சு நாயி. நா லேட்டா வந்தாலும்... வேன் வரலேல்லே? எதுக்கு இந்தப் புடுங்கு புடுங்குதீக, கொத்துக் கொத்தா?"

ராசாத்தியின் சிடுசிடுப்பான எதிர்ப்புக்குப் பிறகு தான், சற்று வாயடங்கிற்று சகதோழிகளுக்கு.

அப்போது—

ஊரையே கதிகலங்க அடிக்கிற ஹாரன் சத்தம். காதுகளின் உள்ஜவ்வு இரைந்து கூசுகிற மாதிரியான ஹாரன் கூப்பாடு.

எல்லோரும் ஆவலாய்ப் பார்த்தார்கள். முதலில் புழுதிமண்டலம் தெரிந்தது. புழுதித்திரையின் மங்கலை விலக்கிக் கொண்டு தெரிந்த மஞ்சள் பிசாசு. லோடு வேன். தடதடப்பான இரைச்சலோடு வெறிபிடித்த மூர்க்கமாய் வருகிற முரட்டு வேன்.

கிளீனர் இறங்கிக் குதித்தான். வேனின் பின்கதவின் கொக்கிகளைத் திறந்து கீழே இறக்கி விட்டான்.

“ம்...ம்... ஏறுங்க ஏறுங்க... வெருசா ஏறுங்க.”

எல்லோரும் உல்லாசச் சிரிப்பும், சந்தோஷத் தள்ளு முள்ளுமாய் ஏறிக்கொண்டனர். ராசாத்தியும்தான். தலைகளை எண்ணுகிற கிளீனரின் கண்கள். வழக்கம் போல டிரைவர் முற்றிய குமரிகளிடம் ‘வாய்’ கொடுக்கிறான். வேடிக்கையும் கேலியுமான பேச்சு. பேச்சின் உள்ளோட்டமாக காம எச்சிலின் கள்ளச் சிதறல்.

ராசாத்திக்கு மனம் கசந்து வந்தது. ஆறேழு வருசக் கசப்பு. அனுதினக் கசப்பு. சலித்துப் போகாத கசப்பு. கழுத்துக்கு மேலாக ஓநாய் மூஞ்சி இருப்பதைப் போன்றதோர் பிரமை.

டிரைவர் கேபினுக்குள் ஏறிக்கொண்டு வட்ட ஓட்டை மூலம் திரும்பிப் பார்த்து... ஓநாய்ச்சிரிப்பு இளிக்கிறான்.

டிரைவரிடம் சில சிறுமிகள் சந்தோஷச் சண்டை போடுகின்றனர், “கமல் பாட்டு போடு, ரஜினி பாட்டு போடு” என்று. டேப்—ரிகார்டின் பேய்த்தனமான அலறல்.

வேன் உறுமல் போட்டு உயிர் பெற்றது. சீறலோடு புறப்பட்டது. அடுத்த அடுத்த ஊர் உயிர்களையும் அள்ளி, கந்தகக் கிடங்கில் கொட்டுகிற தன் ‘காலைக்கடனை’ முடிக்கிற அவசரம், அந்த வேனுக்கு.

வண்டியின் பின்னால் சுருள் சுருளாகக் கிளம்பி துரத்தி வருகிற புழுதிமலையின் அலைகளையே வெறித்தாள், ராசாத்தி. பார்வை அங்கேயே நங்கூரமிட்டிருக்க... எங்கோ போய்விட்ட மனசு.

...ஏழாப்பு வரைக்கும் இவளுக்குள் ஓடிய மகிழ்ச்சி நதி. அதன் குளிர்ச்சியான வருடல். தட்டானாக— தம்பலப்

பூச்சியாக– தேன்சிட்டாக ஓடித்திரிந்த உல்லாசமான பாவாடை நாள்கள். விளையாட்டும் படிப்புமாக திளைத்த நாள்கள். பூப்பூவாக உட்கார்ந்து பூரித்த நாள்கள்.

அரைப் பரீட்சை லீவுக்குப் பிறகு–

சிறகு பிய்க்கப்பட்ட குருவியாக தீப்பெட்டியாபீஸ் வேனுக்குள் விழுந்த ராசாத்தி. சுமையாக அழுத்திய வேலை. வேலையின் உள்மர்மம் புரியாத குழப்பம். உட்கார்ந்தே குச்சியடுக்க வேண்டிய நொண்டித்தனம். துறுதுறுப்பான பிஞ்சுக் கால்களை மடித்து வைத்து, பொழுதுக்கும் உட்கார்ந்திருப்பதே கொடுமை. குறுக்கு எலும்பெல்லாம் ரணமெடுக்கும்.

அப்போதெல்லாம்–

ராசாத்தியினால் நாலைந்து கட்டைகள்தான் அடுக்க முடியும். மனசும் கைவிரலும் படியாது. பணியாது. அனுபவமில்லாத உழைப்பு. தள்ளாடித் தடுமாறுகிற புதுக் கை. மேஸ்திரியிடம் சக்கையால் அடிவாங்குவாள். அழுது அழுது சிணுங்குவாள். விசும்பி விசும்பி கண்ணைக் கசக்குவாள்.

அப்போது–

சிறுமி ராசாத்தியை பிரமிக்க வைத்து அசத்தியவள் பூவம்மா. வேலையில் அப்படியோர் வேகம். விறுவிறுப்பு.

ஒரு நாளைக்கு முப்பது கட்டை அடுக்கிவிடுவாள். கட்டை ஒன்றுக்குத் தொண்ணூறு பைசா. அவள் வேலை செய்கிற விதமே... தனி. புயல்மாதிரியிருக்கும். மின்சாரத் துரிதம். குச்சிகளை அள்ளுவாள். நெஞ்சில் வைத்து ரெண்டு தட்டு. மடியிலிருக்கும் சக்கையில் ரெண்டு

விரலால் ஒரு ‘சர்ர்ர்ர்’. ஒரு குலுக்கு. அவ்வளவுதான். சக்கையை எடுத்து பூப்போல கட்டைக் கம்பியில் சொருகி விடுவாள்.

பூவம்மா வேலைகளில் ஒரு கச்சிதமும் இருக்கும். வெறும் கட்டைகளைப் பிரித்து விடுகிற விதம். சக்கை களை கைவாக்கில் வைத்துக் கொள்கிற பக்குவம். குச்சிகளை அள்ளுகிறபோதே... அளவு மாறாமல் அள்ளுகிற துல்லியம்.

பூவம்மாவையே கண் இமைக்காமல் பார்ப்பாள். பிரமிப்போடு பார்ப்பாள். ஓர் அதிசயத்தைப் பார்க்கிற மாதிரி பார்ப்பாள்.

அவளது சிவந்த கன்னம்... மஞ்சள் நிறக் கழுத்து... பவுடர் பூசித் துடைத்து பளிச்சென மின்னுகிற நிலாமுகம்... வெயில்படாத நிழல்வாட்டத்திலேயே இருந்து இருந்து... வந்த கலர் ஜொலிப்பு... அழகுன்னா அழகு, அப்படி அழகு. கடித்துத் திங்கலாம்.

பூவம்மா சம்பந்தப்பட்ட சகலமுமே ஆச்சரியமாக இருக்கும். வியப்பாக இருக்கும்...

‘தங்கக்கட்டி மாதிரியிருக்கா... அக்கா. கட்டியா? இல்லே. பூ. தொட்டா மிருதுவாயிருக்குற பழம். தங்கமா ஜொலிக்குற நெறம்... தங்கப் பூ. பூந்தங்கம்...’

எப்படி நினைத்துப் பார்த்தாலும், நினைவின் விளிம்புக்குள் சிக்காத உயரத்தில் பூவம்மா. பிடிபடாத பிரமிப்பு.

‘பூந்தங்கம்தான். வேலை செய்றதுலே பூச்சிங்கம். சிங்கப்புயலு’

கல்யாணமாகிப் போய்விட்டாள் பூவம்மா. மூன்று வருசமாயிற்று. சற்று வேலையில் தேறிவிட்ட ராசாத்தி. மடங்கின காலோடு, இடுப்புவலியோடு பொழுதுக்கும் குச்சியடுக்கப் பழகிவிட்டாள். இருபது கட்டைகள் அடுக்குகிற அளவுக்குத் தேர்ச்சி.

நினைவில் சுவடில்லாமல் மறந்து போனாள், பூவம்மா. அவளை மறந்துவிட்டு... வேனும் வேலையுமாய்... சிறகொடிந்த மைனாவாய் உயிர்வாழப் பழகிப் போய் விட்டாள்.

திடுதிப்பென்று வந்து நிற்கிறாள், பூவம்மா. பூவில்லாத பூவம்மா. சோகப் பிம்பமாய், கன்னங் கரேலென்று கரடுதட்டிப் போன முகம். மூன்று வருசத்தில் முப்பது வருச மூப்பு. செம்மை படிந்து நார்ப்பரிந்து போன தலைமுடி....

விதவையாகிப் போய் வந்து சேர்ந்திருந்தாள். தாம்பத் யத்தை மட்டுமா தொலைத்திருந்தாள்? அழகையும்தான். தங்கப் பூவையும்தான். பூந்தங்க ஜொலிப்பையும்தான்.

“என்னாச்சு...? என்னடி இப்புடிக் கறுத்துப் போய்ட்டே? கெழடி கணக்கா ஆயிட்டீயே... மூனு வருசத்துலே”

அதிர்ந்து போன மனச்சோகத்தில் துடித்துப் போய் கேள்வி கேட்ட பழைய தோழிகள்.

வாழ்வின் மொத்த சாபத்தையும் சுமந்து தீர்த்தவள் போல, பூவம்மா.... வாடித் துவண்ட சாயங்காலப் பூவாக முகம் இருண்டு, வருத்தத்துடன் “ம்ள்ச்சூ”வென்று சலித்துக் கொண்டாள்.

“என்னத்தைச் சொல்லச் சொல்றே...? ஏழைப்பட்ட சம்சாரி வீடு. காடுகரைன்னு பொழுதுக்கும் நார்ப்பரிய வேலைபாக்கணும். வேணாக் கொதிக்குற வெயில்லே கெடந்து ‘வேகு, வேகு’ன்னு பாடுபட்டுட்டு... வீட்லே யும் மாடுகன்னு... தொழுவம்... அடுப்பங்கரைன்னு இடுப்பொடியணும். கறுக்காம செவந்து கனியுறதுக்கு... வீட்டு ஊஞ்சல்லேயா ஆடிக்கிட்டிருந்தேன்?”

இன்னும் அனுமார் வாலாக நீள்கிற பூவம்மாவின் சோகம். வேதனைப் புலம்பல். கடித்துக் குதறப்பட்டு... காயங்களில் நொந்துபோன மனசின் முடிவில்லா வலி. வலியின் பெருமூச்சு.

காட்டு வேலையில் கருகிப்போன பூவம்மா, இப்போதும் குச்சியடுக்குவதில் புலிதான். புயல்தான். அதே கச்சிதம். அதே வேகம். அதே விறுவிறுப்பு... அதே, அதே... அதே... தான்.

ஆனால் ராசாத்தி அவளைப் பார்த்துப் பிரமிக்க வில்லை; ஆச்சரியப்படவில்லை.

பரிதாபப்பட்டாள். வெந்து முடிந்த விறகாகக் கறுத்துப் போயிருக்கும் பூவம்மாவை ‘ஐயோ... பாவம்’ என்றே அனுதாபமாகப் பார்த்தாள். காட்டு வெயில் எனும் தீயில் கருகிப் போன பரிதாபத்திற்குரிய பூவம்மா.

தீப்பெட்டியாபீஸுக்குள்— கந்தக நிழலுக்குள்— வேலை பார்க்க வேண்டியதாகிவிட்ட அவலத்தை நினைத்து நினைத்து மருகிக் கொண்டிருந்த ராசாத்தி... ‘நல்லவேளை’ என்று ஆசுவாசப்படத் துவங்கியது அன்றைக்குத்தான்.

'காட்லே கெடந்து சீரழியாம... நெழல்லே உக்காந்து வேலை பாக்குற யோகம் கெடைச்சுதே' என்று சந்தோஷப் படவும் செய்தாள்.

வேனில் பயணம். நடையில்லை. டேப்—ரிகார்டு பாட்டுச் சத்தம். வேடிக்கையும் விளையாட்டுமான பேச்சு. கேலியும் கிண்டலுமாய் சீண்டிக் கொள்கிற குதூகலம். குரங்குச் சேட்டையாய் கும்மாளமிடும் சிறுமிகளின் உல்லாசம்.

நிழலில் வேலை. வெயில் முகம் பார்க்க வேண்டிய தில்லை. வியர்வையில்லை. வெயிலின் தகிப்பு இல்லை. தகிப்பில் கறுக்க வேண்டியதில்லை...

ராசாத்திக்குள் மெல்லிசான பெருமிதம். சீமாட்டி யாகிவிட்ட மாதிரியோர் மகிழ்ச்சி. வெயிலின் விதியில் சிக்காமல், நிழலின் யோகம் கிடைத்த அதிருஷ்டம்.

இந்த மகிழ்ச்சியும், பரவசமும் குச்சியடுக்குகிற வேலையில் ஈடுபாடாகி... இவளும் முப்பது கட்டைகளுக்கு மேல் அடுக்க ஆரம்பித்து விட்டாள்.

...ஏழெட்டு ஊர்களில் பிள்ளைகளை ஏற்றிக் கொண்டது வேன். வேனுக்குள் இப்போது புளிச்சிப்பமாய் கூட்டம். உட்கார இடமில்லை. நிற்கவே இடமில்லை. ஒருத்தர் மூச்சு ஒருத்தர் கழுத்தில். கன்னத்து வியர்வை யில் உரசுகிற ஒருத்தியின் மூக்கு. கால் வைக்கக்கூட இடமில்லை.

உள்ளுக்குள் அடியும் பிடியும். கூச்சலும் கத்தலும். சுவாச வெக்கை. மனிதச் சூடு. வியர்வை நசநசப்பே இண்டமுள்ளாகக் குத்தியது.

'எப்படா, இறங்கலாம்' என்றிருந்தது, எல்லாருக்கும். இடியும் மிதியுமாய் நரக வேதனையாய் நகர்கிற வேன்.

ஒரு வளைவில் வண்டி திரும்பினால்... எல்லாரும் அப்படியே சரிய வேண்டியிருக்கிறது. ஒருத்தர் மேல் ஒருத்தர். கிடங்கில் விழுந்து விழுந்து நகர்கிற வேனில் குலுக்கலில் அலறிக் கூப்பாடு போடுகிற சிறுமிகள்.

"அடியே... மேலே சாயாதீகடி."

"ஏய் கொரங்கு... தள்ளியிரு. ஒன்னையும் சேத்து நா சொமக்கணுமா...?"

"சொமையேன்... சொமந்தா கொறைஞ்சா போவே?"

"என்னத்துக்குச் சொமக்கணும் நாயை? தலையெழுத்தா?"

"நாளைக்கு புருசன் குடுத்த சொமையை ஆசை ஆசையா தடவித் தடவி வவுத்துலே சொமப்பேல்லே?"

"ச்சீ... நாயே! செருப்பாலடிப்பேண்டி..."

வேன் முழுக்க விதம் விதமான சீறல்கள். சிரிப்பலைகள். குமுறல்கள். கூப்பாடுகள். கேலிகள்.

"ஏய்... சக்களத்தி, காலை மிதிக்காதேடி."

"ஐயய்யோ... எங்காலை வைக்க எடமில்லியே... எங்கனெ வைக்க?"

"தலைமேலே வச்சுக்க"

"ஒந்தலை மேலேயா?"

கோபவெக்கைகள். கேலிகள். கிண்டல்கள். எந்த வறட்சியிலும், நெரிசல் திணறலிலும் ஈரம் செத்துப் போகாத நையாண்டிகள்.

எல்லாவித ரணங்களின் முனகல்களையும் மூழ்கடிக் கிற டேப்–ரிகார்டின் பாட்டுக் கத்தல். "அதாண்டா... இதான்டா அருணாச்சலம் நாந்தாண்டா"

இந்த நெரிசலில் ராசாத்தி சப்பளிந்து போய்க் கிடந்தாள். ஜன்னல் வலைக்கம்பியில் கன்னம் பதிந்து கிடந்தது. அழுந்துகிற கன்னத்தில் காந்தல்.

....ஏழாப்பில் இவள் விட்டுவிட்டு வந்த தோழிகள். அந்தச் சிறுமிகளில் ஒன்றிரண்டு பேரைத் தவிர... மற்றவர்களெல்லாம் எட்டாப்புக்கு மேல் எவ்வவில்லை. முடியவில்லை. கிராமத்துச் சிறுமிகள் காட்டுவேலைக்குப் போய்விட்டனர். கூலிக்காரிகளாகிவிட்டனர்.

சாயம்போன நைலக்ஸ் சேலையும், எண்ணெய் காணாத செம்பட்டைத் தலையும், உலர்ந்து காய்ந்து களையிழந்த முகமுமாய்... முழுக்க கிராமத்துப் பாமரமாகி விட்டனர்.

குருவம்மா கூட அப்படித்தான்.

அஞ்சாப்பு படிக்கிறபோதெல்லாம் அவள், அரைத்து வைத்த மஞ்சளாக ஜொலிப்பாள். கன்னம் மின்னும். இப்போது காட்டு வேலையில் கூலிக்காரியாக சீரழிந்து கிடக்கிறாள்.

வேணலாய்க் கொதிக்கிற வெயிலின் அனலில் வெந்து கருகி, ஆளே கறுத்துப் போனாள். காய்ந்து உலர்ந்து போய் உயிர்க்களையற்றுப் போனாள். பரட்டைத் தலையும், பங்கரைத் தோற்றமும், கறுத்த மூஞ்சியுமாய்...

அடிக்கிற வெயில் முழுவதும் அவள் தலையில்தான். வியர்த்துக் கொட்டும். உடம்பெல்லாம் வெள்ளை

வெள்ளையாக உப்பு வரிகள். கறுத்த தோலில் பளிச்சிடுகிற உப்பு ரேகைகள். அப்படி வெந்து கருகிப் பாடுபட்டு சீரழிந்தாலும்... சம்பளம் வெறும் பதினைந்து ரூபாய்தான்.

ஒரு குருவம்மா மட்டுமல்ல... ஏழாப்பிலிருந்து வெளியே போய், வெயிலில் சீரழிகிற குருவம்மாக்கள் நிறைய்ய்ய.

குருவம்மா கண்ணில் தட்டுப்படுகிற போதெல்லாம் ராசாத்திக்கு பூவம்மா ஞாபகம் வரும். 'ஐயோ பாவம்' என்று மனசு கிடந்து பரிதாபப்படும். "காட்டு வெயில்லே காய்ஞ்சு காய்ஞ்சு, ஆளே லட்சணங்கெட்டுப் போய்ட்டா... பாவம். குருவம்மா கரியம்மாவாயிட்டா"

போனவருஷத் தீபாவளி. போனஸ் பட்டுவாடா நடந்திருந்தது. ஆயிரத்தை நெருங்குகிற தொகை, ராசாத்தி கையில். இவளைவிடப் பெரிய பெண்கள், கல்யாணம் காட்சி கண்ட பெண்கள் எல்லாரும் சிவகாசி போனார்கள், துணிமணியெடுக்க.

இவளும் போய்... ஏழெட்டு ஜவுளிக்கடைகளில் ஏறி இறங்கி... கடைக்காரர்களைப் பாடாய்படுத்தி... விளை யாட்டும் சிரிப்புமாகக் கும்மாளம் போட்டு... மகிழ்ச்சியில் ததும்பி வழிகிற மனசோடு.

இவளுக்கு ஒரு தாவணி செட், ஒரு சேலை, அம்மாவுக்கு ஒரு சேலை எடுத்துக் கொண்டு வந்தாள். கறிச் சீட்டு போட்டிருந்ததால், ஒரு கிலோ ஆட்டுக்கறி, அரிசி சாமானெல்லாம் வந்து சேர்ந்துவிட்டது.

பலகாரம் பட்சியோடு தீபாவளி 'ஜே, ஜே' என்று நகர்ந்தது. தீப்பெட்டியாபீஸில் தந்த வேட்டுப் பொட்டலம் வேறு வெளிச்சமும் வெடிச்சத்தமுமாய் கரியாயிற்று.

தற்செயலாக அன்றைக்கு சாயங்காலம் கண்ணில் எதிர்ப்பட்டாள், குருவம்மா.

தீபாவளியன்றைக்கும் அதே தோற்றம். செம்பட்டை ரோமக்கற்றை. வாடிய தோற்றம். பழைய அழுக்கான சேலை.

ராசாத்திக்கு 'என்னவோ' போலிருந்தது.

"என்னடி... தீவாளிக்கு புதுத்துணிமணியில்லியா?"

"ம்ள்ச்சூ..."

"கறிபுளியாச்சும் உண்டா, இல்லியா?"

"பன்னிக் கறிக்கு மட்டும் சொல்லியிருக்கு..."

"ஏண்டி, இப்புடி?"

"அன்னாடக்கூலி பானஞ்சுரூவாக்கு வேனாக் கொதிக்குற வெயில்லே பாடுபடுற கூலிக்காரி வீட்லே... தீவாளி இப்புடித்தானிருக்கும். கோழியடிக்க... பலகாரம் போட... துணிமணி யெடுக்க ஆசையிருக்கு. ஐவேசு வேணுமில்லே?"

"வேட்டு வேணும்னா தரட்டா...டி"

"ம்ள்ச்சூ! வேண்டாம்டி. நீயேபோடு. களை வெட்டிப் பொழைக்குற எங்களுக்கு வறட்டுத் தீவாளியே வந்துட்டுப் போகட்டும்."

சோகமும், விரக்தியுமாய் சிரித்துவிட்டுப் போன குருவம்மா. ராசாத்திக்குள் ஏதோ ஒரு வேதனை பிசைந்தது.

...வேனுக்குள் மூச்சுத் திணறலான நெருக்கடி. இவளைப் போட்டு நெரித்து அமுக்கிற மூன்று முரட்டுப்

பெண்கள். ஜன்னல் வலைக்கம்பி கன்னத்தில் அழுத்து கிறது. காந்துகிறது. வேனின் பாடித்தகரத்தில் நனைந்த அப்பளமாய் அப்பிக் கிடந்தது, ராசாத்தி உடம்பு. உயிரே போகிற வலி. மூச்சுத் திணறல். ஊன்றிய காலை மாற்றி வைக்கக்கூட இடமில்லை.

மரத்துப் போகிற பாதங்கள். இரத்த ஓட்டம் நின்று போய்... முள்முள்ளாய்க் குத்துகிற உள்பாதம்.

ஆனாலும்—

நெரிசலின் ரணத்தை அடிமனம் அவ்வளவாக உணரவில்லை. நினைவுகளில் உலவித் திரிகிற மனசு. பழைய நினைவுகளின் அலைப் புரளல்கள்.

பூவம்மாக்கள். 'ஏழாப்பு' குருவம்மாக்களை நினைக் கிற மனசு. நினைத்து இரக்கப்படுகிற ஈர உணர்வு.

'அதுகளை விட தன்பாடு தேவலை' என்கிற சுய திருப்தியில் ஆறுதல் காணுகிற நினைப்பு. வெயில் முகம் படாத நிழல் வாட்டத்திலேயே வேலை செய்வதால்... தேக நிறமும் அழகும் ஜொலிப்பதாக ஒரு பெருமிதம். அதில் சுகம் கண்டு பூரித்து, திளைக்கிற பூமனசு.

**எ**ப்போது பொழுதடைந்ததோ... தீப்பெட்டியாபீஸை விட்டு வெளியேறும்போது இருட்டிவிட்டது. சிறுமிகளோடு வரிசையில் ராசாத்தியும் நின்றாள். அடுக்கி முடித்த கட்டைகளை சிட்டையில் பதிந்து தருகிற கணக்குப்பிள்ளை.

முப்பத்தாறு கட்டைகள், இவள் சிட்டையில். இவளுக்குள் ஒரு சந்தோஷக் காற்று. காற்றின் மென் பரவல். மனசெல்லாம் பரவித் திளைக்கிற ஒரு சின்னக் குதூகலம்.

வேன் வந்தது. சிறுமிகளோடும், தோழிகளோடும் சேர்ந்து இவளும் ஏறிக் கொண்டாள்.

அதே இடி. அதே நெரிசல். அதே புளிச்சிப்பம். அதே திணறல். அதே வசவுகள். அதே கோபச் சீறல்கள்.

அதே, அதே, அதே... ரணம் நிறைந்த 'அதே'கள்.

ஊர் வந்து சேர்ந்தது, மஞ்சள் வேன். மைதானத்தில் வட்டமடித்து திரும்பி நின்றபோது, சற்றே திகைக்க வேண்டியிருந்தது. எட்டு மணி பஸ்ஸும் அந்நேரம் வந்திருந்தது. அதுவும் வட்டமடித்து திரும்புகிறது. கண்டக்டர் விசிலுக்கேற்ப பின்னுக்கு வருகிற வெள்ளைப் பஸ்ஸுக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்ற மஞ்சள் வேன்.

மைதானம் முழுக்க தெருவிளக்கின் வெளிச்சம் போதவில்லை. மங்கலான இருட்டு. மனித நிழல்களே குழப்ப இருட்டாக...

பிள்ளைகளோடு சேர்ந்து ராசாத்தியும் இறங்கினாள்.

உதித்த காலைப் பொழுதையோ— அடைந்த மாலைச் சூரியனையோ பார்க்க முடியாமற் போகிற ஒரு சின்னச் சோகம் நெஞ்சின் ஆழத்தில் மின்னிச் சென்றது. வலி மின்னல்.

இறங்கிய கணத்தில்—

திசை தெரியவில்லை. மைதான இருட்டும் மனித நிழல்களுமாய் ஒரு சின்னத் திகைப்பு. 'எந்தப் பக்கம் நம்ம வீடு' என்ற திகைப்பு.

பஸ்ஸுக்குள் வெள்ளை வெளிச்சம். திகைத்து நின்ற அந்தச் சின்ன நேரத்தில், பஸ்ஸுக்குள் இறங்க

யத்தனிக்கும் பயணிகளைக் கவனித்தாள். ஒரு குமரிப் பெண்ணுக்குரிய ஆர்வத் துறுதுறுப்போடு பார்த்தாள்.

யார் யார் வீட்டுக்கு விருந்தாளிகள் வருகிறார்கள்? எந்த ஊரிலிருந்து? யார், யார்? என்ன மாதிரியான டிரஸ், நகைநட்டு அணிந்திருக்கின்றனர்?

இந்த மாதிரியான கேள்விக் குறுகுறுப்புகளோடு கவனித்த ராசாத்தியின் கண்ணில் ஒரு மின்னல். பரவசமும், மகிழ்ச்சியும் 'குபுக்'கென்று பீறிடுகிற ஆர்வம். ஆவல் பரபரப்பு மனசு முழுக்க.

பஸ்ஸிலிருந்து இறங்க யத்தனிப்பவர்களில் காத்திருக் கிற அந்தப் பெண்.

சிமெண்ட்நிற சல்வார்கமீஸில் அழகான பூ வேலைப்பாடுகள். தோளில் ஒரு தொங்கும் பை. வலது கையில் ஒரு சிமெண்ட் நிற சூட்கேஸ். முகத்துப் பளிச்சிடலில் நகரத்து மினுக்கு. 'பம்ம்'மென்றிருக்கிற கூந்தலின் தனியழகு.

இந்த டிரஸ், அலங்காரம், அழகு எல்லாமே கிராமத்துக்கு ரொம்ப அந்நியம். பிரமிப்பூட்டக் கூடிய உசத்தி. பட்டிக்காட்டுக்கொரு மிட்டாய்க்கடை.

அலை பாய்ந்த ராசாத்தியின் கண்கள், மலைத்துப் போய் சல்வார் கமீஸ் மீதே நங்கூரமிட்டது.

அவளுக்குள் பிய்த்துக் கொண்டு ஊற்றெடுத்த ஒரு பரவசம்.

'அட... நம்ம விசயா...'

ஏழாப்பு வரைக்கும் இவளோடு படித்தவள். ஒன்றாகப் படித்து... ஓடிப்பிடித்து சிரித்துப் பழகி...

குதூகலித்து... கும்மியடித்துப் பின்னிக் கிடந்த அந்த நாள்கள். கிணறுகளில் குதித்து விளையாடிய கும்மாள நாள்கள்.

'ராசாத்தி... ராசாத்தி... ராசாத்தி' என்று ஏகப் பிரியமாயிருந்தாள். வால் மாதிரி கூடவே அலைவாள். கவலையற்று சிறகடித்துத் திரிந்த அந்த வண்ணத்துப்பூச்சி நாள்கள்.

இப்போது—

மதுரையில் படிக்கிறாள், விசயா. பி.எஸ்சி. இரண்டாம் வருஷம்.

ராசாத்திக்குள் ரெக்கையடிக்கிற ஆர்வப் பரபரப்பு. உதட்டுக்கு ஓடி வருகிற மனசின் துறுதுறுப்பு. இரத்தத்தின் ஒவ்வோர் அணுவிலும் துடிக்கிற ஆவல் கூத்து.

"அடியே... விசயா..." என்று கத்திக் கொண்டே ஓடிப் போய் கட்டிப்பிடித்துக் கொள்ள ஆசைப்படுகிற மனத் துள்ளல்.

சட்டென்று நிதானித்தாள். சுயநிதானம். உள்ளுக்குள் பிரேக் அடிக்கிற ஒரு தயக்க யோசனை.

தனது அரக்குக் கலர்த்துணி. பூப்போட்ட பாவாடை. தன் மீது வீசுகிற கந்தக நெடி. கிட்டத்தில் வந்தவரின் நாசியைத் துளைக்கிற பசை வாசம். குப்பென்று தாக்குகிற கருமருந்து நாற்றம்.

பி.எஸ்சி படிக்கிற அவளிடம் போய் நிற்கவா? கூப்பிடவா? ஆசையாய் குசலம் விசாரிக்கவா?

விசாரித்தால்... அதை அவள் அங்கீகரிப்பாளா? 'வாடி' என்று வாஞ்சையோடும் உரிமையோடும்

மகிழ்வாளா? அடிமனசின் அசல் சந்தோஷமாக அது இருக்குமா?

முகம் சுளித்துவிடுவாளோ... பசை நாற்றத்தில் மூக்கை நெளிப்பாளோ... அசூயையில் ஒரு கணம் முகம் கோணலாகி... அடுத்து சிரித்துச் சமாளித்து... விலக யத்தனிப்பாளோ...

அந்த நினைப்பே அரிவாள் வெட்டாக விழுந்தது. உள்ளுக்குள் வெட்கி, வேதனைப்பட்டு குன்றிப் போகிற ராசாத்தி.

இருட்டுக்குள் தன்னை ஒளித்து மறைத்துக் கொண்டாள்.

பஸ்ஸைவிட்டு இறங்குகிற விசயாவின் இடது மணிக்கட்டில் வாட்ச். கால்களில் செருப்பு. ராசாத்தி கனவில்கூட நினைத்துப் பார்க்க முடியாத உயர்ரக நவீனச் செருப்பு. காது நுனியில் புதுரக ஜிமிக்கி. தொங்கட்டான் போன்ற தங்க அழகு. நடையின் நளினம். நாகரிக நாசூக்கு.

இவளுக்குள் மின்னலாய் ஓடிப்பரவுகிற வேதனை.

ஏழாப்பில் தன்னோடு குப்பை கொட்டிய 'குருவம்மா'க்களை நினைத்து சுயதிருப்திப்பட்டிருந்த ராசாத்தி. 'நிழல் வாட்டம், போனஸ், தீபாவளி' என்கிற சுயபிரமை. மயக்க சுகம்.

ஏழாப்பில் தன்னோடு நொண்டியடித்து விளை யாடிக் கொண்டு– ஒட்டிக்கொண்டே உறவாடித் திரிந்த விசயாவின் இன்றைய உயரத்தைப் பார்த்த கணத்தில்–

விலகிக் கரைந்தோடிய பிரமைகள். கலைந்துவிட்ட மயக்கம். சுரீரிடுகிற சுயஉணர்வு.

*தான் எங்கோ... பாதாளத்தில்... தூக்கியெறியப் பட்டதைப் போல சிறுமைப்பட்டுக் கிடக்கிற நிஜம். வேனுக்குள் படுகிற நெரிசல் திணறல். அதன் ரணம்.*

*சுயதிருப்தி எனும் மயக்க சுகம் இருந்த இடத்தில், அடிபட்ட மனசின் வலி. அறுபட்ட பல்லி வாலின் துடிப்பு.*

*இழந்து போயிருக்கிற உலகம். கைநழுவிப் போயிருக்கிற வாழ்க்கை. கைவிட்டுப் போயிருக்கும் கல்வியின் மேன்மை.*

*அதன் கன பரிமாணத்தின் முழுமையை உணர்ந்த கணத்தில், ராசாத்தி நெஞ்சுக்குள் சப்பென்று அறைந்து தாக்கிய ஒரு சோகக்கற்றை.*

**தினபூமி, தீபாவளி மலர், 1997**

# மரணம்

**அ**ய்யாவுக்கு கட்டிலைவிட்டு எழுந்திருக்க முடிய வில்லை, இன்றைக்கு. நார்க்கட்டில். நாள்பட்ட கட்டில். நார்ப்பின்னல் துவண்டு ஊடு பள்ளம் விழுந்திருந்தது, தொட்டிலைப் போல.

நாள்பட்ட சீக்கு— க்ஷயரோகம். இளைப்பும், தகையு மாக சருமம் விம்மி விம்மித் தணியும். நெஞ்சுக் கூட்டுக்குள் சலங்கை குலுங்குகிற மாதிரி ‘கொலகொல’வென்று இரைச்சல் போடுகிற சளி. இருமல் வந்தால், சூறாவளி மாதிரிதான். வாடிப்போன சோளப்பயிரை சுழற்றி யாட்டுகிற மாதிரி ஓர் உலுக்கு உலுக்கியெடுத்துவிடும், அய்யாவை.

கட்டிலைச் சுற்றி ரொம்பநாளாக ஒரு வீச்சம். துப்பிய சளியின் துர் நாற்றம். நிரந்தர ஈ மொய்ப்பு. மணல் நிறைந்த சிரட்டை பூராவும் சளியின் கருமை.

எலும்புக்கூட்டு மேலே நனைந்த காகிதம் போல படிந்திருந்தது வெளுத்த சருமம். நிறைய நரைத்த ரோமங்களும் சுருக்கங்களும், அதில்.

குத்துக்கால் வைத்து உட்கார்ந்தால்... முழங்கால் உயரத்திற்குள் மொத்த உடலே முடங்கிக் கிடக்கும். தலையில் அசையும் போதுதான் உயிர் இருப்பதே தெரியும்.

"தாயீ... சுடு தண்ணியிருந்தா... ஒரு டம்ளர் குடேன்" என்று கேட்பதற்குள், ஒரு மலையில் ஏறி இறங்கிய இளைப்பு! களைப்பு! அயற்சியில் சொருகிக்கொள்கிற கண்கள்.

ஆனாலும்... லேசுமாசான நடமாட்டம். வீட்டுக்கும் வெளிக்குமான நிதான நடை. ஓடைக்குக் கூட போய் விட்டு வந்துவிடுவார். சீக்காளிக்குரிய நிரந்தர முணு முணுப்பு. புலம்பல். முடங்கிக் கிடக்கமாட்டாத நடை. சலன நடை. எங்காவது நகர்ந்து கொண்டேயிருப்பார்.

"ஒடித்தவிச்ச நாய் கணக்கா தலைக்கு. எளைக்குது. பேசாம... கட்லே கெடந்தா என்ன?"

சலிப்பும் கோபமுமாய் கண்டிக்கிற அம்மாவை கோபமும் குமுறலுமாய் விறைப்பாக திரும்பிப் பார்ப்பார் அய்யா. நோயில் விழுந்த சிங்கம். கிழட்டு வேங்கை.

"நடக்கவும் வேண்டாங்கியா? கட்லேயே போட்டு பொதைச்சிரணும்னு திட்டமா?"

அய்யாவின் முதுமைக் கர்ஜனை. ஹீனமான உறுமல்.

அப்பேர்ப்பட்ட அய்யா, இன்றைக்குத்தான் எழ முடியவில்லை. தூக்கி உட்காரவைத்தாலும் முடியவில்லை.

இடுப்பு தாங்கவில்லை. சட்டடியாகப் படுத்துவிட்டார். வீடு முழுக்க மரணவாசம் மூச்சுமுட்டியது.

ராசாத்தி இரண்டு குடத்தைத் தூக்கிக்கொண்டு அவசரப் பரபரப்பாக வெளியே ஓடினாள். "தண்ணி வந்திரிச்சு... தண்ணி வந்திரிச்சு" என்று தெருவில் பிள்ளைக்காடுகளின் கூப்பாடு.

சாட்டையடி விழுந்த காளைமாடு மாதிரி துள்ளத் துடிக்க எழுந்தாள். குடங்களைக் கவ்விக்கொண்டு பாய்ந்தாள். மின்னல் பாய்ச்சல்!

சட்டடியாய் விழுந்து கிடக்கிற அய்யாவை, ஓரப் பார்வை பார்த்தாள், அந்தப் பரபரப்பிலும்.

தெருவில் இவளை மாதிரியே மின்னல் பாய்ச்சலாக ஓடுகிற பெண்கள். அவர்களின் 'தக்... தக்... தக்' நடை. தரை அதிர்வு. ரப்பர் குடங்களின் உராய்வுச் சத்தம்.

இவளும் தண்ணீர் குழாய் நோக்கி ஓடினாள். மதிய நேரம், அவ்வளவாக பெண்கள் கூட்டம் இல்லை. நெரிசல் இல்லை.

மளமளவென்று தண்ணீர் எடுத்தாள். பாவாடை நனைந்து, இடது காலோடு அப்பியது. இடுப்பு தாவணி யிலும் நனைவின் சொதசொதப்பு!

மனசுக்குள் அய்யா. சட்டடியாக விழுந்துகிடக்கிற ஐயா. கண்ணுக்குள் மட்டும் உயிர்ச்சுடர் துடிக்கிறது.

'இருக்கட்டா, அணையட்டா' என்று அலைபாய்ந்து தவிக்கிறது. மொய்க்கிற ஈக்களுக்கு மத்தியில் கட்டிலோரம் தரையில் உட்கார்ந்திருக்கிற அம்மா. 'பூவும் பொட்டும்

போய்விடுமோ' என்ற மனபாரத்தில் அவள், சுவரில் சாய்ந்து கிடக்கிறாள்.

நெகிழ்ந்து அவிழ்ந்த தலைமுடி வலது தோளில் குலைந்து கிடக்கிறது. உலர்ந்த உதடுகள், சோகத்தில் கறுத்த முகம், திரைவிழுந்த புருஷனின் கண்ணிலேயே கண் பொருந்திய நங்கூர நிலை. திகில் கடந்த இறுக்கம். முடிவறிந்துவிட்ட மனசின் கனம். கண்ணோரங்களில் நீர்த்திரளாக நின்று துடிக்கிற மனம்.

நல்லியிலிருந்து சீறிச்சினந்து தெறிக்கிற தண்ணீர். வெள்ளிக் கற்றையாகப் பாய்கிற தண்ணீர். குடத்தின் மீது குடமாக வைக்கிறாள். நிறைந்த குடத்தை ஒரு லாத்து லாத்தி... தூக்கி... இடுப்பில் வைத்து... அதன் கழுத்தை இடதுகையால் வளைத்து... ஒருசாய்வான நிலையில் நடந்து வருகிறாள் ராசாத்தி. நனைந்த பாவாடை, கால்களுக் கிடையில் 'லடப், தடப்' என்று சத்தம் போடுகிறது.

அவளுக்குள் பழைய அய்யாக்கள். திடமாய் நடந்து திரிந்த அய்யா. க்ஷயரோகம் முகம் காட்டாத பழைய ஐயா. ஓங்குதாங்கான திரேகத்தோடு தாட்டியமாய் நடந்து அலைந்த ஐயா. முரட்டு ஐயா. மூர்க்கமான ஐயா.

அவர் தெருவில் நடந்தாலே, வீட்டுக்குள் ஒரு நடுக்க அலை பரவும். தோல் செருப்புதான் அணிவார். கனத்த செருப்பு. நாலு விரல் கனம். அடிப்பாகத்தில் நிறைய ஆணிகள். குமிழ் ஆணிகள். மண் தரையில் எட்டு மேல் எட்டு வைத்து நடந்து வந்தால் ஆணிகள் நெறுநெறுக்கும். "சர்ர்ருக் சர்ர்ருக்..." என்று கர்ஜிக்கும். அந்தக் கர்ஜனையின் கம்பீரத்தில் அடிவயிறு கலங்கும். பயத்தில் பதைக்கும்.

கோபத்தில் அய்யா முழித்தால், அய்யனார் சாமி கண்ணைப்போல, அகன்றிருக்கும். தெறித்து விடுவதைப்

போல கருமணிகள் புடைக்கும். சிவப்பு நரம்புகளில் இரத்தச் சீறல்கள் தெரியும்.

பார்த்தாலே குடலைப் புரட்டிக்கொண்டு வரும். மனசு கிடந்து படபடக்கும்.

எந்நேரமும், வேலை, வேலை என்றுதான் பறப்பார். காட்டில் வேலை, வீட்டில் வேலை, தொழுவத்தில் வேலை... ஒன்றும் ஜோலியில்லையென்றால், மாட்டைப் பத்திக் கொண்டு மேய்க்கப் போய்விடுவார்.

'இரண்டு கட்டு வைக்கோலாச்சும் மிஞ்சுமே' என்ற நினைப்பு. வியர்வை வழிந்துகொண்டே இருக்கும். அதற்காகவே ஜென்மம் எடுத்தவர் போல பாடுபடுவார்.

அவர் உழவு என்றால், ஊர் மெச்சும். மேழியை அழுந்தப் பிடிப்பார். உடம்பின் பாரம் முழுவதையும் மேழியில் இறக்குவார். கொழுமுனை, நிலத்தின் இறுக்கத்தைப் பிளந்து வகிர்ந்துகொண்டே முன்னகரும்.

அருகு வேர்களெல்லாம் 'மடேர் மடே'ரென்று அறுபடுகிற சத்தம் கேட்கும். உடைந்து நெளிந்து விலகிச் சரிகிற மண்ணின் மிருதுவும் குளிர்மையும் பாதத்தில் முத்தமிடும்.

அப்பேர்ப்பட்ட பாட்டாளி. ஆனால்—

சிரிக்கவே மாட்டார். அவர் சிரித்து அம்மா கூடப் பார்த்திருக்கிறாளோ என்னவோ தெரியவில்லை. ராசாத்தி பார்த்ததேயில்லை. ஐயாவின் போட்டோ ஒன்றேயொன்று புகைபடிந்த பழுப்பு நிறத்தில் சுவரில் தொங்கும். அதில் கூட முறைத்துக் கொண்டும், விறைத்துக் கொண்டும்தான் இருக்கிறார். சிரிப்பு என்கிற வாடையே கிடையாது.

மனசின் அழகுகளையெல்லாம், மலர் இதழ்களை யெல்லாம் வியர்வையாகவே கொட்டிவிடுகிறாரோ என்னவோ... வீட்டுக்குள் இருக்கும்போதெல்லாம் கோபமும், சிடுசிடுப்பும்தான். முறைப்பும், அனல் முழிப்பும், எரிச்சலான அதட்டல்களும்தான்.

அய்யா என்றாலே அதட்டல், மிரட்டல், அச்சுறுத்தல் தாம்... புலியின் உறுமலும், சிங்கத்தின் கர்ஜனையும்தான்.

மதிய வெயிலின் உக்கிரம். தெருப்புழுதியே வெள்ளிக் கடலாய் ஜொலித்தது. ஈரக்கால்களில் அப்புகிற சுடு புழுதி. சுகமான வெதுவெதுப்பாகி விடுகிற மறுகணம். ராசாத்தி அதையும் உணர்ந்தாள்.

ஈரப்புழுதியோடு சேர்ந்து ஒட்டிய நீளமான சருகு. காய்ந்து உலர்ந்த சோளப்பயிர்த் தோகை. வலது காலில் ஒட்டிய சருகு, வலது கெண்டைக்காலையும் வருடியது. உரசியது. காந்தலான கூச்சம்.

குடத்துடன் நின்றாள். சற்றே குனிந்து, அந்தச் சருகை எடுத்து காற்றில் விட்டாள். அந்நேரம் நிமிர்ந்த அவள் பார்வை. அவள் பார்வை மோதிய அந்த வீடு. மின்னல் சொடுக்குகிற ஒரு கணம். அக்கணத்தில் கண்ணுக்குள் விழுந்த அந்தப் பரவசம். மனசையே குளுமையாக்குகிற வசந்தப் பசுமை. தளிரின் புதுமைப் பேரொளி.

அந்த வீட்டில்...

வாசலை ஒட்டிய நடையில்—

கைலி மட்டுமே உடுத்தியிருந்த ஆண்மகன். ரோமம் நிறைந்த வெற்றுடம்போடு மல்லாக்கப் படுத்திருக்கிற அவன். அவனது நெஞ்சில் அஞ்சு வயசுச் சிறுமி. அவன்

ஏதோ விளையாட்டு காட்டுகிறான். கிசுகிசு மூட்டுகிறான் போலும். அந்தச் சிறுமி குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கிறாள். சலங்கைச் சிரிப்பு. சிரிப்ப(ா)ணி. எச்சில் வழிய வழிய சிரிப்பு. வழிகிற எச்சில், கண்ணாடி நூலாக... அவன் மார்பு ரோமங்களில் படர்கிறது.

அந்தத் தம்பலப் (வண்ணத்து) பூச்சியின் சிறகடிப்புச் சிரிப்பு. சிரிப்பு வர்ணங்கள். வர்ணப் பேரொளியின் அலையடிப்புகள். அந்தச் சிறுமியின் பிஞ்சுப் பாதங்கள் அவன் தாடையில் உதைக்கின்றன. உதையின் மகிழ்ச்சி யில் சுகவேதனைப்படுகிற அவன். அந்த அப்பன், கொந்தளித்துச் சிரிக்கிற பாசத் தகப்பன்.

மின்னலாய் அவளுக்குள் பாய்ந்த அந்தக் காட்சி. அந்தக் காட்சியின் இன்பத் ததும்பல். அதன் நுரை வழிவுகள்.

ராசாத்தியால் இயல்பான வேகத்தில் நடக்க முடிய வில்லை. மனமயக்கத்தில் அவள். கனவில் நடப்பவளைப் போல... மெதுநடை. பிரக்ஞையிழந்த நடை.

வீட்டுப் படியில் ஏறினாள். வட்டத் தொட்டியின் விளிம்பில் குடத்தை வைத்துச் சாய்த்தாள். தளர்வான பாரத்தோடு சரிகிற 'பொத, பொத' சத்தம். ஊற்றிக் கொண்டே கழுத்தைச் சாய்த்து உள்ளுக்குள் பார்த்தாள்.

உயிர் கழன்று திருகுகிற 'கொரட், கொரட்'டென்கிற இழுவைச் சத்தம். அசைவற்ற அய்யாவின் எலும்புக் கூடு. மொய்க்கிற ஈக்கள். உட்காருவதும்— பறப்பதுமான கறுப்பு ஈக்கள். சோகத்தில் உறைந்து போனவளாக அம்மா. சுவரில் சாய்ந்த தலையோடு கவலைகள் குவிந்த கண்ணின் நிலைத்த பார்வையோடு...

வெற்றுக் குடம் இடுப்பையும், ஈரப் பாவாடை காலையும் கவ்விப் பிடிக்க... ராசாத்தி தெருவுக்குள் இறங்கினாள். அவள் அவளுக்குள் இறங்கிப் பறந்தாள்.

**அ**ப்ப ஏழு வயசிருக்கும், ராசாத்திக்கு. பூப்போட்ட கவுனும், ஜட்டியும் போட்டிருப்பாள். தலைமுடியைச் சீவி இழுத்து, உச்சியில் ரப்பர் போட்டு, பூ வைத்திருப்பாள் அம்மா. குளிப்பாட்டி, சீவிச் சிங்காரித்தாலும்... அடுத்த நிமிஷமே தெருப் புழுதிக்குப் போய்விடுவாள். சிட்டாய்ப் பறந்துவிடுவாள்.

அவளுக்கு தெருப்புழுதி என்றால் உயிர். சுகமாக இருக்கும். அதன் 'மெத்... மெத்...' என்கிற குழைவு; பாத விரல்களுக்கிடையில் பதுங்கிப் புகையாகிற அந்த அழகு. உட்கார்ந்தால் தாய் மடிமாதிரி சந்தோஷமாக இருக்கும்.

குதூகலத்தில் மனசு சிட்டுக் குருவியாகச் சிறகடிக்கும்.

புழுதியில்தான் பொழுதுக்கும் விளையாட்டு. புழுதி என்றால் ராசாத்திக்கு ரொம்பப் பிடிக்கும். விளையாட மட்டுமல்ல, திங்கவும் ரொம்ப ருசியாக இருக்கும்.

கைநிறைய புழுதியை, அள்ளுவாள். உள்ளங்கையே சொளகு மாதிரி புழுதி மண்ணைப் புடைக்கும். தெள்ளித் தெள்ளி... குறுமணலை நீக்கிவிட்டால்... மாவுப் புழுதி மட்டுமே மிஞ்சும். அதை அப்படியே வாயைத் திறந்து கொட்டினால்...

அந்த வாசமே மனசை மயக்கும். அந்த ருசிவேறு. வாயின் ஈரம் முழுவதிலும் 'கப்'பென்று போய் அப்பிக் கொள்கிற அந்த உஷ்ண வாசம். புழுதி ருசி. உள்நாக்கெல்லாம் மணக்கும்!

அன்றைக்கும் அப்படித்தான்.

தெருப் புழுதியில் கால்களை அகட்டி உட்கார்ந்திருந்தாள். புழுதியிலேயே உயிர் கலந்து கிடந்தாள்.

சுற்றிச் சுழலும் மொத்தப் பிரபஞ்சத்தையே மறந்து விட்டாள். அவளது உள்ளங்கையே உலகம். அதில் மாவுப் புழுதி. மனசையே கிறங்கடிக்கிற போதைப் புழுதி. உயிர் முழுவதும் உள்ளங்கைப் புழுதிக்குள் மயங்கித் திளைத்த தருணத்தில்—

உச்சி மயிரை யாரோ பற்றுகிற உணர்வு. உச்சி மண்டையில் தீ வைத்த மாதிரி காந்தல். நிமிர்ந்து பார்த்தால்... பேய் முகம். கோபமும், ஆத்திரமுமாக கனல்கிற கண்கள். அய்யாவின் முகப் பயங்கரம்.

திடுக்கிடுவதற்குள்— அசட்டுச் சிரிப்பு சிரிக்க முயல்வதற்குள்— அந்தப் பிஞ்சுக் கன்னத்தில் தீக்கங்கு வைத்த மாதிரி, அய்யாவின் அடி. கலப்பை பிடித்து மரத்துப் போன முரட்டுக் கையின் மூர்க்கம். 'பளார், புளார்' என்ற மின்னல்கள். பூங்கன்னத்தில் தீச்சூடுகள். வீறிட்டலறித் துடித்த அந்த மொட்டு.

கோபத்தில் கனன்ற அய்யா முகம். தீக்கண்ணின் உக்கிரம்.

"இனிமே... மண்ணைத் திம்பியா? திம்பியா? தின்னே... ஒன்னைக் கொன்னே போடுவேன்... ராஸ்கல்"

பதறித் துடித்துப் போன ராசாத்தி. ஜட்டி பூராவும் அச்ச மூத்திரம். நாற்ற நனைவு. அன்றைக்குப் பூராவும் அழுதாள். உறங்கும்போது கூட விசும்பினாள். நெஞ்சு வெடிக்கிற விசும்பல். பதறிப் பதறி விழித்தாள்.

மறுநாள் காய்ச்சல் வந்துவிட்டது, பயத்தில்.

தண்ணீர் எடுக்கிற வேலை முடிந்தது. அய்யாவை எட்டிப் பார்த்த ராசாத்தி, சுவரில் சாய்ந்து கிடந்த அம்மா முகத்தையும் பார்த்தாள். அதே நிலைத்த பார்வை. மௌன அடர்த்தி. மரண மௌனம்.

அம்மா ஏறிட்டுப் பார்க்கவேயில்லை, இவளை. எந்தச் சமிக்ஞையும் காட்டவில்லை.

இவளாகவே அடுப்பங்கரைக்குள் போனாள். அம்மா செய்யக்கூடிய வேலைகளை ஆரம்பித்தாள். அடுப்பைப் பற்றவைத்தாள், ராசாத்தி.

அடுப்பில் எரியும் ஜ்வாலையையே பார்த்தாள். அதன் செந்நிறமும் நீலநிறமுமான அலைவு...

...ஆறாப்பு படித்துக் கொண்டிருந்த நேரம். ஆண்டு விழா விளையாட்டுப் போட்டியில் இவளுக்கு ஒரு பரிசு. பிளாஸ்டிக் தட்டு. ரோஸ்கலர் பூப்போட்ட தட்டு.

உலகமே உள்ளங்கைக்குள் வந்துவிட்ட மாதிரியோர் பரவசம், சிறுமி ராசாத்திக்கு.

அந்தப் பட்டாம்பூச்சிக்குள் விசிலடிக்கிற மனசு. மென்சிறகடிப்புகள். கொந்தளிக்கிற மனஉல்லாசம். தரையில் கால் பாவாத உற்சாகப் பெருக்கு.

விழாவில் வாங்கிய பரிசுத்தட்டுடன் தெருவே தூள்பறக்க ஓடிவந்தாள், ராசாத்தி. நீலக்கலர் பாவாடை கல்லெறிபட்ட தெருக்கோழியாக பதறியடித்தது. அவளுக்கு முந்திக் கொண்டு ஓடுகிற மனசு...

...அம்மாவிடம் போய்க் காட்டணும். ஆனந்தக் கூத்தாடணும். கூத்தாடிக் கொண்டாடணும். அந்தப் புறாக்குஞ்சுக்குள் ஆவல்பறப்பு, கனவுச்சிறகுகள்.

"எம்மா... எம்மா"

"என்னடி?"

"இந்தா... பாரு"

"என்னடி இது, தட்டு?"

"எனக்குத்தான் பரிசு. ஓட்டப் போட்டியிலே நாந்தான் பஸ்ட்"

"அப்படியா கண்ணு"

"ஆமம்மா... எல்லாரும் பாராட்டுனாங்க. எட்டாப்பு சாருக 'வெரிகுட்'னு தட்டிக் குடுத்தாரும்மா"

"அடியாத்தி... நெசம்தானா? எங் கண்ணு.... ஏஞ் செல்லம்... எந் தங்கப் பெட்டி.... என் ராசாத்தீ..."

அம்மாவையும் தொற்றிக் கொண்ட இவளது சந்தோஷம். அம்மாவின் முகப் பூரிப்பு. கன்னக் கதுப்பெல்லாம் பூப்பிரகாசம். கண்ணில் ஒரு மின்னல். அவளின் சீராட்டு மழையில், கொஞ்சல் நதியில்— நனைகிற மனப் பரவசம். நனையப் போகிற பரவசம்.

இன்னும் தெருப்புழுதியில் பறந்துவருகிற ராசாத்தி. வீட்டுக்குள் போனவுடன் நடக்கப்போகிற கூத்தாட்டமும், கொண்டாட்டமும்.

இப்போதே அவள் மனசுக்குள் மின்னுகிற ஒளி முகங்கள்.

ஆவல்நதியாக உருண்டோடி வருகிற ராசாத்தி. வாசல்படியில் 'தக்'கென்று அதிர்ந்து வைக்கிற பிஞ்சுப் பாதம். ஒரு குதி குதித்தாள்.

உள்ளே... அய்யா. காட்டுக்கத்தலான அய்யாவின் கோபச் சத்தம். சிடுசிடுத்த முகம். கோப விறைப்பில் இவளைப் பார்க்கிற கடுகடுப்பான கண்கள். ஆத்திர ரூபமாய் அவர்.

பக்கென்றது இவளுக்குள். விம்மி ஊதிப் பருத்த பலூன் 'டொப்'பென்று வெடித்த மாதிரியிருந்தது, ராசாத்திக்கு.

எரிச்சலாகக் கேட்கிற அய்யா.

"என்ன? என்னத்துக்கு இப்புடி ஓடியார்றே? கொள்ளையா போவுது?"

பதறி நடுங்குகிற பிஞ்சுமனம். மழையில் நனைந்த கோழிக்குஞ்சு.

"பரிசு... இந்தத் தட்டு... பஸ்ட்"

அவளுக்குள் நாத் தடுமாற்றம். உலர்ந்து போன நாக்கு. பிடிபட்ட சிட்டுக் குருவியாக முழித்தாள்.

"என்னன்னு கேக்கேன் இல்லே?" அதட்டலில் உயர்கிற குரல்.

"ஒட்டப் போட்டி... பள்ளிக் கோடத்துலே.... பரிசு"

"பள்ளிக்கோடத்திலியா? படிக்குற சோலியில்லியா? ஓடுறதுக்கும் ஆடுறதுக்கும்தான் பள்ளிக்கோடமா? ஆடுகாலிக் கழுதை. கொண்டா"

வெடுக்கென்று பிடுங்கப்படுகிற தட்டு. கண்டிப்பும் மிரட்டலுமாய் குரல். அனல் பறக்கிற முகம்.

"உப்புக்கல்லுக்குக் கூடப் பெறாத தட்டு... இது என்னத்துக்கு? ச்சேய்..."

*ஆத்திரமும் எரிச்சலுமாய் தூக்கியெறியப்பட்ட தட்டு. உருண்டு, சுவரில் மோதி, அங்கே கிடந்த கோழிப்பீயில் சாய்கிற ராசாத்தி மனசு. வெட்டுக்காய இரத்தமாய் பூஞ் சிறகின் கண்ணீர்.*

*நடுங்கிக் குலைந்துபோய் வெடவெடத்தாள்.*

*அய்யா போனபிறகு...*

*அம்மா மடியில் ஓடிப்போய் விழுந்த ராசாத்தி. அடிபட்ட பூச்செண்டாக மடியில் குலுங்குகிற மகளின் சின்ன முதுகு.*

*அழுகைக் குழைவும், பாசக்கனிவுமாக பூஞ்சிட்டை வாரியணைத்து, அழுதுவெடித்த அம்மா. கசந்த மனசி லிருந்து கசிந்து வருகிற ஊமைக்கண்ணீர், ராசாத்தியின் செவிமடலில் விழுந்து... சுடுகிறது.*

*இப்படியே ராசாத்தி அனுபவங்கள். மனசைக் கீறிய சம்பவங்கள். கீறிய காயத்தில் உப்பை அப்புகிற காந்தலான அனுபவங்கள். அனுபவ வரிசைகள்.*

*இதுதான் அய்யா. கொதிக்கிற மதிய வெயிலாகவே அய்யா. பாசநிலாக் குளுமையேயில்லாத அய்யா. உலர்ந்த அய்யா. அன்பேயில்லாத அய்யா. அய்யாவாக இல்லாத அய்யா.*

*அவள் பார்த்தறிந்த அய்யா... எல்லா வருசங்களிலும் இப்படித்தான். மகளைப் பார்த்துச் சிரித்த முகம்? பாசக் கொஞ்சலான சிரிப்பு? பூச்சிந்தலான கண்கள்? குழைந்த பார்வை?*

*ஊஹூம்... ஜென்மத்திலேயேயில்லை.*

அய்யா மட்டும் ஏனிப்படி? ஆசையும், பாசமுமாய் கனிந்து எல்லா அய்யாக்களும் நெகிழ்ந்து போயிருக்க.. இவர் மட்டும் எதற்காக இப்படி? எரிக்கும் சூரியனாக... தகிக்கும் தீயாக...

எதனாலே? ஏன்?...

இருட்டுக்குள் பறக்கிற குருட்டு ஈயாக முட்டி மோதிக் குழம்புகிற ராசாத்தியின் பிஞ்சுமனசு.

**அ**ந்திமரணத்தில் ரெக்கை விரித்து அமுக்கிக் கொண்டு வருகிற இருள். பொழுதடைந்து கொஞ்ச நேரமாயிற்று.

விளையாடிக் கொண்டிருந்த சின்னச் சிட்டுகளுக் கெல்லாம் முகம் மறைத்து, உறுத்துகிற இருள்.

'கேஸ்... பூஸ்'ஸென்று இளைத்தாலும்... விளையாட விளையாட ஆசையாகத்தானிருந்தது. ஆர்வம் பொங்கத் தான் செய்தது.

அதையும் மீறிக்கொண்டு இருளோடு சேர்ந்து மனசுக்குள் பரவுகிற சலிப்பு. பயம். பசியின் இலேசான கிள்ளல்.

"அவரவரு வூட்டுக்கு அவரைக்கஞ்சி குடிக்கப் போங்க" என்ற ராகப் பாட்டோடு சிறுமிகள் கூட்டம் கலைந்தது. சிட்டாய்ப் பறந்து விட்டனர். ராசாத்தி மட்டும் ஒற்றையில் நிற்க முடியுமா? எவ்வளவு நேரத்துக்கு? வேறு வழியில்லை.

வீடு வந்தாள். வீட்டு முற்றத்தில் நின்ற நிலையில் அம்மா இன்னொரு பெண்ணுடன் பேசிக் கொண்

டிருக்கிறாள். ரொம்ப நேரமாய் நிகழ்கிற பேச்சு. கையை நீட்டுவதும், ஆட்டுவதும், நாடியில் கைவைத்து நொடிப்பதும் போன்ற பேச்சுப் பாவனைகள். அண்ணாந்து பார்க்கிற சிறுமி ராசாத்தி.

'ம்' கொட்டிக்கொள்கிற அம்மா. கோபத்தையும், சோகத்தையும் பேசித் தீர்த்துக் கொள்கிறார்கள். பகிர்ந்து ரணத்தை ஆற்றிக் கொள்கிறார்கள்.

முழங்காலைக் கட்டிக்கொண்டு முகம் பதிக்கிற மகளைக் கூட முழுசாகக் கவனிக்கவில்லை அம்மா. அம்மா முகத்தையே அண்ணாந்து நோக்குகிற ராசாத்தி.

"அவரு கொணமே அப்புடித்தான். பெறவிக் கொணத்துக்கு மட்டை வைச்சுக் கட்ட முடியுமா? என்ன செய்றது? நம்ம தலையெழுத்து கோண எழுத்துன்னா... அதுக்கு யாரு என்ன செய்ய முடியும்? பொம்பளைச் செம்மமே இப்புடித்தான். நொம்பலம் நொம்பலமா வந்து குமிஞ்சாலும், சொமந்துதான் தீக்கணும்."

"ம்...ம்... ஆம தாயீ.... நீ சொல்றதும் வாஸ்தவம்தான்."

"தலைப்புள்ளை பெத்தெடுக்குறதுன்னு... பொம்பளைக்கு எம்புட்டுத் தும்பம்? ரணம்? பயம்? நீயும் பெத்தெடுத்தவள்தானே? ஒனக்குத் தெரியும்லே?"

"ஆமாமா... அந்த ரணத்தை இப்ப நெனைச்சாலும் நெஞ்சு கெடந்து பதறுது."

அந்தப் பெண்ணின் ஆமோதிப்பு. சன்னமான அலறல்.

அம்மாவின் குரலின் சோகம் தொடர்கிறது. நாள் பட்ட காயத்தின் வலியில் கனத்துப் போகிற அம்மாவின் குரல்.

*“நா இவளைப் பெத்துருக்கேன். தலைப்புள்ளை. செத்துப் பொழைச்ச மாதிரியிருக்கு. சாவையும் நரகத்தை யும் பாத்துட்டுத் திரும்புன மாதிரியிருக்கு. எப்புடியோ... வவுத்துப் பாரம் கழிஞ்ச ரணத்துலே கெடக்கேன். எங்கம்மா வூட்லே இருக்குற என்னைப் பாக்க வாராரு, எங்க வூட்டு ஆம்பளை. செத்துப் பொழைச்சிருக்குற பொண்டாட்டியை பாக்க வாராரு. வந்து அவரு கட்டுன கூத்தைப் பாக்கணுமே...”*

*“என்ன கூத்து பண்ணுனாரு?”*

*“ ‘என்ன செய்யுது, ஏது செய்யுது, நல்லாயிருக் கீயா’ன்னு அக்கறையா பதறிக் கேக்கணும்லே?”*

*“ம்?”*

*“வந்தாரு. பாத்தாரு. பொறந்துருக்குறது பொட்டைன்னு தெரிஞ்சவுடனே ‘காச்சு, மூச்சு’ன்னு கத்த ஆரம்பிச்சுட்டாரு. ‘ஏன் பெத்தே, எதுக்குப் பெத்தே’ன்னு கூவக்காடு போடுதாரு. தரைக்கும் கூரைக்குமா ‘தங்கு, பொங்கு’ன்னு குதிக்காரு.”*

*“ஐயய்யோ... அடப்பாதரவே! இப்புடியும் ஒரு மனுசரா?”*

*“நாம என்ன ஆசைப்பட்டா... பொண்ணைப் பெத்தோம்? அதுவா பொறந்தா, அதுக்கு நா என்ன செய்ய? இவரு என்னடான்னா கோபம் கோபமாப் பேசுறாரு. குடிமுழுகிப் போனமாதிரி கூப்பாடு போடுதாரு. கேவலப்படுத்துனாரு. ஆசையையும் அன்பையும் எதிர் பார்த்தா... ஏறுக்கு மாறா அவமானப்படுத்துனாரு. குன்னிப் போய்ட்டேன். என்னைப் பாடாய் படுத்தி அழுக வைச்சு*

அழுக வைச்சு தும்பப் படுத்துனாரு, இந்தக் கூறுகெட்ட ஆளு. இந்த ஆளைக் கட்டிக்கிட்ட நாள்லேயிருந்து மாரடிச்ச பொழைப்புத்தான். என்ன செய்றது? ஒரலுக்குள்ளே தலையைக் குடுத்துட்டு, ஒலக்கைக்குப் பயந்தா... தப்பிச்சிர முடியுமா?"

"அதானே?"

அவளது ஆமோதிப்புச் சத்தத்தையும் தாண்டிக் கேட்கிற அம்மாவின் விசும்பல். பழைய காயத்தின் ரணம்.

இன்னும் அம்மா விசும்பலோடு பேசிக் கொண் டிருக்கிறாள்.

ஆனால், ராசாத்திக்குத்தான் கேட்கமுடியவில்லை. கேட்க மனசில் தெம்பில்லை. பூவின் தலையில் தீப்பந்தம் போட்ட மாதிரி, அந்தச் சிறுமிக்குள் ஓர் அதிர்வு. அதிர்வின் பரவல்.

கொஞ்ச நேரம் ஒன்றுமே நினைக்கக்கூட முடிய வில்லை. அதிர்வில் உறைந்து போனாள். அவளுக்குள் ஒரு திணறல். தவிப்பு. கழுத்தை யாரோ திருகுகிற மாதிரியோர் கிலி.

'மண்ணுலே பொறந்து பூமிக்காத்தை வாங்குன நிமிஷத்துலேயே... அய்யா அவமதிச்சிருக்காரு. 'ஏன் இந்தச் சனியன் பொறந்துச்சு'ன்னு கூச்சல் போட்டுருக்காரு. எம் மேலே காறித் துப்பியிருக்காரு. எம் பொறப்பையே சபிச்சிருக்காரு அய்யா...'

அவளுக்குள் இருட்பூச்சிகள் பறந்தன. இனம் தெரியாத இருட்டு நினைவுகள். முகம் தெரியாத மூர்க்கம்.

'பெத்தெடுத்த ரணம் அம்மாவுக்கு. சொமந்த பாரம் வேற. பெத்தெடுத்த பின்னாலேயும் அம்மாவை அழுக வைச்சிருக்காரு. 'ஏன் பெத்தே'ன்னு கொத்திக் குதறி யிருக்காரு...'

ராசாத்திக்குள் பயங்கரம் பயங்கரமான எண்ணங் கள். இவளுக்குள் விசுவரூபமாய் ஒரு ரண காளி. சூலாயுதத்தோடு கோபாவேசமாய் ஒரு பத்ரகாளி. அய்யாவை ஒரே குத்தாகக் குத்தி... அப்படியே தூக்கி... சூலாயுதத்தை மாற்றி மல்லாக்க நிறுத்தி... ருத்ர தாண்டவமாடுகிறபோது... தலைக்கு மேல் சுழல்கிற சூலாயுதப் பிரேதம்.......

...**வீ**ட்டிற்குள் அந்நியக் குரல்கள். அடுப்பங்கரையை விட்டு வெளியே வந்து பார்த்தாள், ராசாத்தி.

சாகக் கிடக்கிற அய்யாவைப் பார்க்க வருகிற கிராமத்துப் பெண்கள். காய்ந்த கூந்தலும் துவண்ட உடலுமாய் கிடக்கிற அம்மாவின் தோளைத் தொட்டு... தொடு உணர்விலேயே துக்கத்தைப் பகிர்ந்து.... ஆறுதல் வழங்கிவிட்டுச் செல்கிற பக்கத்து வீட்டுப் பெண்கள்.

நத்தையாக உள்ளுக்குள் தலையை இழுத்துக் கொண்டாள் ராசாத்தி.

...**அ**ப்போது ராசாத்தி ஆறாப்பு. அரைப் பரீட்சை லீவ். தெருவில் விளையாடப் போயிருந்தவள். விடுபட்ட அம்பு மாதிரி ஓட்டமாய் ஓடிவந்தாள். யாராலோ துரத்தப்பட்டு ஓடிவருகிற மாதிரியான பாய்ச்சலோட்டம். தப்பு செய்துவிட்டுத் தப்பித்து வருகிற மாதிரி... திரும்பித் திரும்பி கள்ளப் பார்வை பார்த்துக்கொண்டே ஓடி வந்தாள். பயத்தில் பறவையாடுகிற சின்ன விழிகள்.

வீட்டு வாசலில் அம்மா.

"ஏண்டி இப்புடி ஓடியார்றே?"

ஓட்டமாய் ஓடிவந்து, அம்மாவைக் கடந்து, அம்மாவின் முதுகுக்குப் பின்னால் பாதுகாப்பாக நின்று கொண்டாள். 'கேஸ்ஸு, பூஸ்ஸு' என்று மூச்சிரைத்தாள்.

"எதுக்குடி இந்த ஓட்டம்? என்னமாச்சும் தப்பு பண்ணுனியா?"

"ம்"

"என்னடி பண்ணுனே?"

"அவன்தாம்மா... மொதல்லே வைஞ்சான்ம்மா. நா 'டப்பு'ன்னு ஓரடி அடிச்சுட்டு, ஓடியாந்துட்டேம்மா."

"எவன்டி?"

"முச்சாமி"

"அவனா?" என்ற அம்மாவின் குரலில் சட்டென்று ஒரு வித்தியாசம். குத்துண்ட வேதனையில் துடிக்கிற கண்கள். ஒரு ரகசிய சோகத்தை மூடி மறைக்கிற அவஸ்தை. தீக்கங்கை மென்று விழுங்குகிற வேதனை. துயர நிழல். இருள் படிந்துவிட்ட முகம்.

"ஏம்மா?"

அம்மாவின் முகமாற்றத்தையே புதிர்போலப் பார்க்கிற மகள்.

"ஒண்ணுமில்லேடி"

"முச்சாமி என்னை அடிக்க வருவானா ம்மா?"

"வரமாட்டான்" சோக இருட்டில் மூழ்கிப் போகிற அம்மா. உணர்வற்ற உணர்வில்— தன்னை மறந்த துன்ப நினைவில்— பிரக்ஞையற்று பதில் சொல்கிறாள், யந்திரமாக.

"ஏம்மா... வரமாட்டான்?"

"ஒனக்கு அவன் அண்ணன்டி. அதான்... வரவும் மாட்டான். அடிக்கவும் மாட்டான்."

"அவனா? அவனாம்மா, எனக்கு அண்ணன்? எப்புடிம்மா?"

"ஓங்க அப்பனுக்குப் பொறந்தவன். அந்த மாதிரி இன்னும் ரெண்டு பயக இருக்காங்க."

"அய்யாவுக்கா? அப்படீன்னா...?"

"ஒனக்குத் தெரியாது... போடி."

வெள்ளந்தியான ஆவலில் ஆர்வப் படபடப்பாகக் கேள்வி கேட்ட ராசாத்தியின் குறுகுறுப்பு, அம்மாவின் மூர்க்கமான சிடுசிடுப்பில் திகைத்தது. குழம்பித் தவித்தது.

அம்மாவின் கண்ணில் அடிபட்ட பறவையின் துடிப்பு. வஞ்சிக்கப்பட்ட மனசின் வலி. அதன் ரணம். ஆத்மாவையே கடித்துக் குதறிய துரோகம். ஆண் என்கிற திமிரில் செய்கிற அத்துமீறல். ஆணாதிக்க அகந்தை.

அம்மாவின் சோகத்திற்கும் கோபத்திற்குமான காரணம் புரிந்துகொள்ள முடியாத குழப்பத்தில் தத்தளித்த சின்னச் சிட்டு.

அம்மாவின் கதறல்.

"ஐயய்யோ... போய்ட்டீகளா?" என்று அம்மா மார்பில் அடித்துக்கொண்டு அழுகிற அலறல். அடுப்பங்கரையை விட்டு எட்டிப் பார்த்தாள், ராசாத்தி.

'அது'வாகிக் கிடந்த அய்யாவின்மேல் விழுந்து தலையை உலுக்கி அலறுகிற அம்மா. பூவும் பொட்டும் போய்விட்ட துக்கத்தில் வெடித்தழுகிற அம்மா.

சுற்றிலும் உள்ள பெண்கள் அவளைத் தொட்டனர். தழுவித் தாங்கினர். ஆகவேண்டிய காரியங்களைச் செய்தனர். வேலை, வேலையாக இருக்க... எல்லாரும் ராசாத்தியையே ஏறிட்டு ஏறிட்டுப் பார்த்தனர்.

'அப்பன் செத்துக் கெடக்கான். வெடிச்சு அழுகாம... புடிச்சு வைச்ச புள்ளையாரு கணக்கா.... கல்லு போல நிக்காளே கொமரிப் புள்ளே...'

என்கிற கண்டனத் தொனி, எல்லாப் பெண்களின் கண்களிலும் வெளிப்படையாகவே தெரிகின்றன. வெறுப்பின் ஊமைத் தகிப்பு.

ராசாத்திக்கு அழவே தோன்றவில்லை. மனசு கலங்கவேயில்லை. கல்லாகிக் கிடக்கிற உணர்வுகள். வெறுமையான மனநிலையில் செய்வதறியாமல் நின்றாள், ராசாத்தி.

மொய்க்கிற கண்கள். கண்டனத் தொனி நிறைந்த சமூகக் கண்கள். நிர்ப்பந்தமாய் நெட்டித் தள்ளுகிற தார்மீகக் கண்கள்.

வேறு வழியில்லை.

*“ஐயய்யோ... அய்யா...! எங்களை வுட்டுட்டுப் போய்ட்டீகளே... அய்யா”*

*என்று தாவணித்துணியை வாய்க்குள் திணித்துக் கொண்டு ‘கோ’வென்று கதறினாள், ராசாத்தி.*

*அம்மாவின் தோளில் முகம் புதைத்துக் கொண்டு அழுது புலம்பினாள். அந்தக் கணத்திலும்–*

*அதிசயமாய் அவள் உணர்ந்தாள். அவளுக்கே அவள் புதிராகத் தோன்றினாள்.*

*‘மனசுக்குள்ளேயிருந்து துக்கம் வரல்லியே. வர மாட்டேங்குதே... மனுச உணர்வே செத்துப் போச்சா? அய்யா கொன்னுட்டாரா?’*

*ராசாத்தி அழுவதைப் பார்த்த திருப்தியில்... பக்கத்து வீட்டுப் பெண்களும் ஒப்பாரி பாடத் துவங்கினர்.*

**தீபாவளி மலராக வந்த**
**‘இதயம் பேசுகிறது’ (18–10–98, 25–10–98)**
**இதழில் இருவாரச் சிறுகதையாகவும்,**
**முத்திரைச் சிறுகதையாகவும் பிரசுரமாயிற்று.**

# மானத்தீ

**வீ**ட்டுக்கும் வாசலுக்குமாக நிலைகொள்ளாமல் நடந்த ஆவுடைச்சிக்குள் சிடுசிடுப்பு. வாசல்படியில் நின்று மேற்கில் கடுப்போடு பார்த்தாள். கண்ணில் வந்து அப்புகிற ஏமாற்றம். மேலும் முறுக்கேறுகிற கடுப்பு.

"ச்சேய்... இவளை நம்பிக்கிட்டு காத்துக் கெடக்குற என்னைத்தான் செருப்பால அடிச்சுக்கணும்."

வெக்கையான முணுமுணுப்பு. எதிர்வீட்டுக் கூரை நிழலைப் பார்த்தாள். இளமதியமாகிவிட்டது. ஏறுவெயில் தீக்கற்றையாக அறைகிறது.

சித்திரை மாச வெயில்... அக்னி நட்சத்திரம். கூலிசனத்துக்கு வேலை சோலி இல்லை. காடுகரைகளில் கோடை வெள்ளாமை ஜீவன் செத்துக் கிடக்கிறது. தீப்பெட்டி ஆபீஸ்களுக்கு வேனில் போகிற பிள்ளைகள் பாடு கவலையில்லை. வாரம் முடிந்தால் கையில் சம்பளம்.

காடு கரையை நம்பிக் காத்துக்கிடக்கிற கூலிக் காரிகள் பாடுதான் திண்டாட்டம். வேலையுமில்லை... கூலியுமில்லை. கடைக்காரரிடம் கடன் சொன்னால் எரிந்து விழுகிறார். எப்படி வயிற்றைக் கழுவ? எதை வைத்து உலை வைக்க?

"ம்மா... என்னமாச்சும் தீம்பண்டம் இருக்காம்மா?"

சின்னப்பயல் இங்கிதமாக— பதமாகக் கேட்கிறபோது, குடலையே கவ்வுகிற மாதிரியோர் பிசைவு... அடிவயிற்றில் ஜிலீரென்று பரவுகிற வெறுமை.

"இல்லப்பா கண்ணு..." அசைய முடியாமல் நா கனக்கிறது. வாய் வரமாட்டேனென்கிறது.

"கடையிலே போய் வாங்கிடட்டாம்மா? காரூவா முறுக்கும்மா."

"வேண்டாம்ப்பா... கடன் இல்லேன்னுட்டாக."

"ஏம்மா...?"

"பாக்கி நெறைய இருக்குல்லே கண்ணு... ஏஞ் செல்லம்... ஏந் தங்கமில்லே. பொறுத்துக்கடா... சாயங்காலம் துட்டு தாரேம்பா. முறுக்கு வாங்கிக்க."

கனிந்து குழைகிற தாய்மைக் குரலில் ஈரநெகிழ்வு. கண்ணீர் கசிகிற மன உடைவு.

அம்மாவைச் சந்தேகமாக நிமிர்ந்து பார்த்த நாலாப்புப் பயல்.

"என்னடா... தங்கப்பெட்டி?"

"இப்ப இல்லாத துட்டு... சாயங்காலம் எங்கிட்டிருந்து வந்துரும்?"

"தலையை அடகு வெச்சாச்சும் ஒனக்கு முறுக்கு வாங்கித் தாரேண்டா."

"தலையை யாரு அடகு வாங்குவாக?" அப்பனுக்குத் தப்பாமல் வந்து பிறந்திருக்கிற பயல். அதே குணம். துடியான வாய். ஆவுடைச்சிக்குள் இனம்புரியாத பெருமிதம்.

"முள்ளு வெறகு பொறுக்கப் போறேண்டா... ஆத்துக்காட்டுலே. வெறகுக்கட்டை போட்டோம்னா எந்த மகராசியாச்சும் இருவது ரூவா தரமாட்டாளா?"

"அப்ப சரி."

மகனின் சின்னக் கண்ணில் திருப்தி ஒளி. நம்பிக்கை மின்னல். தொலைதூர முறுக்கு. சாயங்கால ருசி.

ஒரு துள்ளலோடு விளையாட ஓடியவன், உருவிக் கொண்ட டவுசரை அர்ணாக் கயிற்றில் சொருகிக் கொண் டான். தவ்வித் தவ்விக் குதித்தோடிய அந்தச் சின்ன ஆட்டுக்குட்டி. தெருப்புழுதி மாவுத் தூசியாக எழும்ப... ஓடுகிற சிறுவனின் ஏக்கம். தாகம். இரத்தப் பிறப்பின் ஆசை.

விறகு பொறுக்க ஒற்றையாக எப்படிப் போக? ஆற்றுக்காட்டில் அசோக வனமான வேலிக்காடு. ஆளை வளைத்து கழுத்தைத் திருகினாலும் யாருக்கும் தெரியாது. அத்தனை அடர்த்தி. ஈ நுழையக்கூட இடமிருக்காது. சுற்றுமுற்றும் ஒரு சுடுகுஞ்சுகூட இருக்காது.

அதற்குத்தான் கண்ணாத்தாவைக் கேட்டிருந்தாள். அவளும் இவளைப் போலத்தான். கூலிக்காரி. கூரை நிழலில் நாலு நாளாக பேன் பார்த்துக் கொண்டிருக் கிறவள். பேனைத் திங்கவா முடியும்?

“என்ன ஆவுடைச்சி... இப்படியே காலை நீட்டிக்கிட்டு உக்காந்திருந்தா என்னத்தைத் திங்க?”

“என்ன செய்யச் சொல்லுதே? கடுங்கோடை. மழைத்தண்ணி பண்ணுகிற கூத்து. நம்ம காலை ஒடிச்சு கூரை நெழல்லே போட்டிருக்கு.”

“காலைக் கட்டிக்கிட்டு உக்காந்திருந்தாலும், நேரத்துக்கு நேரம் வவுறு பசிக்கும்லே?”

“என்ன செய்ய?”

“முள்ளு பெறக்கப் போவமா?”

‘ஏறுவெயில் வருவதற்கு முன்பே இளவெயில் இருக்கும்போதே போய்விடலாம்’ என்று சொல்லியிருந்தாள். ‘வந்துருவேன்’ என்று சத்தியம் பண்ணாத குறையாகச் சொல்லிவிட்டுப் போனவள்.

இன்னும் ஆளைக் காணோம். பார்த்துப் பார்த்து கண் பூத்துப் போனதுதான் மிச்சம்.

மறுபடியும் வாசலுக்கு வந்தாள் ஆவுடைச்சி. மேற்கில் கண்ணை உயர்த்தினாள். தெரு நுனிவரை பார்வையை எறிந்தாள். ஒரு பாவாடைச் சிறுமி வந்தாள். கண்ணாத்தா வீட்டுக்கு எதிர்வீட்டுப் பிள்ளை.

“அடியே... வீட்லே கண்ணாத்தா இருக்காளா?”

“இல்லியே... வீடு பூட்டிக்கிடக்கு.”

“பூட்டிக்கெடக்கா?”

புரியாமையில் திகைத்தாள் ஆவுடைச்சி.

“ஆமா... விடியக்காலத்துலேயே வேலைக்குப் போய்ட்டாக. குருசாமிக்கோனாரு புஞ்சைக்கு பருத்தி வெதை ஊனப் போயிருக்காக...”

“அடப்பாதகத்தீ...” மன அதிர்வு வார்த்தையாக வீறிட்டது. நம்பி ஏமாந்த கேணத்தனம். அவளுக்குள் சண்டாளமாக வந்த கோபம்.

“கள்ளச் சிறுக்கி... வேலை கெடைச்சவுடனே அரவ மில்லாம ஓடிட்டாளே... களவாணிச் சிறுக்கி... ஒரு வார்த்தையாச்சும் சொன்னாளா? ஊமைக்கள்ளி...” வார்த்தைகளாக வடிகிற கோபத்தீ.

‘இப்ப என்ன செய்ய?’ வேலிப் புதராக மறித்து நிற்கிற கேள்வி. சாயங்காலம் வந்து ‘தீம்பண்டம்’ என்பானே பயல்? மதியத்தில் வந்து ‘கஞ்சி... கஞ்சி’ என்று குதிப்பானே... ‘தலையை யாரும் அடகு வாங்கலியா’ என்று வாய்த்துடியாகக் கேட்பானே.

கண்ணில் ஏமாற்றமும் நீரும் நிழலாட, ஏக்கமாக நிமிர்ந்து பார்க்கிற வயிற்றுப் பிள்ளையைக் கண்கொண்டு பார்க்க மனசில் உயிர் இருக்குமா? தைரியம் வருமா?

ஒற்றையாகப் போகவா? ஆற்றுக் காட்டிலே, வேலிக் காட்டுக்குள்ளே தன்னந்தனியாகப் போக முடியுமா? எப்படிப் போக? எவனாவது ஒரு காலிப்பயல் வந்து கையைப் பிடித்தால் என்ன செய்ய? எத்தனை கத்தினா லும் ஈங்குஞ்சுகூட எட்டிப் பார்க்காதே.

வேலிப்புதராக மறிக்கிற பயம். அச்சப் படபடப்பு. நெட்டித் தள்ளுகிற வாழ்க்கையாக, மகனின் ஏக்கம். ‘ம்மா... தீம்பண்டம் ஏதாச்சும் இருக்கா’ங்கிற சின்னக்குரலின் கேள்வி.

அவளுக்குள் குபுக்கென்று பீறிட்ட அழுகை. உடைந்த மனசின் சோகக் கசிவு. "ஐயோ... பாதரவே! எம் புள்ளைக்கா இந்தக்கதி வரணும்? ஏங்கண்ணு மனசுலே இந்த ஏக்கமே தலைகாட்ட வுடமாட்டேன்."

ஆவுடைச்சிக்குள் ஒரு தீவிரம். மகனின் பார்வை உசுப்பிய வேகம். வைராக்கியம். அவள் இரத்த ஓட்டப் பரபரப்பு. நரம்புகளின் விறைப்பு.

கந்தல் சாக்கைச் சுருட்டினாள். முள் நறுக்குகிற வெட்டரிவாளை அதற்குள் வைத்தாள். முள்விளாறை அடித்து அடித்து உதறுவதற்கான கட்டைக் குச்சியை எடுத்துக் கொண்டாள். காலில் செருப்பை மாட்டுகிற விறுவிறுப்பு. வெறி பிடித்தவளைப் போல கதவைச் சாத்திய வேகத்தில் முற்றத்தில் இறங்கினாள். குச்சியும் அரிவாளும் சேர்த்துச் சுருட்டிய சாக்கு தோளில்.

எதையும் நினைக்க நேரமில்லை. நினைக்க மன மில்லை. மனசெல்லாம் மகனின் ஏக்கப் பார்வை. பேச்சு மாறிய கண்ணாத்தாவினால் உண்டான வெளம், கோபத்தீ.

தெருவில் மேய்ந்த கோழிகள் கலைந்து சிதறின. கழுத்து நீண்ட சேவல் துள்ளிப் பதறி ஓடியது. 'வெக், வெக்'கென்று நடந்தாள். ஆத்திர நடை. நடையின் வேகத்தில் தரை அதிர்ந்தது. 'தக், தக்'கென்று தரையின் அதிர்வு.

தெருப்புழுதி அதிர்ந்து மாவுத் தூசியாகக் கிளம்பி யது. சித்திரை மாசக் கோடை வெயில். தீயைத் துப்பிய ஏறுபொழுது.

ஆங்காங்கே வீட்டுக் கூரை நிழல்களில் பெண்கள். வாசல்படியில் தலைவைத்து உறங்குகிறவர்கள். மடம் நிறைய இளவட்டங்களும் கிழடுகளும். டீக்கடையில் 'ஜேஜே' என்று திருவிழாக் கூட்டம். டேப் ரெக்கார்டரில் பெரு முழக்கமாக 'மின்சாரப் பூவே... பெண் பூவே' என்ற பாட்டு.

ஊரைக் கடந்தாள். வண்டிப் பாதைக்குள் இறங்கிய வுடன் தாய் மனசு இருந்த இடத்தில் பெண் மனசு. 'வேலிக் காட்டுக்குள்ளே ஒத்தையிலே நிக்கவா? எவனாச்சும் குடிகாரப்பய வந்துட்டா...? கையைப் பிடிச்சு இழுத்துட்டா? ஐயையோ... அத்துவானக் காட்டிலே என்ன செய்ய? கத்தினாலும் ஏன்னு கேட்க ஓர் ஈங்குஞ்சுகூட வராதே...'

ஆவுடைச்சிக்குள் பயப் படபடப்பு. உள்தளர்வு. நடையின் வேகம் குறைந்தது. 'தக் தக்'கென்கிற தரை யின் அதிர்வு நின்றது. மென்னடையாக நடந்தாள். பயந்து பம்முகிற பூனை நடை. உள்ளுக்குள் வியர்த்துக் கொட்டியது.

வண்டிப்பாதை நெடுகிலும் வேலி மரங்கள். அதன் விளாறுகள் கன்னத்திலும் தோள் சேலையிலும் தொட்டு இழுத்துக் கேலி பண்ணுகின்றன. தினம் தினம் பண்ணுகிற கேலி. பெரிதாகச் சீண்டப்படாமல் நடந்தாள்.

ஓடை. இறங்கி ஏறினாள். மயில் குஞ்சுகள் பின்தொடர, லட்சணமற்று நடக்கிற பெண் மயில். வேலிப் புதருக்குள் ஆண் மயில்கள். நீள நீளத் தோகைகளும் நீல நிற மின்னல்களுமாக ஆண் மயில்கள்.

பயமற்றுத் திரிகிற மயில்களைப் பார்த்தாலே பயம் வருகிறது ஆவுடைச்சிக்கு. ஆளரவமற்ற அத்துவானத்தை உணர்த்துகிற மயில் நடமாட்டம்.

மைனாக்கள். மின்சார ஒயர்களில் உட்கார்ந்திருக்கும் வெள்ளை மைனாக்கள். தவிட்டு நிற மைனா. ஆதாளை யில் உட்கார்கிற வண்ணத்துப்பூச்சி. சில் வண்டுகளின் 'ங்ஙீய்ய்ங்'கென்கிற இரைச்சல்.

மயானம். செம்மண் தரை. அகத்திக் குச்சிகளும் காய்ந்த மாலைகளும். உடைந்த கொள்ளிச் சட்டித் துண்டுகள். ஒன்றிரண்டு வெள்ளெலும்புகள்.

ஆவுடைச்சிக்குள் 'பக் பக்'கென்கிறது. பயத்தின் வியர்ப்பு. சூறாவளிக்குள் சிக்குண்ட சருகாக அலைபாய்கிற குருட்டு நினைவுகள். கண்டமேனிக்கு வந்து போகிற கெட்ட கெட்ட கற்பனைகள்.

கண்ணெறிந்த தூரமெல்லாம் வெயில் எரிவு. ஊர்க்காடுகளையும் கடந்து விட்டாள். ஆடு மேய்க்கிற... மாடு மேய்க்கிற ஒரு ஜீவன், அரை ஜீவன்கூடக் கண்ணில் தட்டுப்படவில்லை.

வேலி மரங்கள், கனிந்த பச்சையில் வேலியிலைகள். வேலி மரங்கள் கோடையில்தான் செழித்து வளரும். மண்ணின் ஈரப்பதத்தையும் காற்றின் ஈரப்பதத்தையும் உறிஞ்சி வளர்கிற விஷ முள்செடிகள்.

சுடுகாட்டைத் தாண்டி வேலிக் கூப்புக்குள் நுழைந் தாள். காய்ந்த முள் கவைகள் கன்னங்கரேலென்று கிடந்தன. அதுகளில் மிதித்துத்தான் நகர வேண்டும். செருப்பே காவல் தெய்வம். செருப்புக்கடியில் நொறுங்கு கிற முள்கவையின் நெறுநெறுப்பு.

வெட்டி விறகெடுக்கப்பட்ட இடம். நாலைந்து மரங்களின் விறகுகள் வெட்டி, அப்புறப்படுத்தப்

பட்டிருந்தன. அதன் முள்கவைகள் நிறைய கிடந்தன. காய்ந்த வேலி இலைகள் தங்க நிறமாக இருந்தன. விளாறு விளாறாக இருந்த முள்கவைகள்.

ரெண்டு மூன்று கட்டுக்கு இருக்கும். இருக்கும் முள்கவைகளில் சற்று பெரியதாகத் தேடிப் பற்றினாள். கவையோடு கவையாக முள்ளால் பின்னிக் கிடக்கின்றன.

பற்றிய கட்டையை உருவி உருவி உதறினாள். உதறி உதறி உருவினாள். கட்டைக்குச்சியால் ‘சட்டேர், சட்டேர்’ என்று அறைந்தாள். தங்கத்துகள் உதிர்வதைப் போல காய்ந்த இலைகள் தரையில் விழுந்தன. அடித்த அடியில் முள்ளின் பின்னல் விலகி வழிவிட... உருவிக் கொண்டு வருகிற முள் கவையை அரிவாளால் நறுக்கினாள். நறுக்கிய முள் துண்டுகளைக் கயிற்றில் குறுக்காக அடுக்கினாள்.

தலைமுடிக்குள்ளிருந்து செவியோரங்களில் வழிகிற வியர்வைக் கோடுகள். செவியோர ரோமங்களையெல்லாம் கன்ன ஈரத்தில் நனைந்து படிந்து கிடக்கவைக்கிற வியர்வை நசநசப்பு.

வேலை விறுவிறுப்பாக நடந்தது. தரைப்புழுதி சுடத் துவங்கிவிட்டது. தட்டுவதும் உருவுவதும் நறுக்குவதும் அடுக்குவதுமாக வேலை நடந்தது மளமளவென்று.

மனசு வேலையில் ஒட்டவில்லை. எங்கோ பயத்தில் வீறிடுகிற ஆண் மயிலின் கதறலாகப் பீதி கொள்கிறது.

சின்னச் சின்ன வேற்று சத்தத்தில்கூட விருட் விருட்டென்று பதறிப் போய்த் திரும்பிப் பார்ப்பாள். குங்கும நிறத் தட்டான் வேலி முள்நுனியில் உட்கார்கிறது. நாயுருவிச் செடியின் உச்சி நுனியில் அமர்கிற பச்சை நிறத் தம்பலப்பூச்சி.

'யாரும் வந்துட்டா...?'

மனச்சிறகின் பயப்படபடப்பு.

வேலிமுள் பொறுக்க வந்த முனியக்கா. காட்டு வழியே வந்த ஒரு மூர்க்கன் அவளைப் பாழாக்கிவிட்டுப் போய்விட்டான். அரை மயக்கமாகக் கிடந்தவளை மாடு மேய்க்கப்போன சிறுமிகள் பார்த்து, ஊருக்குள் வந்து சொல்லி ஊரார்கள் போய்த் தூக்கிவந்து... இதெல்லாம் பழைய சம்பவங்கள்.

மாடு மேய்த்துக் கெண்டிருந்த ராசாத்தியை ஒருவன் பலவந்தம் பண்ணியிருக்கிறான். மல்லுக்கட்டியிருக்கிறாள். மன்றாடிப் பார்த்திருக்கிறாள். திமிறிப் போராடியிருக் கிறாள். முடியவில்லை. இந்தக் கோலத்தில் ஊருக்குள் எப்படிப் போக? ஊரார் முகங்களை எப்படிப் பார்க்க?

மருகித் தவித்த ராசாத்தி, பலதையும் நினைத்து நினைத்து உள்ளுக்குள் மாய்ந்த ராசாத்தி, அரளிக் கொட்டையில் உயிரை மாய்த்துக் கொண்ட செய்தியை... இருட்டிய பிறகு தானாக வீடு வந்து சேர்ந்த மாடுகள்தாம் சொல்லின.

கிராமக் காடுகளின் இருட்டுப் புதர்களுக்குள் ராசாத்தியின் ஆவி வெள்ளை வெயிலாகப் பரவிக் கிடக்கிறது. முனியக்காவின் கதறல்கள், தம்பலப் பூச்சியின் மென் ரெக்கை அசைவுகளில் துடிக்கின்றன.

வேலிமரப் புதரின் இருட்டுக்கு கைக்குள் இப்படி எத்தனையோ பலவீனக் கண்ணீரின் ரகசிய வெது வெதுப்புகள், பல நூறு வருஷங்களைத் தின்று புதையுண்டு கிடக்கின்றன. நறுக்கப்பட்ட வேலிக்குச்சிகள் உயரமாக

அடுக்கப்பட்டிருந்தன. இரண்டு கயிறுகள் குறுக்காக நீண்டு கிடந்தன.

ஆவுடைச்சி செய்து முடித்த வேலையைப் பார்த்தாள். கண்ணிமையிலும் நின்றாடுகிற வியர்வை மணி. 'கேஸ், பூஸ்'ஸென்று இளைக்கிற மூச்சிரைப்பு.

காலிலும் உள்ளங்கைகளிலும் குத்திய முட்கள். முள்குத்திய இரத்தப் புள்ளிகள். அதன் காந்தல்கள்.

போதும். இறுக்கிக் கட்ட வேண்டியதுதான். இதற்கும் மேல் என்றால் சுமக்க முடியாது.

ஆத்திச் செடிகள், கொளஞ்சிச் செடிகளைப் பிடுங்கி தலை முட்டுகிற இடத்தில் வைத்தாள். கயிற்றைக் கையில் எடுத்து, விறகை செருப்புக் காலால் மிதித்து மிதித்து இறுக்கினாள். இறுக்கிக் கட்டினாள்.

தொடை உயரக்கட்டு. விறகுக் குச்சி. முள்விறகு. எப்படித் தூக்க?

'யாராச்சும் இருப்பார்களா?' என்ற தேடலுடன் பார்வையை நாலாபக்கமும் எறிந்தாள். ஏமாந்து திரும்பிய பார்வை.

முள்கட்டை அசைத்தாள். கனமாக இருந்தது. நகர்த்தவே முடியவில்லை. ஒற்றையாகத் தூக்கவே முடியாது. எப்படியாவது தலைக்குப் போய்விட்டால், 'தக்கிமுக்கி'ச் சுமந்துவிடலாம். விற்றால் முப்பது ரூபாய் கிடைக்கும். சோத்துப்பாடு கழியும். மகனுக்கு முறுக்கும் பொறிகடலையும் வாங்கித் தரலாம். தின்னும் அழகைப் பார்த்து ரசிக்கலாம்.

"தின்னுடா ராசா... தின்னுடா கண்ணு...." என்று குழையும் பாச உணர்வோடு கொஞ்சலாம்.

அசையாமல் கிடக்கும் விறகுக்கட்டு. எப்படித் தலைக்குப் போகும். மறுகித் தவிக்கிற மனசோடு கை பிசைய நின்றாள் ஆவுடைச்சி.

உச்சி மதியத்துக்கு வந்துவிட்ட பொழுது. கன்னக் கதுப்பில் தீக்கோலாக சுரீரிடுகிற வெயில். கண்ணைச் சுருக்குகிற அதன் தகிப்பு.

மனசுக்குள் மகனின் முகம். வாசல்படியில் வந்து உட்கார்ந்திருப்பான். பூட்டியிருக்கிற கதவில் அம்மாவைக் காணாமல் தவித்திருப்பான்.

'அம்மா எப்ப வருவா? எப்ப முறுக்கு வாங்கித் தருவா?' என்ற ஏக்கத்தோடு வாடிக் கிடக்கிற மதன்.

ஆந்திராவுக்கு வேலைக்குப் போய்விட்ட புருஷன். காகிதமும் பணமும் அனுப்பாமல் கவலைப்பட வைத்திருக்கிற அந்தப் பாவி.

முறுக்குக்காக வாசல்படியில் தண்ணீர் குடிக்காத உலர்ந்த வாயின் பிசுபிசுப்புடன் ஏங்கிக்கிடக்கிற மகன்.

மனசின் ஒவ்வோர் அணுவிலும் மகனின் துடிப்பு. நினைவின் ஒவ்வோர் அசைவிலும் மகனைப் பார்க்கிற ஆவல். உயிர்த் தாகம். பாசப் பரபரப்பு.

"என்ன... ஆவுடை...?"

பக்கத்தில் வந்து நிற்கிற ஆண்குரலின் கரகரப்பு.

சட்டென்று திரும்பிய ஆவுடைச்சி. பயப்பதைப்பு. பகீரென்று அதிர்கிற உள்மனம்.

"வெறகுக்கட்டைத் தூக்கி விடணுமா?"

கருவேலங்கட்டை மாதிரி மினுமினுவென்று நிற்கிற வேலய்யா. காட்டுக் காவல் செய்கிறவன். மானாவாரிக் காடுகளின் காவலன். சம்சாரிகளிடம் வருஷக்கூலி வாங்குகிறவன்.

மடித்துக் கட்டிய வேட்டி, அகலமான பச்சை பெல்ட். மண்ணில் ஊன்றிய கம்பு. இடுப்பில் சூரிக்கத்தி. தலையில் வட்டக்கட்டாக தலைப்பாகை.

"என்ன ஆவுடை... பயந்துட்டியா?"

"இல்லே... சும்மாத்தான். திடுதிப்புன்னு பார்த்ததாலே தெகைச்சுட்டேன்."

"ஆந்திராவுக்குப் போன ஒம்புருஷன் தபால்கூடப் போடலியோ?"

"என்ன செய்ய...? எந் தலையெழுத்து... கோண எழுத்து."

"இருந்து வாழ வேண்டியவன். ஒன்னைச் சுகப்படுத்த வேண்டியவன். இளவயசு. இப்படி விட்டேத்தியா அலையு றானே... கூறுகெட்டவன். சரி சரி... கட்டைத் தூக்கு."

அவன் பேச்சின் திசை... அதன் விஷமத் திக்கு... ஆவுடைக்குள் 'திக் திக்'கென்றது. 'பயந்த மாதிரியே ஆகப்போகுதோ...'

உள்ளுக்குள் மனப்பதைப்பு. கண்ணியில் சிக்கிய புறாவின் ரெக்கையடிப்பு. நீளமாக உருட்டாகக் கிடக்கிற விறகுக்கட்டு. அவன் குனிந்து ஒரு பக்கமாகப் பிடித்தான். இவளும் ஒரு பக்கமாகப் பிடித்தாள். முக்கித் தக்கித் தூக்கினர். கனத்த பாரம்.

"இந்தப் போல்(மின்கம்பம்)லே நட்டுக்க நிப் பாட்டுவம். நீ தலையை முட்டு... நா அடிப்பக்கத்தை வாரி விட்டுத் தூக்கி விட்டுருதேன்."

வேலய்யா யோசனை சரியாகவே இருந்தது.

"ஆட்டும்" என்றாள் ஆவுடைச்சி. அந்தக் கனத்த குச்சி விறகுக்கட்டை சிரமப்பட்டு நகர்த்தி, தூக்கி, மின் கம்பத்தில் நட்டு, வசமாக நிறுத்திவிட்டனர்.

பாரத்தைத் தலையில் தூக்குவதற்காகப் பரபரத்தாள். அரிவாள், குச்சியை எல்லாம் இடுப்பில் சொருகிக் கொண்டு சேலையை ஒழுங்குபடுத்துகிற அவசரம். துரித பரபரப்பு.

"என்ன ஆவுடை.... அவசரமா?"

"ஆமா... வூட்டுக்குப் போகணும்லே... மகன் காத்துக் கெடப்பான்."

"மகன்தானே? புருஷன் இல்லேல்லே....? இரு... ஆற அமர பேசிட்டுப் போவம்."

வேலய்யாவின் விஷமப்பார்வை. நீண்டு நெருங்கி வருகிற முன்கை... கிட்டத்துக்கு வருகிற அவனது காம இளிப்பு.

"அதுக்கு வேற ஆளைப் பாருங்க."

"ஏன்... நீ எளவயசுதானே? பசிக்கிற திரேகம்தானே?"

அவளுக்குள் பயம். பாத நரம்பு வரை பரவிப் படர்ந்த அச்ச உணர்வு. மனத் தளர்வு. வேரறுந்துவிட்ட மாதிரியோர் உள் மன அயர்ச்சி. குப்பென்று வியர்த்து படபடக்கிற மனசு. மனசுக்குள் மகனின் சின்ன முகம்.

பதற்றமும் மிரட்சியுமான இவளது முகக் கலவரத்தில் வெற்றியை உணர்ந்தவனாக நெருங்குகிற வேலய்யா. ஓடுகிற நாயைக் கண்ட தொக்கில், விரட்டுகிற நாயின் தைரியம்.

வெயிலில் தகிக்கும் அவளது கையைப் பற்றுகிற அவனது கைக் குளிர்வு. வலது கை, இடுப்பில் பின்னுகிற வெறி வேகம்.

பயத்தில் வெலவெலத்த ஆவுடைக்குள், மகனின் முகம். வாசல்படியில் வாடிச் சுருண்டு கிடக்கிற சின்னவன். 'ம்மா... தீம்பண்டம் இருக்கா?' என்கிற அவனது ஏக்கக் குரல், அடி மனசுக்குள்.

அவளுக்குள் ஒரு மாயம். சாமியின் அருள் வந்து இறங்குவதைப்போல... திரேகம் முழுவதும் நிறைகிற மகனின் நினைவு. தாய்மை உணர்வு. தாயே... ஒரு தீயாக மாறுகிற மாயம். பாசத் தீயே... மானத் தீயாக சீறுகிற கணம்.

வெறிகொண்ட ரணகாளியாக கையை உதறிய அவளது வேகம். திமிறி விலகிய அந்த ருத்ரம். இடுப்பில் சொருகியிருந்த அரிவாள், வலது கைக்கு வந்த கணம். ஓங்கிய வெறிவேகம்.

"ச்சீ நாயே... ஓடிப்போயிரு. இல்லேன்னா ஒரே போடுதான். அருவா ஒன்னை வகுந்துரும்."

இவளது ருத்ர நெருப்பின் சீற்றம். பத்ரகாளியின் உக்கிரம். பதறிப்போன வேலய்யா. சட்டென்று விலகிப் பின்வாங்கி ஓடியே போய்விட்டான்.

ரணகாளியின் உக்கிரம் தணிந்து, தன் நிலைக்கு வரவே கொஞ்ச நேரமாயிற்று. ஆவுடைச்சி,

ஆவுடைச்சியான பின்பு மின்கம்பத்தில் சாய்ந்து நின்ற விறகுக்கட்டில் தலையை நெறிக்கிற கனம். நெஞ்சுக்கூடே நெறுநெறுக்கிற பாரம். வாழ்க்கைப் போல சுமக்க முடியாத சுமை.

முறுக்கு கேட்ட மகனின் ஏக்கப் பார்வை. அது தந்த பலம். அதன் போர்க்குணம். மகன் மீதான தாய்மைத் தவிப்பு... விறகுச் சுமையை மட்டுமல்ல... இந்த உலகத்தையே கூட சுமந்து விடுகிற வலிமையைத் தந்துவிடும்.

ஆவுடைச்சி ஒரு வீராங்கனை மாதிரி... விறகுச் சுமையோடு ஊரை நோக்கி நடந்து வந்தாள். தரையே 'தக்தக்'கென்று அதிர்கிறது.

ஆனந்த விகடன், 4–7–1999

# மனப்பூ

சங்கரபாண்டிக்குள் வாசமும், வர்ணமுமாய் பூத்திருந்தது.

கல்யாண வீட்டுக் கலகலப்பு. பேச்சும் சிரிப்புமாக ஒரே கூத்து. இன்னதற்கென்றில்லை. எதையெடுத்தாலும் கிண்டல்தான். கேலிதான். நக்கல் நையாண்டிகள்தான். கண் மூக்கு தெரியாத சந்தோஷப் பேரலைகள். இதழ் இதழாக விரிந்து மலர்ந்திருந்த மனமென்மை. பந்தி முடிந்து, வெத்தலை போட்டு வாய் சிவந்து, மொய் செய்து முடித்துவிட்டு (32 ரூபாய்), சம வயசுச் சிநேகிதர்களோடு ஆட்டபாட்டமாய் பேசிக் களித்து... சிரிப்பாணிமேல் சிரிப்பாணியாக சிரித்து உருண்டு... மனசெல்லாம் ஒரு ததும்பல். நுரை பூத்துப் புரண்ட உணர்வுத் தத்தளிப்பு. மழைக்காலத் தவளையாகக் கும்மாளமிடுகிற நினைவுகள். பஸ் ஸ்டாண்டு வந்து சேர்ந்தான். வழக்கமான கைலி யில்லை. கல்யாண வீட்டுக்காகக் கட்டிய பாலியஸ்டர் வேட்டி. இழுத்து இழுத்து மடித்துக் கட்டினாலும், நழுவிக்

கொண்டோடுகிற இச்சிலாத்தி. பெரிய்ய கல்யாண வீடாக அல்லோல கல்லோலப்படுகிற பஸ் ஸ்டாண்டு. சுபமுகூர்த்த நாள். பல கல்யாணங்கள். வெள்ளையும் சொள்ளையும், வெத்தலைச் சிவப்புமாக பல கிராமத்து ஆட்கள். வர்ணக் கலவை ஜொலிப்புகளாக பூப்போட்ட சேலைகளில் எண்ணெய் வழிகிற முகங்களாகச் சுற்றுப்பட்டிப் பெண்கள். ஏகமாய் ஜனக்கூட்டம். வருகிற பஸ்ஸையெல்லாம் மோதி அப்புகிற ஜனப் பேரலைகள். அலை பாய்ந்து தவிக்கிற மனிதத் தலைகள். பஸ் ஸ்டாண்டின் தென்புறம் டவுன் பஸ்கள். வெள்ளை வெள்ளையாக அலுமினியப் பஸ்கள். ஏகப்பட்ட தகர ஒட்டுகள். தகரக் கிழிசல்கள். அரசுப் பஸ்கள். ஒட்டை உடைசல்கள்.

ஜெக ஜோதி கலர்மய அலங்கரிப்புகளோடு ஒன்றிரண்டு தனியார் பஸ்கள்.

சங்கரபாண்டி ஆர்வக் கிளர்ச்சியோடு பஸ்ஸின் நெற்றித் திலகத்தையே பார்த்தான். தன் ஊருக்குப் போகிற பஸ் எப்ப வரும்?

வடகரை... மாங்குடி... கீழராஜகுலராமன்... வெம்பக் கோட்டை என்று பல ஊர்கள். தனது ஊர் பஸ் வந்த மாதிரி தெரியவில்லை.

அலைபாய்கிற சங்கரபாண்டியின் கண்கள். ஆவல் ஆவலாகத் தேடுகிற மனம்.

சம வயசுக் கூட்டாளிகளோடு பேசிச் சிரித்து, உரசி விளையாடிய இனிய உணர்வு, மனசின் ஆழத் தூரத்தில் ஆழ்ந்துபோன நினைவு மங்கலாக...

இப்போது—

ஒற்றையாளாகி நிற்பது போன்ற பிரமை. வெறுமை. பஸ் ஸ்டாண்டு திணறுகிற ஜன சமுத்திரத்தின் ஒரு துளியாகக் கலந்து கிடந்தாலும், மனதுக்குள் அறைகிற தனிமைச் சூன்யம்.

கூடமாடச் சிரித்து உருண்ட கூட்டாளிப் பயல்க ளெல்லாம் சினிமாவுக்குப் போய்விட்டனர். இவனுக்கும் போகத்தான் ஆசை. விட்டுப் பிரிய மனசில்லை. ஆனால்—

ஊருக்குப் போயாக வேண்டிய கட்டாயம். நாலு மணிக்குள் வீடு போய்ச் சேர்ந்தாகணும். ஜெர்ஸிப் பசு. நாலு மணிக்குள் பால் பீச்சியாக வேண்டும். நேரத்திற்கு நாலு லிட்டர் பால். இவன்தான் பீய்ச்சியாகணும். முடியும். மற்ற யாரும் கிட்டத்தில் அண்ட முடியாது. கோபக்காரப் பசு. வேற்று மனித வாசனை கண்டாலே... மாடு தறிய முறிய விழும். காதுகள் விடைக்கும். மருண்டு மருண்டு முழிக்கும்.. உதையப் போகிற மாதிரி, அங்கும் இங்கும் தடதடத்து, உடம்பை முறுக்கும்.

இவன் காற்று பட்டால்... சாந்தமாகிவிடும். பசுவாகி விடும். கனத்த மடி நிறைய பால் இறக்கிவிடும். பசு தருகிற இந்த மரியாதையும் உறவும் மனசுக்குள் பெருமிதத்தைப் பொங்க வைக்கும். ஆனால்—

அதுவே இப்போது பெரும் இச்சிலாத்தியாக இருக் கிறது. வாலிபப் பசங்களோடு ஜாலியாகப் பேசிச் சிரித்து, சினிமா தியேட்டரை கதிகலங்கடிக்கிற சந்தோஷத்துக்குத் தடையாக...

ஆயினும்—

உதிர்ந்து குவிந்து கிடந்த பூவிதழ்களாக மென் சுமையில், மனம். நையாண்டி பண்ணிச் சிரித்த நினைவுத்

துண்டுகள். ஆட்டபாட்டமாய் கும்மாளமடித்து விளை யாடிய ஞாபகத் துளிகள்.

அந்நேரம்தான்—

இவன் ஊருக்குப் போகிற வெள்ளைப் பஸ் வந்தது. ஊர்ப் பெயர்கூடத் தெரியவில்லை. ஆயினும்—

பஸ்ஸை சரியாகக் கண்டுபிடித்துவிட்டான். கீறல் விழுந்த கண்ணாடியும், பம்பர் நெளிவும், "கிராமத்துக் கிளி" என்ற வர்ண எழுத்தும்தான் ஒரே அடையாளம். தனித்துவம். பஸ்ஸை இனம் பார்த்து புரிந்து கொள்கிற கணத்திற்குள், ஓடிப் போய் மொய்த்த கூட்டம். ஜனக் கற்றையின் பெரும் மோதல். தள்ளுமுள்ளுகள். இடிகள். மிதிகள். முட்டல் மோதல்கள். வசவுகள். சாபங்கள். காட்டுக் கூச்சல்கள்.

ஜன்னல் வழியே துண்டைப் போடுகிறவர்களின் துடிதுடிப்பு. பைகளை வீசி இடம் பிடிக்கிற யத்தனிப்புகள். மனிதப் பரபரப்புகள்.

"எறங்க விடுங்க..."

"ஏறு... ஏறு..."

"சீட்டைப் போடு... இந்தா பைக்கட்டு..."

"அந்தப் பக்கம் சீட் போடு... விடாதே..."

"எறங்க விடுங்க..."

"கையை எடுடா..."

"காலை மிதியாதடா... நாயி"

"அடப் பாதகத்தி ஹா... இந்தக் கெழடியை ஏற விடுங்களேன்..."

"மயானக் கரைக்குப் போக வேண்டியதெல்லாம் டவுன் பஸ்லே வந்து லொள்ளு பண்ணுதுக டோய்..."

"ஆமடாப்பா... நா இன்னைக்கு... நீ நாளைக்கு. அம்புட்டுத்தானே? மயானக் கரை வராமலேயே... நீ இருந்துருவீயா?"

"சிரிப்பாணிக் கூத்துதான்! ம்ம்... மளமளன்னு ஏறுங்க..."

"இடிச்சுத் தள்ளிட்டு ஏறப்பா..."

"ஏய்... விடுங்கப்பா. அந்தப் பெரியவரை எறக்கி விடுங்க"

ஆக்ரோஷமும் ஆத்திரமுமாக மொய்த்த ஜனங்கள். முண்டியடித்து மோதிய பயணிகள். வெறியும் வேகமுமாய் மூர்க்க முட்டல்களாக அப்பியவர்கள்.

தள்ளுமுள்ளுகளுக்கிடையே நிகழ்ந்த பேச்சுகளில் மெல்ல மெல்ல வெக்கை தணிந்தது. குளிர்ச்சியும் கிண்டல் சிரிப்புமாக நிறம் மாறியது.

கூட்டம் ஆற அமர அலைமோதியது. அலையாகவே குளிர்ச்சியோடு முண்டியது. சிரித்துக் கொண்டே இடித்தது. கேலியும் நையாண்டிப் பேச்சுமாக போட்டி போட்டது. ஒட்டி உரசியது. மோதும் அலைகளின் ஈரம்.

சங்கரபாண்டிக்கு இது ரொம்ப ரசனையாக இருந்தது. ஆச்சரியமாகவும் இருந்தது. முட்டல் மோதல் களைக் கூடச் சகஜமாக எடுத்துக் கொள்கிற பெருந் தன்மை. இயல்புத் தன்மை.

எல்லாம்— ஒரு நிமிஷம்தான்.

ரெண்டுபேர் உட்கார்கிற சீட்டுகளிலெல்லாம் மூன்று பேர். சீட்டுகளுக்கிடையில். சொருகிக் கொண்டு நிற்கிற ஓரிருவர். புளிச்சிப்பத்தைக் கிட்டித்த மாதிரி, சதைச் சிப்பமாக ஜனம் பஸ்ஸுக்குள். வேக்காடு. புழுக்கம். ஒருத்தர் மூச்சு, ஒருத்தர் மூஞ்சியில். வியர்த்த முழங்கை ஈர நசநசப்பாக இடிக்கிறது. உரசுகிற நாசியில் வியர்வை நாற்றம் வீசுகிற சட்டை. சங்கரபாண்டி பின்வாசலில் ஏறிக் கொண்டான். மூன்று வாசல்படி ஏறி, வாசல் தடுப்புக் கம்பிக்குப் பின்னால் தன்னைச் சொருகிக் கொண் டான். முதுகில் ஆள் சாய்கிற பாரம். முன்னால் சாய இடமில்லை. பிடிமானத்துக்கு சிறு ஆதாரம். அந்த 'முருங்கை'ப் பிடியில் சமநிலையற்றுத் தொங்க வேண்டிய அவலம்.

ஆனாலும் சங்கரபாண்டிக்கு எரிச்சல் வரவில்லை. கடுப்பாகவில்லை. பூத்துக்கிடந்த மனம் சந்தோஷத்தில் நனைந்து கிறங்கிக் கிடக்கிற உணர்வு. விசாலப்பட்ட நெஞ்சுக்குள் தென்றல் அலைவு.

மற்றவர்களுக்கு உதவுவதில் முனைப்பாக இருந்தான். சள்ளுபுள்ளென்று விழுகிறவர்களைச் சாந்தப்படுத்தினான்.

"பைக்கட்டை இங்கன வையுங்க..."

"நீங்க இந்தக் கம்பியைப் பிடிச்சுக்கங்க."

"என்னத்துக்கு வாய்ச் சத்தம் போடணும்? பஸ்லே பட்டா போட்டு குடியிருக்கவா போறோம்? அரைமணி நேரப் பிரயாணம். இதுக்கு எதுக்குச் சண்டை?"

கோபதாபமாய்க் குமுறிக் கொந்தளித்த பெரிசுகள், சாந்தமும் புன்னகையுமாகப் பேசுகிற இளவட்டத்தை

வெறித்தனர். இலேசான கசப்பும், வெறுப்பும் கண்களின் சுருக்கத்தில்.

கண்டக்டர் வந்தார். கட்கத்தில் தோல்பை. கையில் டிக்கெட் கட்டு. சுற்றியிருந்த ரப்பர் வளையத்தை உருவி சுண்டுவிரலில் போட்டுக்கொண்டு, காதில் பேனா இருக்கிறதா என்று சரிபார்த்துக் கொண்டார்.

கண்டக்டரைக் கவனித்தான் சங்கரபாண்டி. கவனிக்கும்படி வித்தியாசத் தோற்றம். மொட்டையடித்த வெறுந்தலையில் கருநீலக் கலர்த் தொப்பி. மழுங்கச் சிரைத்த முகத்தில் ரெண்டு நாள் ரோமம் ஒரு பசிய நிறமாகத் தோற்றம் காட்டியது. குட்டையான ஆள். சற்றே தொந்தி. தேன் நிறம். காக்கிச் சட்டைக்குள் கலர் பனியன்.

முகத்தில் பயங்கரக் கடுப்பு. கண்ணில் சிடுசிடுப்பு. ஏழுபடி காணத்தைப்போட்டு வறுத்தெடுத்து விடலாம். அத்தனை உஷ்ணம், தகிப்பு...

"என்னடா... இது, கண்டக்டர் படு சூடாயிருக்காரு..." என்று முணுமுணுக்கிற மாதிரி நினைத்துக் கொண்டான், சங்கரபாண்டி.

"வேக்காடு... ஒரே புழுக்கம்..."

"பஸ் தகரமும் வெயிலும் படுத்துற பாடு... திரேகம் பூராவும் நெருஞ்சு முள்ளா குத்துது..."

"வண்டியெடுத்து, நகர்ந்தாத்தான்... காத்தும் வரும், மூச்சும் போகும்."

"நல்லவேளை, கண்டக்டரு வந்துட்டாரு."

"கண்டக்டரு வந்து என்ன செய்ய? வண்டியெடுப்பாரா?"

"கண்டக்டரு வருவாரு முன்னாலே... டிரைவரு வருவாரு பின்னாலே"

ராகம் போட்டு இழுத்த பேச்சு. சுற்றியிருந்தவர்கள் கலகலவென சிரித்தனர்.

தீப்பிழம்பாக வந்த கண்டக்டர், நெருப்பில் விழுந்த உப்புக் கல்லாக தெறித்தார்.

"சரி சரி... சிரிச்சது போதும்... சீட்டை வாங்குங்க..."

"சீட்டு தாரீகளா?" என்று ஒரு குறும்புக்காரர் எகத்தாளமாகக் கேட்க, முறைத்தார் கண்டக்டர்.

குறும்புக்காரர் பின்வாங்குகிற தொனியில் குரலைத் தணித்தார்.

"இல்லே... நின்னு நின்னு காலு கடுக்கு. சீட்டு குடுத்தீகன்னா... உக்காந்துக்கிடலாம்..."

"கிண்டலா?" என்று கடுப்படித்த கண்டக்டர், "டாக்ஸி பிடிச்சு வர வேண்டியதுதானே? யாரு தடுத்தாக?" என்று பாய்ந்த வேகத்தில் சவுண்டைக் கூட்டினார், கத்தல் போல.

"டிக்கட்... டிக்கட்... ம் டிக்கட் எடுங்க... யாரு... ராசூல்ராமனா? இம்... ரெண்டா? சில்லறையா குடுங்க. நோட்டு வேண்டாம்யா... உம்... உம்... க்விக்... டிக்கட்... ஆலங்குளமா? எத்தினி?... பேச்சை நிறுத்துங்க... சடசடன்னு டிக்கட் வாங்குங்க... இங்குட்டு ஒதுங்கு... காலெ எடு... உள்ளே தள்ளி நில்லு... ம்ம்..."

கண்டக்டர் என்ஜின் மாதிரி இரைந்தார். வெக்கை யான இரைச்சல். கோபமும் சூடுமான இரைச்சல். துரித கதியான சத்தம். 'சள் சள்' என்று விழுந்தார்.

சங்கரபாண்டி அவரையே மென்னகையோடு பார்த்தான்.

'எதுக்கு மனுசன் இம்புட்டுக் கோபப்படுதாரு...? மூஞ்சிலடிச்ச மாதிரி பேசுதாரே... வீட்லேயும் இப்படித்தான் சிடுசிடுப்பாரா? புள்ளைக கிட்டேயும் இப்படித்தான் கொத்துவாரா?'

அவரையே பார்க்கிற சங்கரபாண்டி. அவரையே நினைக்கிற மனசின் புன்னகை.

பஸ்ஸுக்குள் கண்டக்டர் நகர முடியாமல் திணறி னார். சதைச்சிப்பமாக அப்பிக் கிடந்த பிரயாணிகள். பிய்த்துக் கொண்டுதான் உள் நுழைய வேண்டிய சிரமம். அவருக்குள் சண்டாளமாகப் பொங்குகிற ஆத்திரம். சாரைப் பாம்பாக 'சீர் சீர்' என்று சீறினார்.

"யேய்... தள்ளிக்கப்பா... வழிவிடு... அங்குட்டு நில்லு"

"ம்... ம்... டிக்கட் சங்கம்பட்டியா?... இந்தா... புதூர் மூணா?...ம் அட்டைமில்லு எத்தினி?"

யாரோ... "சார்" என்று இங்கிதமாகக் கூப்பிட, கோப மாக எகிறினார், கண்டக்டர். "சார், கீர்...ங்குறதெல்லாம் அப்புறம்... மொதல்லே டிக்கட்டைப் புடிங்க. அண்ணன், தம்பிப் பழக்கமெல்லாம் வெளியே... இங்க வேலையைப் பாக்க விடுங்க... சள்ளை பிடிச்ச வேலை. உசுரைப் புடுங்குற நச்சரிப்பு..."

கண்டக்டரையே விநோதப் பிராணியைப் பார்க்கிற மாதிரி கவனித்தான், சங்கரபாண்டி.

'சார்' என்று கூப்பிட்ட அந்த ஆளைப் பார்க்கப் பார்க்கப் பாவமாக இருந்தது. 'இதுக்கு இந்தக்கடியா?'

இவன் பார்வை கண்டக்டரையே பின்தொடர்ந்தது.

டிரைவர் வண்டியேறினார்.

"என்ன தலைவா... டிக்கட் அடிச்சாச்சா? வண்டியெடுக்கலாமா?"

"எடுக்கலாம்"

வண்டி நகர... கண்டக்டர் இன்னும் துரிதமானார். மேலும் கடுமையாகச் சீறிவிழுந்தார். காட்டம் காட்டமாகப் பேசினார். சிறுசு பெரிசு என்று எந்த வித்தியாசமுமில்லாமல், அதட்டலும், மிரட்டலுமாய் கத்தினார். 'யார் கூடயாச்சும் வம்பு இழுத்து, சண்டை போட்டுடுவாரோ...'

பி.எஸ்.கே.நகர் ஸ்டாப்பில் வண்டி நின்றது. இறங்க வழி கிடைக்காமல் திண்டாடித் திணறி இறங்கிய பெண்கள்.

கண்டக்டர் ஜன்னல் வழியே தலையை நீட்டி கத்தினார்.

"எம்மா... ஏமா... டிக்கட் வாங்கியாச்சா?"

"வாங்கலே..."

"பெறகு நீங்க பாட்டுக்கா எறங்கிப் பெறப்புட்டிட்டீக? டிக்கட் எடுக்க வேணாமா?"

கூவக்காடு போட்டார். சீறலும் அதட்டலுமாய் தீப்பொறியாய் தெறித்த வார்த்தைகள்.

அவமான வேதனையில் அரண்டு போன பெண்மணி, பேச வாய் வராமல் கண் கலங்க ரெண்டு ரூபாயை நீட்டினாள். சங்கரபாண்டிக்குள் சிந்தனை இழைகள்.

'என்ன மனுசன்... அடுப்புக்குள்ளே இருக்கிற கட்டைக்கங்கா... தகிக்காரே... இப்படியும் மனுசரு இருப்பாரா? சிடுசிடுப்பும், கடுகடுப்புமாவே ஒரு மனுசன் இருப்பாரா? இதென்ன... விநோத மனுசரா இருக்காரே... ஒருவேளை... சள்ளை புடித்த வேலைதான், ஆளை இப்படியாக்கிருச்சா...?'

சங்கரபாண்டிக்குள் நினைவுகள். குறுக்கும் மறுப்பு மாக யோசனைகள். மர்ம இருட்டைத் துழாவுகிற கண்ணின் கூர்மையைப் போல உற்றுநோக்குகிற எண்ணங்கள்.

மனதுக்குள் வந்த ஜெர்ஸிப் பசு. அமைதியின் சின்னம். சாந்த சொரூபி. ஆனால்... தன் வீட்டுப் பசு. இவனைத் தவிர, வேறு யார் நெருங்கினாலும் அந்தப் பசு, இந்தக் கண்டக்டரை மாதிரித்தான். தறியமுறிய விழும். தடதடத்து இடம் மாறும். கோபத்தில் செவிகள் விடைக்கும். உதையத் தயாராகிற மாதிரி பின்னங்கால்களை மாற்றி மாற்றி எடுத்து வைக்கும். வாலைச் சுழற்றிச் சுழற்றி யாட்டும்.

சிரித்துக் கொண்டான்.

'அஞ்சு விரல்களும் ஒண்ணுமாதிரியாகவா இருக்கு? ஒவ்வொண்ணும் ஒவ்வொரு மாதிரி. தனித்தனி மாதிரி.

அப்படித்தான் மனுசங்களும். ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு சுபாவம். இவருக்கு இப்புடி ஒரு சுபாவம். தீக்கட்டை சுபாவம்.'

கண்டக்டர் வாசல்படியில் நிற்கிறவனை அதட்டு கிறார். காட்டமான அதட்டல். "மேலே ஏறுதீயா... கீழே எறங்குதீயா?"

காரசாரமான அந்தக் கண்டிப்பில் வெலவெலத்துப் போன அந்தப் பையன்கள்.

"உள்ளே தள்ளிப்போங்க... அங்க யாரது? ஏய் வெள்ளைச் சட்டை, உள்ளே நகண்டுபோயா"

கண்டக்டரின் காட்டுக் கூச்சல். அதட்டலான கூவக்காடு. முடிவில்லாத சிடுசிடுப்பு, முற்றுப்புள்ளியே யில்லாத பாம்புச்சீறல். அனல் தெறிப்புகள்.

ஆலங்குளம் முக்குரோட்டில் சங்கரபாண்டி இறங்கினான்.

பஸ் சிமிண்டாலைக்குள் போய்விட்டுத் திரும்பி வரும். முக்குரோட்டில் அஞ்சு நிமிஷம் ஓய்வு. டீயடித்துவிட்டு ஒரு சிகரெட்டை சுண்டிவிட்டு மறுபடி புறப்படும்.

சங்கரபாண்டி பொழுதுக்காலைப் பார்த்தான். மணி ரெண்டிருக்கும். சுள்ளென்று அறைகிற மதிய வெயில்.

சைக்கிளை எடுத்துக்கொண்டு ஊர் போய்ச் சேரணும். அதற்குள் நாமும் ஒரு டீயடித்துக் கொள்ள லாமே...

டீக்கடைக்காரர் பழக்கமானவர். கடைக்குள் போய் வடை தின்று, தண்ணீரைக் குடித்துவிட்டு, ஆற அமரப் பேசி... டீ குடித்து முடித்துவிட்டு நின்றான்.

பஸ் டிரைவர் வந்தார். உடன் கண்டக்டர். அதே டிரைவர், அதே...

'என்னடா இது, அதிசயம்' என்று ஆச்சரிய மாகப் பார்த்தான் சங்கரபாண்டி. கண்டக்டர் கட்கத்தில் இடுக்கிய தோல்பையுடன் சிரித்த முகமும், சீதேவி ஜொலிப்புமாக வந்தார். முகத்தில் ஒரு பிரகாசம். டிரைவரின் கேலிப் பேச்சுக்குக் கூச்சப்பட்டுச் சிரிக்கிற மகிழ்ச்சி.

"ரெண்டு டீ போடுங்க"

தாழ்வார நிழலில் இருவரும் நின்றனர். டிரைவர் தான் சீண்டல் மாதிரி மெல்லக் கேட்டார்.

"என்ன... வண்டிக்குள் ஒரே 'தாட்பூட் தர்பாரா' இருந்த மாதிரியிருந்துச்சே...?"

"ஆமா... என்ன செய்ய? குளுந்த மொகம் காட்டி சிரிச்சுட்டா... நெரிசல்லே வேலை நடக்காதுல்லே? காச்சு மூச்சுன்னு கத்துன்னாத்தான், சட்டுபுட்டுன்னு டிக்கெட் எடுக்காக?"

"இருந்தாலும்... சவுண்டு ஜாஸ்திதா."

"சரி... சரி... சீக்கிரம் டீ சாப்புடுங்க தலைவா, அடுத்த டிரிப்பு எடுக்கணும்லே?"

"அது சரித்தான்... இருந்தாலும் சள்ளுபுள்ளு வேஷத்தைக் கொறைக்கணும்."

*சிரிப்பும் பேச்சுமாக டீ குடிக்கிற கண்டக்டரைப் பார்த்தான், சங்கரபாண்டி.*

*சிரித்த முகத்தில் தெரிந்த அந்த மனிதரின் உள் மனப் பூவின் ஒளி. அதன் பிரகாசம். வெளிச்சக் குளுமை.*

*அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. என்றாலும், ஏதோ பிடிபடுகிற மாதிரியும் தோன்றியது.*

**ஓம் சக்தி, ஆகஸ்ட், 1999**

# அந்த ஒரு நாள்

**கை**யெழுத்துப் போட்டுவிட்டு நிமிர்ந்த அன்பழகனை, எஸ்.ஐ.யின் சப்தமற்ற சிரிப்பு மோதி மறைத்துக் கொண்டது. ஏட்டின் உதட்டிலும் கூட அந்த மெல்லிய ஏளனம், மின்னி மறைந்தது போலிருந்தது.

அந்த இகழ்ச்சியைப் பொருட்படுத்தாமல் புறம் தள்ளிவிட்டு அலட்சியமாக "வரேன் சார்" என்று சலாம் வைத்துவிட்டுப் புறப்பட்டான்.

இரத்தத்தில் மூழ்கி எழுந்ததைப் போலச் சிவந்து போயிருந்த அந்தக் காவல் நிலையக் கட்டடத்தை விட்டு வெளிவந்தவுடன், காலை நேரத்து வெயிலுடன் நகரத்தின் ஆரவாரக் கூச்சலும் எதிர்கொண்டது.

சாலையையும் செவிகளையும் அதிரச் செய்கிற இரைச்சலுடன் அலறிக் கொண்டு பாய்ந்தோடுகிற ஆட்டோக்கள்; பூதம் பூதமாய் நகர்கிற பேருந்துகள்; அசுரத் தோற்றத்துடன் மஞ்சளாய் வருகிற லாரிகளின் லொட

லொடாக்கள்; ஊடுருவி நெளிந்தோடுகிற சைக்கிள் பாய்ச்சல்கள்; வாழ்வைச் சுமந்து கொண்டு மொய்த்துத் திரிகிற மனிதக் கூட்டத்தின் பேரிரைச்சல்.

உயிர்ப்பின் அழகோடு இயங்குகிற சமூக வாழ்க்கையின் எந்த அம்சத்தையும் அன்பழகன் கவனிக்கவில்லை. பிளாட்பாரத்தில் நோக்கமின்றி நடந்து கொண்டிருந்தான். எஸ்.ஐ., ஏட்டு இவர்களின் ஏளனம் மனசுக்குள் மெல்லிசாக ஒலித்தது. இவர்கள் மட்டுமா, இவனைப் பற்றி அறிந்திருக்கக்கூடிய எல்லோரும்தான் முதுகுக்குப் பின்னால் இகழ்ச்சியோடு சிரிக்கிறார்கள்...

அவனுக்கு வேதனையோ— அவமானமோ தோன்றவில்லை. இதெல்லாம் பழகிப்போன கத்திகள். அறுத்து அறுத்து கூர் மழுங்கிப்போன கத்திகள்... சமூகக் கயமைகளை அனுபவித்து, அனுபவித்து மரத்துப் போய்விட்ட இவன் இதயத்தை உரசிப் பார்க்கக்கூட முடியாமல் வலிமையிழந்து போன கத்திகள்...

மூன்றாம் மனிதனாக விலகி நின்று யோசிக்கிற போது... இவர்களையெல்லாம் பார்த்து கைகொட்டிச் சிரிக்க வேண்டும் போலிருந்தது.

இந்த வட்டாரத்தில் திருட்டுக் கேஸ்கள் அதிகரித்து விட்டதாம். சமீபத்து திருட்டு வழக்கில் போதிய நிரூபணமில்லாமல் விடுதலையாகிவிட்ட போதிலும் கூட, போலீஸாரின் நிரந்தர சந்தேகத்துக்குரியவனாகி விட்ட கேடி லிஸ்டில் இடம் பெற்றுவிட்டபடியால், இவன் இரண்டு நாளைக்கொரு தடவை இந்தக் காவல் நிலையத்துக்கு வந்து கையெழுத்துப் போட வேண்டுமாம்!

திருட்டு அபாயத்திலிருந்து இந்தச் சமூகத்தைக் காப்பாற்றுகிற எச்சரிக்கை முயற்சியாம்... பொதுமக்களின் நன்மையையும் சகஜவாழ்வையும் உத்தரவாதப்படுத்துகிற நடவடிக்கையாம்...!

"திருடுவதற்காகவே பிறந்தவன், திருட்டையே தொழிலாகக் கொண்டவன்" என்று காவல் நிலைய தஸ்தாவேஜு இவன் தலையெழுத்தை ஆணித்தரமாக பதிந்து கொண்டது. இவன் மீது இந்த முத்திரையைக் குத்துவதன் மூலம், இந்தச் சமூகம் தன்னைத்தானே கௌரவ ஸ்தானத்துக்கு உயர்த்திக் கொண்டு, ரொம்பவும் யோக்யப்படுத்திக் கொள்கிறது.

இதையெல்லாம் நினைத்துப் பார்க்கும் போது, அன்பழகனுக்கு வாய்விட்டு ஹோவென்று சிரிக்க வேண்டும் போலிருந்தது. நகரத்தின் இரைச்சலையெல்லாம் அமுக்குவதைப் போல ஓங்காரமாகக் கைகொட்டி சிரித்துக் கேலி செய்ய வேண்டும் என்று அவன் மனசு ஆவல்பட்டது.

அட, யோக்கியச் சமூகமே, உன் சக்கரச் சுழற்சிக்கு அச்சாணியாக இருப்பதே களவுதானே! இங்க எவன் திருடலை? பறிகொடுக்கிறவங்களும் பறிக்கிறவங்களும் சேர்ந்துதானே நீ?

இந்த எஸ்.ஐ. லஞ்சம் வாங்கி சஸ்பெண்டானவர் தானே... இப்பத்தானே வேலையிலே ஜாயிண்ட் பண்ணி, இந்தக் கச்சேரிக்கு டிரான்ஸ்பர் ஆகி வந்துருக்காரு... இந்த ஏட்டும் சாமான்யப்பட்டவரோ...?

இதோ... இந்தச் சாலையை நாகரிகப்படுத்திக் கொண்டு, வரிசையாய் அணிவகுத்திருக்கிற இந்த அலங்காரக் கடைகள்... அங்க நடக்குற மும்முரமான

வியாபாரங்கள்.... பேக்டரிகள், அதன் லாபங்கள்... இதெல்லாம் என்னவாம்? திருட்டுத்தானே! சட்டபூர்வமான திருட்டுகள்தானே!

இந்த வீதியின் முனையிலிருக்கிற பிரஸ், அதன் ஓனர்... இதைப் பற்றி யாருக்குத் தெரியாது? கள்ளநோட்டு வழக்குலே சிக்கி, கேஸ் நடத்தி குற்றமற்றவர்னு நிரூபிச்சு ஜெயிச்சவர்தானே?

இ.பி.கோ. பார்வையில் இவர்களெல்லாம் யோக்ய சிகாமணிகள். சமூக வளர்ச்சிக்கு அத்யாவசியமான நரம்புநாளங்கள். இவன் மட்டும் பயங்கரக் கேடியாம்; திருட்டுக் குற்றத்தின் மூலம் சமூக அமைதிக்குப் பங்கம் பண்ணுகிறவனாம்! விளம்பரப்படுத்தப்பட்ட நிரந்தரக் குற்றவாளி!

இதிலேயே மிகப் பெரிய வேடிக்கை யென்ன வென்றால்... இவன் தண்டனைகள் பெற்று, சிறை வாசங்கள் மேற்கொண்ட பின்னால்தான் திருடவே ஆரம்பித்தான்.

இதை விடவும் பெரிய வேடிக்கை... இவன் நிஜ மாகவே திருடிய சில சமயங்களில் கைது செய்யப்படவு மில்லை; தண்டிக்கப்படவுமில்லை! எவன் எவனோ ஜெயிலுக்குப் போனார்கள். அதேபோல் எவன் எவனோ செய்த குற்றங்கள் புலனாகாமல் போய்விடுகிற சமயங் களில், அவனுக்காக இவனும் ஜெயில் சோற்றைத் தின்றதுண்டு.

இப்படிப்பட்ட வில்லாதி வில்லர்கள்தான் சட்டத்தை யும் நீதியையும் கட்டிக்காத்து, ஜனசமூகத்துக்கு சகஜ வாழ்வை உத்தரவாதப்படுத்துகிறார்களாம்...

நல்ல கூத்து...

அன்பழகனுக்கு ஏதோ பொம்மலாட்டத்தைப் பார்ப்பது போலிருந்தது. அதில் தானும் கேலிக்காகக் கலந்து கொண்டு, கண்ணாமூச்சி காட்டுவது போலிருந்தது.

அவன் விருப்பம் போல சத்தமிட்டு சிரிக்காமல்... அடங்கிக் கொண்டான். நாக்கு வழுவழுத்தது. தொண்டை கரகரத்தது. பெரிய சத்தத்தில் காறித் துப்பினான். எதன் மீதோ விழவேண்டிய எச்சில் புழுதியில் விழுந்தது.

அவனுக்கு பீடி குடிக்க வேண்டும் போல தாகமாக இருந்தது; கயலிக்கு அடியில் டவுசர் பையில் துழாவினான். பீடி இல்லை. வாகனப் போக்குவரத்தால் திமிலோகப்பட்ட சாலையின் குறுக்கில் சாதுர்யமாக ஓடி, எதிர்த்தாற் போலிருந்த வெற்றிலைப் பாக்குக் கடைக்கு வந்தான்.

கடைக்காரர் துரிதப்பட்டு "என்ன வேணும்?" என்றார்.

"ஒரு பீடிக்கட்டு குடுங்க."

"என்ன பீடி?"

"கணேஷ் பீடி இருந்தா எடுங்க"

இடுப்பை இறுக்கிக் கொண்டிருந்த அகலமான பச்சைநிறப் பெல்ட்டின் பொத்தான்களை 'டிப், டிப், டிப்' பென்று விடுவித்து, அதற்குள்ளிருந்து இரண்டு ரூபாய் சிவப்புத்தாளை எடுத்துத் தந்தான். மீதிச் சில்லறையை வாங்கிப் போட்டுக் கொண்டான்.

அந்தப் பெல்ட்டின் கனத்த பொத்தான்களை திறந்து மூடுகிறபோது ஏற்படுகிற சப்த கம்பீரத்தை கடைக்காரர்

விசேஷப் பிரமிப்புடன் பார்ப்பதை இவனும் கவனித்தான். பெருமையாக இருந்தது.

பீடியைப் பற்ற வைத்து ஆவலுடன் இழுத்தான். இழுக்கப்பட்ட புகை உள்ளுக்குள் பரவி, இதமாகத் தழுவி சுகப்படுத்திவிட்டு வெளிப்பாய்ந்து காற்றில் மறைந்தது. கடையைப் பார்த்தான். கடைக்குள்ளிருந்த அகலக் கண்ணாடியில் இன்னோர் அன்பழகன், இவனை எதிர்கொண்டான்.

எண்ணெய் படாமல் காய்ந்து கறுத்துப் போன வட்டமுகத்தை பதினைந்து நாள் ரோமங்கள் மேலும் கறுப்பாக ஆக்ரமித்திருந்தது. ஆக்ரமிப்பில் சிக்காமல் திமிறி நின்ற பருத்த உதடுகளில் மெல்லிய வெடிப்புகள் தெரிந்தன. நாவின் ஈரத்தில் நனைக்க முயன்றபோது சொரசொரத்தது.

'எதுக்கு இப்படி பங்கரையாயிருக்கணும்' என்று நினைத்தவன், பக்கத்திலுள்ள பார்பர் ஷாப்புக்குள் நுழையலாமா என்று யோசித்தான். அப்போது—

ஒரு பிச்சைக்கார சிறுவன் காலடியில் நின்றான். பத்துவயசிருக்கும். ஒட்டி உலர்ந்து, சொங்கு விழுந்த உடம்பு. ஒரேயொரு டவுசர்க் கிழிசல்தான் ஒட்டிக் கொண்டு நின்றது. கண்ணுக்குள் ஜீவனாய் ஒடுங்கிப் போயிருந்தான்.

"சாப்பிட்டு ரெண்டு நாளாச்சு... அண்ணே, ஏதாச்சும் தாங்களேன்..." பார்ப்போரின் இதயம் நெக்குருகிப் போகிற மாதிரியான சோகக்குரல்... அன்பழகன் அவனை உறுத்துப் பார்த்தான்— நெக்குருகிப் போகவில்லை. பார்வையில் ஓர் அதிர்ச்சியும் சீற்றமும் தெரிந்தது.

பாய்ந்து மறைந்து போன தனது சிறுவயசுக் கோலமே வடிவம் கொண்டு முன்னால் நிற்பதைப் போலிருந்தது. அவன் கண்கள் சட்டென விரிந்தன; உஷ்ணத்தைக் கக்கின.

"போடா அங்குட்டு" வெறிபிடித்தவனைப் போல கோபத்தில் கத்தினான். சிறுவன் வெலவெலத்துப் போய் விலகி நின்றான்.

"முளைக்கலே; மூணு இலை விடலை... அதுக்குள்ளே கையேந்திப் பிழைக்கவா ஆரம்பிச்சுட்டே ராஸ்கல்... ஓடுறா அங்குட்டு... கண்ணுலே முழிக்காமே... போடா...."

கடிக்க வருகிற நாயைத் துரத்துகிற குருட்டு வேகத்தில்— தேவையற்ற அளவின் ஆத்திரத்தில் ஆவேச மாய்த் திட்டினான்.

"படுவா... பிச்சையா எடுக்கிறே? உழைச்சுப் பாரு... முடியலேன்னா களவாண்டாச்சும் தின்னேன்... எதுக்கு கையேந்துறே? போயிரு அங்குட்டு..."

"எதுக்குண்ணே... குடுங்க... இல்லேன்னா இல்லேன்னு சொல்லுங்க... அந்தச் சின்னப்பயலை எதுக்கு, அப்படி விரட்டணும்; பாவம்..."

பரிந்து வந்த கடைக்காரர், அவன் "ஊம்ம்" என்று உறுமலுடன் திரும்பி பார்த்தவுடன் பதுங்கிக் கொண்டார். சிறுவன் பதறிப்போய் நகன்று விட்டான்.

அன்பழகனுக்கு மனசெல்லாம் கசந்தது. உடம் பெல்லாம் பற்றிக் கொண்டு எரிவது போலிருந்தது. முகம் தெரியாத பகைவன் முகத்தில் அறைந்து விட்டதைப் போன்றதோர் அவமானம், இனம் புரியாத கொடிய இம்சை அவனைப் பிடுங்கித் தின்றது.

நினைக்கவே சகிக்காத தனது கடந்த கால அவலம். நேருக்கு நேராக மறித்துக் கொண்டு நிற்பது போலிருந்தது. மிரண்டு போனவனைப் போல விருட்டென்று பார்பர் ஷாப்புக்குள் நுழைந்து கொண்டான்.

“கட்டிங்கா, ஷேவிங்கா சார்?” எதிர்கொண்ட கேள்விக்கு பதில் சொல்லும் நிதானமில்லாமல் “எதையாச் சும் செய்” யென்று எரிந்து விழுந்துவிட்டு சேரில் சாய்ந்து பதுங்கிக் கொண்டான்.

வெள்ளைத் துணியால் மூடப்பட்டான்.

எதையும் உணர முடியாத அளவுக்கு மனசு சலனப்பட்டது. மர்மமான தாக்குதலில் நிலைகுலைந்து போன குழப்பத்தில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது.

காலத்தின் வேகத்தில் மறக்கப்பட்டு, உள்ளுக்குள் ஆழத்தில் புதைந்து, உறைந்து கிடந்த அந்த நாள்கள்—

மனசெல்லாம் குத்தி, புண்ணாக்கி, ரணமெடுத்து, அழுகி நாற்றமெடுக்கச் செய்த கொடிய அந்த நினைவு முட்கள்—

உடைப்பெடுத்த வெள்ளமாய் பெருக்கெடுத்து, உள்ளுக்குள் குபுகுபுவெனப் பாய்ந்தது. அந்த நினைவுச் சூறாவளியில் அவன் துரும்பாக அடித்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தான்...

......அன்பழகன் என்ற அழகு தமிழில் பெயரிட்டு, ஆசை ஆசையாய் கூப்பிட்ட அப்பா, அண்ணாதுரை இறந்த அன்று— அவரது சடலத்தைப் பார்த்துவிடுகிற துடிப்பில், ரயிலின் கூரையில் பயணம் செய்து, பாலத்தில் கூழாய் அறைக்கப்பட்டு, சடலம் கூட காணாமல்

போய்விட்ட அவலக் கதையை அம்மா சொல்லிச் சொல்லி இவன் கேட்டுக் கலங்கியதுண்டு.

சித்தாள் வேலை பார்த்த அம்மா, சாரத்திலிருந்து வழுக்கி விழுந்து, வளர்ந்துவந்த கட்டடத்தின் இரத்தபலி யானதுடன், இவன் முழு அனாதையாக தெருவில் விடப்பட்ட அந்தக் கோர நாள்கள், மங்கலாக நினைவில் தெரிகிறது...

வயிற்றுக்குச் சோறில்லாமல், சோறிட ஒரு நாதி யில்லாமல்... மனித முகத்தில் கருணை ஈரம் தேடி கையேந்தித் திரிந்த அந்த நாள்கள்—

அன்புக்காகவும் ஆதரவான கொஞ்சுதல்களுக் காகவும் ஏங்கித் தவிக்கிற அந்தப் பிஞ்சு வயசில், சோற்றுக்காக, ஓர் எச்சில் பண்டத்துக்காகப் பசியோடு துடித்தலைந்த அந்தக் கொடிய நரக நாட்கள்—

குடலைக் கவ்வுகிற பசியில் கையேந்தியபோது, நெஞ்சில் கனல் துண்டுகளாக விழுந்து சுடுகிற வசை வார்த்தைகள்—

எத்தனை கால்களால் உதைபட்டு, எத்தனை கைகளால் அடிபட்டு, நாய்களால் துரத்தப்பட்டு, பட்டினி நெருப்பில் எரிக்கப்பட்டு— பனியிலும், வெயிலிலும் நனைக்கப்பட்டு, ரயில்வே ஸ்டேஷனிலும், கடை வாசல் களிலும் கிடந்து, பசியால் தூக்கம் வராமல் தெரு நாயாக வீதி இருட்டுகளில் அலைந்து... ஐயகோ அந்தக் கொடுமை...! மனசே மரத்துப்போய், வக்கரித்துப்போய், எந்த இழிவுக்கும் தயாராகிப்போன அவலம்...

அடப் பாதரவே... அந்தப் பாதரவு எந்தப் புழுவுக்கும் கூட நேர்ந்துவிடக் கூடாது...

*அப்படிப் பசியோடும் அலைந்த இந்தச் சிறுவன் மீது, உண்மையான மனுசத்தனத்துடன் இரக்கப்பட்ட அந்தப் போலீஸ்காரர்.*

*இதயம் முழுவதும் இரக்கத்தால் நிரம்பிப் போயிருந்ததைப் போலவே, வறுமையாலும் நிரப்பப்பட்டிருந்த அந்தப் போலீஸ்கார மனிதர்...*

*வாழ்க்கைக்கு ஒரு நல்ல வழியையல்ல... வயிற்றுக்குச் சோறிட வேண்டிய முதல் தேவையை உணர்ந்து, அக்கறைப் பட்டு, அதற்கும் வழியற்றுத் திகைத்து, சோற்றுக்காகவே ஜெயிலுக்கு அனுப்பி வைத்த அவரது கள்ளம் கபடமற்ற காருண்யம்—*

*அப்புறம், ஜெயிலே நிரந்தர வாசஸ்தலமாகிவிட... அங்கு கற்றுக்கொண்ட வெளிச்சத்தில் திருடுவதற்கும் பழகிக்கொள்ள...*

*இதோ... இன்று ஊரும் போலீசும் இவனைக் கண்டு பயப்படுகிறது. ஓட ஓடத் துரத்தியவர்கள், ஓடி ஓடிப் பதுங்குகின்றனர்.*

*நல்ல உலகம்! இங்க ஞாயத்தை எவன் மதிக்கிறான்? ஆப்புட்டா அமுக்குறான்... அமுக்குனா அலறுறான்...*

*முகத்தில் நீர் பீய்ச்சியடிக்கப்பட்ட அதிர்வில், அன்பழகன் பிரக்ஞையுற்றான். பார்பர், ஷேவிங்கை முடித்துக் கொண்டிருந்தார். சற்று நேரத்திற்கெல்லாம் வெளியே வந்த அன்பழகன் மனசுக்குள் சஞ்சலம், குழப்பம் குடியிருந்தது.*

*உயிர்ப்புற்ற இறந்தகாலத்து அவலங்கள், ஊழிக் காற்றாக அவனை அலைக்கழித்தது. சாராயக் கடைக்குள்*

நுழைந்தான். பரோட்டா கடைக்குள் நுழைந்தான். மனசு கொஞ்சம் சமனப்பட்டது போலிருந்தது.

**அ**வனது வழக்கமான இருப்பிடத்துக்கு— மண்டபத் துக்கு— வந்து விழுந்தவன், அடித்துப் போட்டவனைப் போல் தூங்கிவிட்டான்.

அன்றைய மதியமோ, மாலைப் பொழுதோ அவனைச் சந்திக்காமல்— பொருட்படுத்தாமல்— கடந்து போய்விட்டது.

பெரும் கூட்டத்துக்குள்— கூச்சலுக்குள் சிக்கிக் கொண்டுவிட்ட திகிலுணர்வில் திடுக்கிட்டு அவன் விழித்தபோது—

சுற்றிலும் இருட்டே சூழ்ந்திருந்தது. மெல்லிய ‘கிசு கிசு’ பேச்சு சப்தம் நாலடித் தூரத்தில் கேட்டது. ஒன்றும் புரியவில்லை.

சற்று நிதானித்தான். கண்களை நன்றாக மூடி மூடித் திறந்தான். இருளுக்குள் மூன்று மனித நிழல்கள் தெரிவது போலிருந்தது. அவர்களது குசுகுசுவென்ற சப்தத்தில் தொனித்த தீவிரம் இவனை உஷார் படுத்தியது.

மேலும் நிதானித்தான். புலன்கள் சுறுசுறுப்புற்றன.

பக்கத்தில் யாருமில்லை. மண்டப வராண்டாவில் வலது மூலையில் ஒரே உடைமையான தகரப் பெட்டிக்கு அருகில் இவன். இடது மூலையின் முகப்பில் அந்த மூன்று மனித நிழல்கள்...

ரோடு, அந்த மண்டபத்தைத் தழுவி மெல்ல வளைவதால், அவர்கள் இருக்குமிடம் சாலையின்

ஓரமாகவும், மண்டபத்தின் முன்முகப்பாகவும் அமைந் திருந்தது.

அவர்கள் சாலையை ஆவலுடன்— தூண்டிலைப் போட்டுவிட்டு காத்திருக்கிற பரபரப்புடன்— எதிர் நோக்கிக் கொண்டிருப்பது இவனுக்கு தெட்டெனப் புலப்பட்டது.

மனிதனுக்குரிய இயல்பான குறுகுறுப்பில், இப்போது அவர்களது குசுகுசுவென்ற பேச்சைப் புரிந்து கொள்வதில் முனைந்தான்.

"அந்த ஆளு நிச்சயமா இந்த ரோட்லேதான் வருவானா?"

"அவன் வீட்டுக்கே இதுதான் ரூட்டு. வேற ரூட்டு கிடையாது. கூட்டம் முடிச்சு வழக்கமா வர்ற ரிக்ஷாக் காரனை அசத்திட்டு, நமக்கு வேண்டிய பயலை அனுப்பிச் சிருக்கேன்..."

"சரி... வந்தவுடனே சடபுடான்னு அடி கொடுத்திட வேண்டியதுதானே?"

"ஆமா... வேறெ ஜோலி? ஆனா ஒன்னு. கொன்னு புடக் கூடாது. வகையா அடிச்சுப் போடணும், ஊமை அடியா. ஆறு மாசத்துக்கு பெட்லே கெடக்குற மாதிரி..."

ஒரு மெல்லிய பெருமூச்சு. சித்திரை மாதத்துக் காற்றுபோல பேச்சு ரொம்ப மெல்லிசான சப்தத்தி லிருந்தது.

"இந்த ஆளு ரொம்ப நல்ல மனுஷனாச்சே... ஏழை பாழைகளுக்கு 'ஒன்னு'ன்னா, ஓடி ஓடி உதவுற மனுஷன். இந்த ஆளைப் போட்டு எதுக்கு அடிக்கணும்?"

"ஏண்டா, கேணத்தனமா பேசுறே? நம்ம முதலாளி பேக்டரியிலே நடக்குற ஸ்ட்ரைக் தெரியாதா, உனக்கு? எல்லா யூனியன் லீடன்களும் பணத்தை வாங்கிக்கிட்டு, கையெழுத்து போட்டுட்டாங்களே, இந்த ஆளும் போட்டுட்டு, வாங்கிட்டுப் போக வேண்டியதுதானே...? பெரிய சத்திய புத்திரன் மாதிரி துள்ளிக் குதிச்சான்னா... வம்புதானே! நம்ம முதலாளி விடுவாரா?"

"இந்த ஆளுக்கும் முதலாளிக்கும் இப்போ பகைங் கிறது ஊரறிஞ்ச விஷயம். நாம இப்படிச் செஞ்சோம்னா... இதோட பழி நம்ம முதலாளி தலையிலேதானே விழும்?"

"அதெல்லாம் விழாது. அவனுக்கு ஆகாதவங்க அந்தச் சங்கத்திலே நாலுபேர் இருக்காங்க. அவங்க கையெழுத்துப் போட்டு போராட்டத்தை நிறுத்தணும்ங் கிறாங்க. ஆனா இந்த ஆளு விடமாட்டேங்கிறான்..."

"தொள்ளாளிங்க சப்போர்ட்டு இந்த ஆளுக்குத் தானே ரொம்ப இருக்கு?"

"ஆமாம். அதா... இதை, இப்போ செஞ்சா... இந்தப் பழியை இவனுக்குப் பிடிக்காதவங்க மேலே போட்டுடலாம். மிச்சம் மீதியாயிருக்கிற இந்த யூனியன்லேயும் உடைசல் வந்துடும். அதான் நம்ம முதலாளியோட ஐடியா."

"இருந்தாலும், அந்த ஆளு புள்ளை குட்டிக்காரன். நல்ல மனுஷன். இவனுக்கு ஒன்னுன்னா... இவன் புள்ளைக தெருவுலே பிச்சையெடுத்துக்கிட்டு அலையும்... இது ரொம்பக் கொடுமை."

"ஒன்னை 'இதுக்கு'க் கூட்டிட்டு வந்ததுதான் கொடுமை."

மெல்லிய சிரிப்பலை தோன்றிய கணத்திலேயே மறைந்து விடுகிறது.

அன்பழகன் விதிர்விதிர்த்துப் போனான். அவனுக்குள்ள சமூக ஞானம், நடக்க இருப்பதை சட்டென்று புரிந்து கொண்டது.

நிராயுதபாணியாக நின்று ஏழைபாழைகளுக்காக போராடிக் கொண்டிருக்கும் ஒரு நியாயத்தின் உயிரைக் குடிப்பதற்கான ராட்சஸ முயற்சி, இது.

இந்த மூன்று நிழல்களும் அநியாயத்தின் ஆயுதங்கள். கொலைக் கிருமிகள். நல்ல மனுசனின் இதயத்தை உடைக்கக் காத்திருக்கும் நச்சுக் கருவிகள்.

அன்பழகனால் சும்மா இருக்க முடியவில்லை. அவன் மனம் பரபரத்தது. எதையாவது செய்தாக வேண்டுமென்கிற உந்துதல் அவனைப் பிடித்து உலுக்கியது.

'என்ன செய்றது? எதுக்காக ஏன்?' என்ற கேள்விகள் அவனை மறித்துத் தேக்கியது.

முகம் தெரியாதவர்கள்... முன்பின் தொடர்பில்லாதவர்கள்... பாசமோ பகையோ எதுவும் கொள்ளாத அந்நியர்கள்... அவர்கள் விவகாரத்தில் ஏன் வீணாக தலையிடணும்? என்ன அவசியம்? எதுக்கு உடம்பைப் பாழாக்கிக்கணும்?

ஆனால்... ஆனால்... ஆனால்...

ஓர் உயிர்— ஓர் உத்தமம்— ஒரு நியாயம் சாகடிக்கப் படுவதைப் பார்த்துக் கொண்டு ஒரு மனுசன் எப்படிச் சும்மாயிருப்பது?

"அதுவும் ஒரு தந்தை... இவனை இழந்து விட்டால்...தெருவில் பிச்சையெடுத்து அலைகிற குழந்தைகள்... அந்தக் கொடுமைக்கு இன்னும் சிலதுகளா? இதைச் சகித்துக் கொண்டு எப்படி ஒதுங்கிக்கொள்வது?

அப்படி ஒதுங்கித்தான்... என்ன வாழ்ந்து சாதிச்சிடப் போறோம். போற உயிர் அர்த்தத்தோட போகட்டுமே, ஒரு நல்லதுக்காக இந்த ஒரு நாளாவது மல்லுக்கட்டுவோமே...

சப்தமில்லாமல் மெல்லப் புரண்டான். நிதானமாய்— இன்னும் நிதானமாய்— பெட்டியைத் திறந்து—

ஜாக்கிரதையுணர்வுடன், மெல்ல... இன்னும் மெல்ல, சைக்கிள் செயினை எடுத்து, அனிச்சைச் செயலாக அந்த இருட்டிலும் செயினின் கைப்பிடியைத் தேடிப்பிடித்து...

முழுக்கத் தயாராகிவிட்டான், அந்த நிழல்களைப் போலவே!

ஆனால், முற்றிலும் நேர் எதிர் நோக்கத்தில்!

**ம**றுநாளுக்கு மறுநாள்—

வழக்கம்போல கையெழுத்துப் போடுவதற்காக அன்பழகன் காவல் நிலையத்துக்கு வந்தான்.

"என்னப்பா இது, தலையிலே கட்டு?"

"சும்மாதான் சார்... ஒரு சின்னக் காயம்"

"இங்க ஒண்ணும் ரிப்போர்ட் வரல்லியே..."

அன்பழகன் ரொம்ப நிதானமாகச் சிரித்துக் கொண்டான். சிரிப்பில் பெருமிதம் வெளிப்படையாகத் தெரிந்தது.

"தொழிலுக்குப் போகலே சார்... இந்தக் காயம் வேறோர் காரியத்தாலே வந்தது சார்..."

"அதென்னப்பா?"

"நீங்க தப்பு நடந்தப்புறம்தானே குற்றவாளியைத் தேடுவீக. நா ஒரு குற்றம் நடக்குறதையே தடுத்தேன் சார்... அதான் இது..."

மெல்ல நெற்றியைத் தொட்டான்.

"என்ன சொல்றே? ஒண்ணும் புரியலியே."

"எனக்கும் புரியலே சார். ஆனா, இந்தக் காயம் வலிக்கலே... நா செஞ்ச காரியத்துனாலே... இந்தக் காயம் கூட எனக்கு ஒரு பெருமையாத்தான் சார் இருக்குது..."

**செம்மலர், ஜூலை, 1982**
**(அப்போதைய மொழிநடைக்காக...)**

# பொழுது முகம்

**பொ**ழுது முகம் பார்த்ததேயில்லை அவன். விடிந்து முற்றம் தெளித்த பிறகும்கூட அவன் ‘குண்டக்க, மண்டக்க’ முடங்கி உறங்குவான். கூதலோ, வெயிலோ எதுவும் அவனை ஒன்றும் செய்துவிட முடியாது.

அம்மா... ஒரு தரத்துக்கு நாலுதரம் தொட்டு, அசைத்து, கத்தி உசுப்பிவிட்டால்... முக்கலும் முனகலு மாக எந்திரிப்பான். நாலைந்து தடவை சத்த லயமாகக் கொட்டாவி விட்டபின்பும் அசமந்தமாய் உட்கார்ந் திருப்பான். வாயில் ஊறிய எச்சிலின் அழுக்கு ருசியைக் கூட சோம்பல் கனத்தில் முழுங்கிவிடுவான்.

“ஏலேய்... எத்தனை தரம் உசுப்பி விட? எருமமாட்டு மேலே மழை பேய்ஞ்ச மாதிரி, இப்படியே சுரணையத்துப் போய் எம்புட்டு நேரம் இருக்கப் போறே? எந்திரிடா... எந்திரிச்சு ஆகுற சோலியைப் பாரு.”

அப்புறமும் கொட்டாவி வந்து நெரியும். அம்மாவின் நச்சரிப்பில் எரிச்சல் வரும்.

"ச்சேய்... இந்த அம்மாவுக்கு இதே பொழைப்பாய்ப் போச்சு. மனுசனை நிம்மதியா ஒறங்கவிடமாட்டா..."

என்று முணுமுணுப்பான். இருந்தாலும், 'எருமை மாடு' என்ற அம்மா, நாய், பன்னி, சனியன் என்று சீறுவதற்குள் எழுந்துவிடலாமே என்று பாயை விட்டு எழுவான், அந்தப் பதினாலு வயது பால்ச்சாமி.

இப்படித்தான் நித்தக்கூத்து.

அதனாலேயே அம்மா மகனை சாயங்காலமே எச்சரித்தாள்.

"ஏலேய் பாலு, நாளைக்காச்சும் பொழுது பெறப் புடறதுக்கு முந்தி எந்திரிக்கப் பாரு?"

"என்னத்துக்கு?"

"என்னத்துக்கா? அட எழவெடுத்த நாயி... விடிஞ்சா தைப்பொங்கலுடா. மாசப் பொறப்பு."

"அதுக்கு நா என்னத்துக்கு முன்னக்கூடி முழிக்கணும்?"

"காப்பு கட்டணும்லே...?"

"அதெல்லாம்... என்னாலே முடியாது, போ..."

"நீதாண்டா கட்டணும். வீட்டுக்கு ஆம்பளைப் புள்ளே நீதானடா...?"

இதைச் சொல்கிற கணத்தில் அம்மாவின் குரலில் வந்த நெகிழ்வு. கரகரப்பு. நாளாயிலிருந்து செய்றதை

யெல்லாம் நாழிகையிலே செய்து முடித்துவிட்டு 'போய்ச்' சேர்ந்துவிட்ட புருஷனை நினைத்துக்கொண்ட கற்றைச் சோகம்.

அந்தக் குரலின் குழைவுத் தடுமாற்றத்தில் அம்மாவின் சோகத்தை மனதால் தொட்டுவிட்ட பால்ச் சாமி.

"எதுக்கும்மா கண்கலங்குதே..."

"ஒண்ணுமில்லேடா... அய்யா இல்லேல்லே? நீதானே காப்பு கட்டணும்?"

"ஆட்டும்மா" என்று சட்டென்று சம்மதித்துவிட்டான்.

"ஏலேய்... பொழுதுமுகம் தெரியுதுக்கு முந்தி காப்பு கட்டிரணும்டா? வெருசா எந்திரிச்சிரு..."

"ம்"

"கருகருன்னு இருட்டு இருக்குறப்பவே எந்திருச்சிப் போய்... வேப்பங் கொழையும், கண்ணுப்புள்ளையும் புடுங்கிட்டு வந்துரு..."

இன்னும் அம்மாவின் குரலில் உலராத சோகம். இமை ரோமங்களில் நீர்க்கனம்.

அம்மாவின் இமை ரோம நீர்ச்சுமை இவனுள் என்னவோ செய்தது. சுபாவத்தின் முகத்தையே மாற்றுகிற மாதிரியிருந்தது.

ராத்திரி உறங்கமுடியவில்லை. உறங்கினாலும் கனாக் கண்டவனைப் போல 'திடுக், திடுக்'கென்று முழித்தான். 'விடிஞ்சிருச்சா... விடிஞ்சிருச்சா' என்ற நமைச்சலான நினைப்பு.

எப்படியோ... கீழ்வான விடிவெள்ளியை இனம் கண்டு எழுந்தான், பால்ச்சாமி.

என்னத்துக்குக் காப்பு...? எதுக்குக் காப்பு?

இதெல்லாம் தெரியாமலேயே... அம்மாவின் மனசைப் புண்படுத்தக் கூடாதே என்பதால் மட்டுமே வருஷா வருஷம் தைப்பொங்கலன்று காப்பு கட்டுவான்.

வேப்பங் கொழையையும், கண்ணுப்புள்ளைச் செடியையும் பிடுங்கி... கொத்தாகச் சேர்த்து, அருகம் புல்லால் கட்டி... புஞ்சையின் மாரி மூலையில் உள்ள மிளகாய்ச் செடியில் கட்டிவிடுவான்.

மிளகாய்ச் செடியின் பசிய வெள்ளத்தில் வேப்பங் கொழை கரைந்துவிடும். கண்ணுப்புள்ளையின் வெண் பஞ்சுச் சிரிப்பு மட்டும் முத்து முத்தாகத் துல்லியமாகத் தெரியும்.

பழகிப் போயிற்று. பழகப் பழக மனசு மரத்துப் போயிற்று. அம்மா செத்தபிறகும் ரெண்டு வருஷம்தான் தைப்பொங்கல் காப்பு கட்டினான்.

அப்புறம் சலித்துப் போயிற்று. இன்னதென்று விளங்காத சடங்கு. இதற்கென்று காரணம் புரியாத சாஸ்திரம்.

'சாத்திரம் சடங்குலேதான் அம்புட்டும் இருக்காக் கும்? போங்கப்பா... கழுதை கிடக்கட்டும்' என்று சலிப்பின் அலட்சியத்தில் விட்டுவிட்டான்.

தைமாதப் பிறப்பன்றும்... பொழுது முகம் பார்ப்ப தில்லை. விடிந்தது தெரியாமல்... காலை வெயிலிலும் சுரணையற்று உறங்குவான்.

எப்படியோ... உருண்டு, புரண்டு... நாளும் பொழுதும் நகர்ந்தது. கல்யாணம் காட்சியுமில்லை. ஏனென்று கேட்பதற்கு நாதியுமில்லை.

ஏனோதானோவென்று விவசாயம். விளைந்த விளைச்சலும் கொஞ்சம். வந்து சேர்ந்த கடனும் வட்டியும் அதிகம்.

மனச்சோர்வு... நினைவுகளின் நச்சரிப்பு. இடிந்த பாழ்மண்டபமாக மனசு. சிலந்திக் கூடுகளும், ஆந்தையும், வெளவாலுமாக அடைந்து கிடக்கிற புழுக்க நாற்றமான மனசு.

ஒருநாள். டீக்கடையில் மதிய நேரம். சோம்பித் துவண்டவனாக பால்ச்சாமி.

சாமியில்லை... சாதியில்லை என்று சண்டப் பிரசண்டமாய் முழங்கிக் கொண்டிருந்த ஆதியப்பன். விவசாயச் சங்கம்... தர்ணா, ஆர்ப்பாட்டம் என்று ஊர் சுற்றுகிறவன். போலீஸ் ஸ்டேஷன், தாசில்தார் ஆபீஸ்ன்னு அலைகிறவன்.

அவன் முழக்கத்தில் ஒருத்தர் குறுக்கிட்டார். மடக்கிப் பிடிக்கிற வேகத்தில் கேட்டார்.

"ஏய் ஆதி... சாத்திரமில்லை, சடங்கு இல்லேங்குறீயே... பெறகென்னத்துக்கு தைமாசப் பொறப்பன்னைக்கு ஓடிப்போய் காப்பு கட்டுதீயே... அது என்னத்துக்காம்? ஊருக்குத்தான் உபதேசமாக்கும்?"

கபடியில் பாடி வந்தவனைப் பிடித்து அமுக்கி விட்ட வெற்றிப் பெருமிதத்தோடு கேட்டார். ஆதி சளைக்கவில்லை, மருளவில்லை.

"மனுசனா பொறந்த எவனும் செய்ய வேண்டிய மரியாதை அது. சாத்திரமில்லே, சடங்கு இல்லே, அப்பனுக்கு புள்ளை செய்கிற மரியாதை. விதைக்கு விழுது காட்டுற வணக்கம்."

"என்ன சொல்லுதே...?"

"ஆதியிலும் ஆதியான நெசம் சூரியன்தான். சூரியனி லிருந்துதான் பூமி வந்தது. மனுசன் வந்தான். பயிர் பச்சை வந்தது. உயிருக்கு உயிர் வருது... சகலமும் அதனாலேதான் நடக்குது..."

பால்ச்சாமி ஏனோ உற்றுக் கவனித்தான்.

"சூரியனோட அருமை தெரிஞ்சவன், கிராமத்துச் சம்சாரி. அதனாலேதான் சூரியனைச் 'சூரியன்'னு சொல்லவே மாட்டாக. மரியாதைக்குரியவுக பேரைச் சொல்லாத மாதிரி, சூரியனைச் சொல்ல வேண்டிய எடத்துலேயெல்லாம் பொழுதுன்னுதான் சொல்லுவாக... பொழுது அடைஞ்சிருச்சி... பொழுது பெறப்புட்டுருச்சு... உச்சிப் பொழுது... பொழுது சாய்ஞ்சிருச்சுன்னுதான் சொல்லுவாக..."

"அதுக்கு?"

"பொழுதுக்கு முந்தி எந்திரிக்க வேண்டியவன் சம்சாரி. முடிவில்லாம நிக்காம சுழல்ற பொழுது மாதிரியே, சம்சாரியும் இயங்குறான். ஓடி ஓடிப் பாடுபடுறான்... மனுச உயிருக்கும், பச்சைப் பசப்புக்கும் ஆதாரமாயிருக்கிற ஆதி நெருப்புக்கு சம்சாரி செய்ற சிறப்பு மரியாதைதான் காப்பு. தைங்குறது மாசப் பொறப்பு மட்டுமில்லே... வருஷப் பொறப்பும் அன்னைக்குத்தான்.

தமிழ் வருசத்தின் முதல் நாள்லே பொழுது முகத்தை வரவேற்கிறான் சம்சாரி. பச்சைக் கொழையும், வெள்ளைச் சிரிப்புமாய் பொழுதை வரவேற்குற மரியாதைதான், காப்பு. பொழுதுக்கு முந்தி எந்திருச்சி ஓடியாடி மாடு கன்னுகளைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு சம்சாரிக்கு இருக்குங்குற அடையாளம்தான்... கருகருன்னு இருட்டு இருக்குறப்பவே காப்பு கட்டுறது... பொழுது முகமே காப்பு பாத்துத்தான் கண்ணு முழிக்கணும். புரியுதா...? இது சாத்திரமில்லே, வாழ்க்கை. இயற்கையுடனான பந்தத்தை நெனைச்சு மதிக்குற மனுச வாழ்க்கை..."

ஆதியப்பனின் குரல் அம்மாவின் குரல் போல பால்ச்சாமிக்குள் ஒலித்தது. அம்மாவின் குரல், அதன் நெகிழ்வு, பாசமும் கண்டிப்புமாக அதட்டுகிற அந்தக் குழைவு.

'ஏலேய் சுரணையத்தவனே' என்று உரிமையோடு கண்டிக்கிற அம்மாவின் மாயக்குரல். பாசக்குரல்.

இந்தத் தைப்பொங்கலன்று...

கருகருவென்று இருட்டு இருக்கும்போதே... குளித்து முழுகி... காப்போடு புஞ்சைக்குப் போனான், விடியலை வரவேற்க.

**'தீக்கதிர்' பொங்கல் சிறப்பிதழ், 15–1–1999**

# கஞ்சம்

**சி**ன்னையா நாடாருக்கு ஆச்சரியமென்றால் ஆச்சரியம்; அப்படியோர் ஆச்சரியம். வாயடைத்துப் போகிற ஆச்சரியம்!

சாமிநாதன் வாயிலிருந்து இப்படியொரு வார்த்தை வந்துவிழும் என்று கனவிலும் நினைத்திருக்க மாட்டார் அவர்.

சூடம் கொளுத்தி, சத்தியம் பண்ணினால்கூட யாரும் நம்பமாட்டார்கள், 'இவன் இப்படிச் சொல்லியிருப்பான்' என்று. வேறு யாராச்சும் வந்து இவரிடம் இப்படிச் சொல்லியிருந்தால்... இவரும்கூட நம்பியிருக்கமாட்டார்.

"ஏம்லே, ஒனக்கென்ன கோட்டி புடிச்சிருச்சா? சாமி நாதனாவது.... இப்படிச் சொல்றதாவது? கெழக்கே பெறப்படுற பொழுது, மேற்கே உதிச்சாலும் உதிச்சிரும்... சாமிநாதன் இப்படிச் சொல்லியிருக்கவே மாட்டான். ஏண்டா, கேப்பையிலே நெய் வடியுதுன்னு நீ சொன்னா... கேக்குறவன் காதுலே பூவா வைச்சிருக்கான்?"

எகத்தாளமும் ஏளனமுமாய்ச் சிரித்திருப்பார். பரிகாசம் பண்ணி கூத்து கட்டியிருப்பார்.

ஆனால்... அவர் முகத்துக்கு நேராக நின்று சாமி நாதனே அப்படிச் சொல்லிவிட்டான்.

சொன்னது அவன்தானா? சொன்னது நிஜம்தானா?

அவரே நூறுமுறை அவரைக் கேட்டுக்கொண்டார்.

அவருக்குள் விம்முகிற ஆச்சரியம். மனசு கொள்ளா மல் திமுறுகிற பிரமிப்பு! 'உடைத்து யாரிடமாவது கொட்டியாகணும்' என்று முண்டி முட்டுகிற உணர்வு மூர்க்கம்.

கட்டுப்படுத்த முடியாத ஆசையைக் கட்டுக்குள் கொண்டுவர பெரும் பிரயத்தனம் பண்ணினார் சின்னையா நாடார்.

'காரியம் ஆச்சுன்னா... அவன் சொன்ன அதிசயம் தான் ஊரெல்லாம் தெரிஞ்சு போகும்லே?'

இப்படி நினைத்து ஆறுதல்பட்டுக் கொண்டார்.

**தா**ய் தகப்பன் வைத்த பெயர் சாமிநாதன். ஆனால் அந்தப் பெயர் துலங்கவில்லை. ரொம்பப் பேருக்குத் தெரியாது.

ஒருநாள்—

வெளியூர்க்காரர் ஒருத்தர் சைக்கிளில் வந்து இறங்கி நின்று, "சாமிநாதன் எங்க இருப்பாரு?" என்று மிகுந்த மரியாதைத் தொனியில் கேட்டார்.

ஊர்மடத்தில் உட்கார்ந்திருந்த ஆட்களுக்கு ஏகப்பட்ட குழப்பம். 'அது யாரு... இது யாரு...' என்று மண்டையைப் போட்டுக் குடைந்தனர். ஓர் இளவட்டம் பட்டென்று பதில் சொன்னான்.

"இந்த ஊர்லே அப்படி ஒரு ஆளே கெடையாது..."

இந்த மறுப்பை ஒப்புக் கொள்ளாமல் தேங்கி, திகைத்து, தயங்கித் தயங்கி— ஆனால் உறுதியாகச் சொன்னார்.

"இல்லே... இந்த ஊருதான் அவரு..."

"இங்க சாமிநாதன்ங்குற பேர்லே பெரிய மனுசர் யாருமில்லையே...!"

"பெரிய மனுசருல்லே... நுப்பத்தஞ்சு வயசிருக்கும்... நல்ல கறுப்பு. கலர்ப் பனியன்தான் போடுவாரு... கண்ணு கொஞ்சம் உப்புன மாதிரியிருக்கும்..."

"இவரு சொல்ற அடையாளப்படிப் பாத்தா... அது நம்ம குமணன்தான்... பேரு சாமிநாதன்னு சொல்றாரே...?"

மடத்தில் இருந்த பெரியவர்தான் சொன்னார்.

"கொமணம்பேரு... சாமிநாதன்தானப்பா... அது அவுக அய்யா அம்மா வெச்ச பேரு..."

"கொமணங்குறது...?"

"ஊரு வைச்ச பட்டப்பேரு! புலவர் போய் தானம் கேக்க, தர்றதுக்கு எதுவுமில்லையேன்னு மறுகித் தவிச்ச கொமணன், தன் தலையையே அறுத்துக் குடுத்தாரு... தானமாக..."

"தலையை அறுத்துத் தானமா குடுத்த கொமணன் பேரை... எச்சிக் கையாலே காக்கா வெரட்டாத இந்தக் கஞ்சனுக்கு என்னத்துக்கு வைச்சாக? வெட்டுக் காயத் துக்குச் சுண்ணாம்பு கேட்டாக்கூட, விரலை நீட்டித் தரமாட்டானே... இவன்..."

"இவனோட கஞ்சப் புத்தியைக் குத்திக் காட்டுறதுக் காகத்தான்... கொமண மகாராசா பேரை பட்டப் பெயரா

*வைச்சாக...! ஊரு வைச்சபேரு நெலைச்சிருச்சு... சாமி நாதன்ங்குற பேரு யாருக்கும் தெரியாமப் போச்சு....!”*

*குமணன் வீடு இருக்கும் திசையைக் காட்டி, சைக்கிள் காரரை அனுப்பினார்கள்.*

*குமணனை, ‘கொமணன்’ என்று கூப்பிடாமல், பாந்தமாய்— பாசமாய் ‘சாமிநாதா’ என்று கூப்பிடுகிற ஒரே ஆத்மா, சின்னையா நாடார்தான்.*

*அவனே செவிடன் மாதிரி, கேட்டும் கேளாமல் போய்விடுவான். அப்புறம் சின்னையா நாடார் அதட்டிக் கூப்பிடுவார், சத்தம் போட்டு— “சாமிநாதா...”*

*“.......”*

*“என்னடா... காது கேக்கலியா?”*

*“நீங்க யாரையோ கூப்புடுதீகளாக்கும்னு நெனைச்சேன்...”*

*சாமிநாதனுக்கே சாமிநாதன் பெயர், ‘யாரோ’ பெயர்தான்! ‘கொமணா’ என்றால் பட்டென்று திரும்பிப் பார்ப்பான்.*

*குமணன் என்ற பட்டப் பெயர் வந்து நிலைத்துப் போகிற அளவுக்கு, பிரபலமான கஞ்சன்!*

*‘மாந்தோப்புக் கிளியே’ வந்த புதுசு. சுருளிராசன் கஞ்சனாக நடித்த வசனப் பகுதியை மட்டும், கல்யாண வீட்டு மைக் செட்களில் அடிக்கடி போடுவார்கள். ஊர்ச் செவிகள் அதிரும். சிரித்து உருளுவார்கள்.*

*ஜனம் பூராவும் குமணனைப் பார்த்துக் குறுஞ்சிரிப்பு சிரிக்கும்.*

*“ஒன்னைப் பத்தித்தான்...” என்பார்கள் நமட்டுச் சிரிப்புடன்.*

"சுருளிராசனே நம்ம கொமணங்கிட்டே பிச்சை யெடுக்கணும்..."

பெரிதாகக் கோபப்படாமல், குமணன் அவர்களுக்கு பெரும்போக்கான அலட்சியத்துடன் பதில் சொல்வான்: "போங்கடா... நீங்க அந்தமாணிக்கா.... அள்ளிக் குடுக்குற வள்ளலாக்கும்? கர்ண மகராசா பரம்பரை...! சரிதான் போங்கடா..."

அப்பேர்ப்பட்ட மகாகஞ்சன்தான், குமணன். கஞ்சனாக இருப்பதில் பெருமிதம் காண்கிறவன். 'சிக்கனமா இருக்குறது ஒரு குத்தமா' என்று மனசுக்குள் குமுறுகிறவன். அவன்தான்— சின்னையா நாடாரிடம் 'இப்படி'ச் சொல்லியிருக்கிறான்.

**கா**டுகரை, வீடு நிலம், மாடு கன்று எல்லாவற்றையும் மகன் சண்முகையாவிடம் ஒப்படைத்துவிட்ட சின்னையா நாடாருக்கு, சும்மாயிருக்க மனசு ஒப்பவில்லை.

கொத்திக்கண்ட கோழியும், நக்கிக்கண்ட நாயும் சும்மா இருக்காது என்பது சொலவு. உழைத்துக் கண்ட கிழட்டு ஒடம்பும் சும்மாயிருக்காது என்று சேர்த்துக் கொள்ளவும் செய்யலாம்.

"உக்காந்து... போட்டதை உண்டுட்டு, ஊர்க்கதை பேசிக்கிட்டு சும்மாயிரும் அய்யா!" என்று சண்முகையா சொன்னாலும் கேட்கமாட்டார். ஊருக்கு மேற்கே—

உவர்க்காடு ரெண்டு குறுக்கம். ஊசிப்புல் தவிர ஒரு புல் பூண்டோ... கொரண்டிச் செடியோ முளைக்காது. பாறையில்கூட முளைக்கிற மஞ்சனத்தி, இந்த மண்ணில் கண் முளைக்காது. வேரைக் கருக்கும் உவர்மண்.

அத்துடன் சரிமல்லுக்கு நிற்கிறார். 'நீயாச்சு, நானாச்சு' என்று மோதுகிறார். 'வந்துபார்' என்று சவால் விடுகிறார்.

'மண்ணா... மனுசனா, யார் உசத்தி? ஒரு கை பாத்துரலாம்' என்று அயற்சி காணாத போர்க்குணம் காட்டுகிறார்.

'மனுசனைத் திங்குற மண்ணைக்கூட மாத்திக் காட்டும் மனுச வேர்வை' என்று வாய்க்கு வாய் வீரம் பேசுகிறார்.

குழிகளைத் தோண்டி... மாற்று மண் போட்டு... மாட்டுச் சாணி பொறுக்கி... அதையும் போட்டு.... வேப்பங் கன்றுகளை ஊன்றி, குடம் குடமாக நீர் சுமந்து... உயிர் ஊற்றி... சதை தந்து.... ஆத்மாவையே உரமாகப் போட்டு.... முதுமையையும் உவரையும் பொய்யாக்கி...!

நூறு மரங்களுக்கு வயசு மூன்று. இன்னும் பூக்கவில்லை. சிறுமிகளைப் போல பாவாடைச் சடசடப்பில் வேப்பமரங்கள். காற்றுடன் கைகோர்த்து தட்டா மாலை சுற்றுகிற குதூகலம். ஆற்றில் குதித்து ஈரப்பாவாடையோடு வெளிவருகிற சிறுமியைப்போல... மழையில் நனைந்து பூரித்துச் சிலிர்க்கிற மரக் குழந்தைகள்.

உவர்மண், வேப்ப மரப்பிள்ளைகளின் புன்னகை பூக்கிற பசிய பூந்தோட்டமாகிவிட்டது. சில்லான்கூட நடமாடாத அந்தப் புஞ்சையில் இப்போது... வண்ண வண்ணப் பட்டாம்பூச்சிகள்... சிவப்பும் வெள்ளையுமாக தட்டான்கள்.

குழந்தைகளோடு குழந்தைகளாக விளையாடுகிற மைனாக்களின் செல்லச் சண்டைகள். மயில் மந்தைகளின் அழகுக்கோலம்.

ஆண் மயில்களின் தோகை விரிப்புகள். பெண் மயில்கள்... மயில் குஞ்சுகள். சொந்த வீடாக நினைத்து சகஜமாக சுற்றித் திரிகிற மயில்கள்.

*சின்னையா நாடார் ஜெயித்துவிட்டார். மண்ணைத் தின்றுவிட்டார். உவரை ஜீரணித்து, மண்ணுக்கே கூடுதல் மகிமை தந்து....!*

'சின்னையா மாமாவோட ஒவர்க்காடா?' என்று இகழ்வாகக் கேட்ட கிராமத்தாட்கள்... இப்போது... 'சின் னையா மாமாவோட வேம்புத் தோப்பு' என்று மதிப் போடு– மரியாதையோடு அடையாளம் சொல்கிறார்கள்.

மூன்று வருஷப் போரின் வெற்றி. மனித வேர்வை யின் பசிய புன்னகை.

காலையில் ஒன்பதுமணி வரைக்கும் புஞ்சையைச் சுற்றி வருவார். சாயங்காலம் அஞ்சு மணிக்கு மேல் போய்... மரம் மரமாக வருடுவார். தூர்களின் சொரசொரப்பை சுகமாகத் தடவுவார்.

மதிய வெயிலுக்கு நிற்க முடியாது. நிற்க இடமில்லை. சின்னச் சின்ன நிழல்கள். அதுவும் நகரும் மரநிழல்கள். வயசாளி. நாள் முழுக்க நடமாட முடியாது. வீட்டுக்கு வந்துவிடுவார்.

நேற்றுச் சாயங்காலம் போனார். அந்தி வெயில் தங்கமாய்ச் சிரித்தது. கைத்தறித் துண்டை இழுத்து மூடிக் கொண்டார். கறுத்த திரேகத்தில் வெள்ளை மயிர்கள். புதிதாக முளைத்த உறுப்பாக மூக்குக் கண்ணாடி. மரம் மரமாகத் தடவி வந்தார். மயில்கள் இவரை வேற்று மனிதராக நினைத்து மருளவில்லை. வெருளவில்லை.

உப்பு மூலையில் 'வெறிச்'சென்று தெரிந்தது. ஏதோ இல்லாமல் போய்விட்ட மாதிரி ஒரு வித்தியாசம். உற்றுப் பார்த்தார்.

ஒன்றிரண்டு மரங்களில் கொப்புகள் ஒடிபட் டிருந்தன. துரட்டி போட்டு இழுத்த அடையாளம்.

இவருக்குள் பகீரென்றது. கரிக்குடலை யாரோ கவ்விப் பிடித்த மாதிரியோர் பிசைவு. அடிவயிற்றில் குபீரென்று படர்ந்த வெறுமை. பார்த்தால்—

பத்துப் பன்னிரண்டு மரங்களில் காயம். கொப்பு ஒடிக்கப்பட்ட இடங்களில் வெள்ளைச் சதை தெரிய, காயங்கள். பசிய சிராய்ப்புகள்.

பெரிய பெரிய கைகள் வெட்டுப்பட்டு மூளி மரங்களாய் நின்ற அவற்றின் சோகம். பரிதாபம்.

இவருக்குள் குலை கொதித்தது.

"எந்தப் படுபாவிப்பய செய்ஞ்சான் இந்தப் பாதகத்தை? பச்சைப் புள்ளைகளோட பிஞ்சுக் கைகளை ஒடிச்சி இழுக்கறதுக்கு எந்த ராட்சஸனுக்கு மனசு வந்துச்சு?"

சுற்றிச் சுற்றி வந்தார். மரத்தைத் தொட்டுத் தொட்டுத் தடவினார். மனசு கிடந்து தவித்தது. தானே வெட்டுப்பட்ட மாதிரி துடித்தார்.

மரங்களின் காலடியில் இலைகளின் இணுக்குகள். ஒற்றை இலைகள். தூசு துரும்புகள்.

"ஆட்டுக் குட்டிகளுக்குக் கொழை வேணும்னு எந்த பாவியோ செஞ்சுருக்கான். மதிய நேரத்துலே வந்துருக்கான். நா இல்லாமப் போய்ட்டேனே...! இருந்துருந்தா.... அவனை வெட்டிப் பலி போட்டுருப்பேனே...! வெயில். நகர்கிற நிழல். எங்கயாச்சும் கால் நீட்டிப் படுக்க எடமிருந்தா? நெரந்தர நெழல் இருந்தா...? ஒரு தா(ழ்)வாரம், சாய்ப்பு ஏதாச்சும் இருந்தா...? இந்தக் கொலை பாதகத்தைத் தடுத்துருக்கலாமே..."

வேதனையில் துடித்த சின்னையா நாடார். துடிப்பின் ரணத்தில் பிறந்த நினைவுகள். பதைப்பில் கசிந்த யோசனைகள்.

வீட்டுக்குப் போனார். விறுவிறுவென்ற வேக நடை. வெட்டரிவாளை எடுத்தார். பச்சை வேலி மரங்களை வெட்டினார். கட்டைகள் தயார். குச்சிகள் தயார். கயறுகள் தயார்.

எல்லாம்... தயார். தட்டை? கம்பந்தட்டை? சண்முகையா ஒரு புஞ்சையிலும் கம்பே பயிரிடவில்லை.

'கம்பந்தட்டைக்கு எங்க போறது? நாலு கட்டாச்சும் வேணுமே...? யாருகிட்டே இருக்கு? கேட்டா கிடைக்குமா? முதல்லே.... கம்பந்தட்டை எங்க— யாருகிட்டே இருக்கு துன்னு தெரியணுமே....'

பரிதவிக்கிற அவர் மனசு. தன் பிள்ளைக்கு நோய் வந்தா தவிக்கும் தாயின் அதே பதைப்பு, மனப்பரபரப்பு. தேடல், துடிப்பு, விளிம்பில் துடிக்கும் உணர்வு.

'கம்பந்தட்டை யாருகிட்டே இருக்கு?'

மனசுக்குள் குடைகிற கேள்வி. ஒவ்வொரு வீடாக உள் நுழைந்து துழாவுகிற நினைவு. ஒவ்வொரு முகமாக உரசி வருகிற ஞாபகம். சகல மனிதர்களையும் விசாரித்து வருகிற நினைவு.

நினைவின் நச்சரிப்போடு குழிகளைத் தோண்டி னார். கட்டைகளை ஊன்றினார். குச்சிகளைக் குறுக்குக் கட்டாகக் கட்டினார். அகத்திக் குச்சிகளின் பின்னல் கட்டு.

இளமதிய வெயில். தாழ்வார எலும்புக் கூடாக நிழல். நாலு தூண்களும்... சதுர சதுரப் பின்னல்களுமாய் நிழல். கம்பந்தட்டையைப் போட்டு வேய்ந்துவிட்டால்... முழுமை யான நிழல்.

சாஸ்வத நிழல். காலை மாலைக்கு நகராத நிழல். ஆள் உட்காரலாம். படுக்கலாம். ஓய்வெடுக்கலாம். காவல் காக்கலாம். ஒரு நாய் உள்ளே வராமல் பார்த்துக்

கொள்ளலாம். ஓர் இலையைக்கூட காயப்படாமல் காப்பாற்றலாம்.

'சரி, கம்பந்தட்டை வேணுமே.... யாருகிட்டேயிருக்கு? எங்க இருக்கு?'

மனசுக்குள் குடைச்சல். துளைத்தெடுக்கிற கேள்வி.

சின்னையா நாடார் உயிர் முழுவதையும் இந்தக் கேள்வியில் நிறுத்தி... யோசனையுடன் வந்து கொண்டார். ஊருக்குள் நுழைந்தார். மேலத் தெரு கடந்தார். வடக்குத் தெருவுக்குள் நுழைகிற சமயம்.

அவரை ஏதோ ஒரு சக்தி பிடித்து நிறுத்தியது. 'நில்' என்றது. 'கவனி' என்றது. உள்மனக் குரலில் திகைத்தார். தேங்கினார்.

தெருப்பாதைக்கு இடதுபுறக் காலிமனையில் ஒரு படப்பு இருந்த அடையாளம். காய்ந்த கம்பஞ்சருகுகள். மிச்சமாகக் கிடந்த கம்பந்தட்டைக் கட்டு. பெரிய கட்டாகக் கட்டினால், ஆறு கட்டுக்கு வரும்.

இவருக்குச் சரியாக வரும். தாழ்வார வேய்தலுக்கு இது போதும். யார் தட்டை அது?

விசாரித்தால்—

"கொமணன் தட்டை..."

"சாமிநாதனா?"

"முந்தா நாளுதான் அவன் வீட்டுக் கூரையை மேய்ஞ்சான். மிச்சத் தட்டை அது..."

"குடுப்பானா?"

"கொமணன் எப்படிக் குடுப்பான்? குடுத்தா... எப்படிக் கொமணன்னு பேராகியிருப்பான்?"

சின்னையா நாடாருக்குள் திக்கென்றது. நல்ல தட்டை. பசுமை காய்ந்திருந்த புதிய தட்டை. நீளம் நீளமான

தட்டை. தடிமனான தட்டை. கிடைத்தால் ரொம்ப நல்லாயிருக்கும். கம்பந்தட்டைக் கட்டுகளை ஏக்கமாய்ப் பார்த்தார்.

சிரங்கு பிடித்தவன் கையிலிருக்கிற வெண்ணெய். சாக்கடைக்குள் கிடக்கிற சேலத்து மாம்பழம். மாட்டையும் மேயவிடாமல், தானும் தின்னாமல் படுத்துக் கிடக்கிற வைக்கோற் படப்பு நாய். சொறி நாய்.

சாமிநாதனின் கஞ்சத்தனம் ஊரறிந்த பிரபல்யம் மட்டுமல்ல; இவரே சில தடவைகள் அனுபவித்த உண்மையும் கூட!

கஞ்சத்தனத்தின் அற்பத்தனத்தைக் கண்டு மனசுக்குள் அருவெருத்திருக்கிறார், சில தடவைகள்.

“ச்சீய்.... இதுவும் ஒரு மனுச ஜெம்மமா?” என்று சத்தமாய் அசூயைப்பட்ட ஞாபகங்கள். காயத் தடங்கள். அனுபவத் தழும்புகள்.

‘கேட்டால் தரமாட்டானே...’

மருகித் தவித்தார். ரொம்ப நேரத்திற்கு மன உளைச்சல். அப்படியும், இப்படியுமாய் ஊசலாடிய நினைவுக் குழப்பங்கள்.

‘கேட்டுத்தான் பாப்பமே....’ என்ற ஒரு தைர்யம்.

‘மயிரைக் கட்டி மலையை இழுப்போம். வந்தா மலை. அ(று)ந்தா மயிர்தானே? இவன் குடுக்கலேன்னா.... தாவாரம் நின்னா போயிரும்? அதுக்கு ஒரு வழி யில்லாமலா போயிரும்?’

அப்படி வந்த நினைப்பு. ஒரு துணிச்சல். முரட்டுத் துணிச்சல்.

குமணனைத் தேடிப் புறப்பட்டார். அவன் வீட்டை நோக்கி நகர்ந்தார். துணிச்சலையும் மீறிக்கொண்டு அவருக்குள் ஒரு கழிச்சல். மன வழுக்கல்.

'இல்லேனுதான் சொல்லப் போறான். அதை இதைச் சொல்லி ஜால்ஜாப்பு பேசி... 'லொல்லை'ன்னுதான் சொல்லப் போறான். கஞ்சப்பய... வேற எப்படிச் சொல்வான்?'

பார்த்துக் கேட்டார். வேப்ப மரத்துத் தோப்பில் வந்த அழிமானம்— பகல் காவலுக்குத் தேவை வந்திருப்பது— நிழல் இல்லாக் கொடுமை— தாழ்வாரத் தேவை—

எல்லாம் சொல்லிவிட்டுக் கேட்டார்.

"மிச்சம் கெடக்குற ஒன்னோட கம்பந்தட்டையைக் குடுத்தீன்னா... ஒனக்குப் புண்ணியமாப் போகும்...."

அப்போதுதான் அந்த ஆச்சரியம் நிகழ்ந்தது! இவரை வியப்புத் திணறலில் திண்டாட வைக்கிற மாதிரி.... சாமி நாதன் அப்படிச் சொன்னான். நம்ப முடியாத சொற்கள். நிஜமான சொற்கள். ஆசிரியமான அதிர்ச்சி!

"கூரை மேய்ஞ்சாச்சு... மிச்சம் கெடக்கு.... அதை நா என்ன அவிச்சா திங்கப் போறேன்? உங்களுக்கு ஆகும்னா எடுத்துட்டுப் போங்க சித்தப்பா..."

பெருந்தன்மையாக— தாராள மனதோடு— அவன் சொன்ன விதம். குரலின் கனிவு. முகத்தின் குழைவு.

சின்னையா நாடாருக்கு ஆச்சரியம் என்றால்... ஆச்சரியம்... அப்படியோர் ஆச்சரியம்!

**சி**ன்னையா நாடார் சின்னப் பிள்ளை மாதிரியாகி விட்டார். "ஊர்த் திருவிழாவுக்கு பஸ்லே போறோம்" என்று அய்யா சொன்னால், டவுசர் பையனுக்குள் பரவசமும் குதூகலமும் அணை உடைந்த வெள்ளமாய்

அடித்துச் செல்லுமே... அப்படித்தான்... சாமிநாதன் சம்மதத்தில், தரையில் கால் பாவாமல் அலைந்தார்.

தலைகால் புரியாத சந்தோஷம்! ரெக்கை முளைத்துவிட்ட மாதிரியோர் பரபரப்பு; பரவசம். ஓட்ட பாட்டமாய் அலைந்தார். காலில் சக்கரம் கட்டிக்கொண்டு பறந்தார்.

கூரை வேய்வதற்கு சமுத்திரத்தைக் கூப்பிட்டு வைத்தார். நார்க்கட்டு வாங்கி நனைய வைத்தார். மொச்சிக் கொழைகளை ஒடித்துக்கொண்டு வந்து போட்டார். மஞ்சணத்தி மரக் கொழைகளையும் கொண்டுவந்து போட்டார்.

கம்பந்தட்டை முடிகட்டவும், கட்டுகளைச் சுமக்கவும் ஆள் ஏற்பாடு செய்துவிட்டார். எல்லாம் சரி... எல்லாம் ரெடி... சுத்தமான தயாரிப்பு.

"பாரப்பா... வேம்புத் தோப்புலே காவலுக்கு டேரா போடுறதுலே பெருசுக்கு இருக்குற வேகத்தையும், விறுவிறுப்பையும்...! சாகப்போற கெழடு மாதிரியா யிருக்காரு....? இப்பத்தான் தலைப்புள்ளையா ஆம்பளைப் புள்ளை பெத்த புதுத் தகப்பன் மாதிரியில்லே... பம்பரமா சுத்தியலையுதாரு?"

கிராமத்து இளவட்டங்கள் இமைதட்டாமல் முழித்தனர். மூக்கில் விரலை வைத்தனர். பொருட்படுத்தாத அலட்சியத்துடன் விலகி நின்று வேடிக்கை பார்த்த சண்முகையா கூட... அய்யாவை வியப்பாகப் பார்த்தான்.

கம்பந்தட்டைக் கட்டுகளைச் சுமந்து கொண்டு வருவதற்கான ஆள்களோடு... கயறுகளையும் எடுத்துக் கொண்டு சின்னையா நாடார் புறப்பட்டார்.

வடக்குத் தெருவுக்குள் நுழைகிற இடம். தெருப் பாதைக்கு இடப்புறக் காலிமனையில்—

படப்பு இருந்த இடம். சின்னக் குன்று மாதிரி மிச்சத் தட்டை கிடந்த இடம். நீளம் நீளமான புதுசு குறையாத பச்சைத் தட்டைகள்.

போய்ப் பார்த்தால்... தீப்பிடித்த மாதிரியிருந்தது. சின்னையா நாடாரின் கண்ணுக்குள் தேள் கொட்டிய மாதிரியிருந்தது.

ஈரக் குலையைப் பிடுங்கிய மாதிரியோர் அதிர்வு. கம்பந்தட்டை பூராவும் தீப்பிடித்துக் கிடந்தது. அரையும் குறையுமாகக் கருகி... கன்னங்கரேலென்று சாம்பலாகக் கிடந்தது. தீப்பிடித்து எரிந்த சமயத்தில் தண்ணீரை ஊற்றியணைத்த அடையாளம். அரை குறைக் கருகல். நனைந்த சாம்பல்.

அவருடைய கனவின் கருகல். தாழ்வாரக் கனவின் சாம்பல். வேப்பமரத்து அழிமானத்தைத் தடுக்கும் யத்தனிப்பின் எரிவு. அவருள்—

கொப்பொடிந்து கிடந்த மரப் பறவைகள். ரெக்கை ஒடிபட்ட வெள்ளைக் காயங்கள். காயங்களின் ஈரக் கசிவான கண்ணீர்.

இவருக்குள் ரெக்கையொடிந்த மாதிரியிருந்தது. அவரது உள் மன நரம்புகளே அறுந்து தொங்குகிற மாதிரி மனசுக்குள் ஓர் உடைவு. தொய்வு. ஏமாற்றத்தின் பேயறை.

இத்தனை ஏற்பாடுகளும் செய்த பிறகு, நின்று போகிற அவமானம். வெண்ணெய் திரண்டு வருகையில் தாழி உடைந்த அவலம்...

சின்னையா நாடார் நொறுங்கிப் போனார்.

எரிந்து கருகிய சாம்பலையும், கருகி முடியாத மிச்சத் தட்டைகளையும் மாட்டுவண்டியில் அள்ளிப் போட்டான், குமணன். காடி வைத்த வண்டி. ரெண்டு வண்டிக்கு இருந்தது.

அவனது குப்பையில் தட்டி... பரப்பிவிட்டு... அதன் மேல் ஆற்று மண் ஆறு வண்டிகளைக் குமித்தான். எரிந்து போனதையும் வீணாக விடாமல், குப்பையாக்குகிற நுட்ப முயற்சியில் அவன்.

"கொமணங்கிட்டே தட்டை வாங்கி தாவாரம் போட்டுட்டீரா?"– பரிகாசமான சிரிப்போடு கேட்டான், தெற்குத் தெரு வடிவேலு.

"இல்லேப்பா.... சாமி வரம் குடுத்தாலும், வாங்குற கொடுப்பினை நமக்கு இல்லே...."

சோகமாய் சுரத்திழந்து போய்ச் சொன்னார் சின்னையா நாடார். தொடர்ந்து தகவலாக புலம்பினார்.

"அதான் தீப்பிடிச்சு எரிஞ்சிருச்சு இல்லே?"

"தீ வைச்சது யாரு தெரியுமா?"

"வைச்ச தீயா? தானா புடிச்ச தீயில்லியா?"

"தானா எப்படி தீப்புடிக்கும்? மாய மந்திரமா?"

"யாரு வைச்சது?"

"நீரு போய்க் கேட்டவுடனே பெருந்தன்மையா சம்மதிச்ச கொமணன்தான்... கம்பந்தட்டையை அவிச்சுக் குப்பையாக்கிட்டான். காரியக்காரன்..."

*சின்னையா நாடாருக்குச் செருப்பால் அடித்த மாதிரியிருந்தது. மனசுக்குள் யாரோ ரகசியமாய் காறித் துப்பிய மாதிரியோர் உள் அவஸ்தை.*

*நெஞ்சின் ஆழத்தில் 'சுருக்' கென்று ஒரு வலி.*

*'ஒரு சின்ன நாயி... நம்மளை சிங்காரிச்சு மூக்கறுத் துருச்சே....! நமக்கு ஏமாளிப் பட்டமும், கோமாளிப் பட்டமும் கட்டிட்டானே... அல்பப்பய....'*

*அவருக்குள் வந்த அவமான ரணம். கறுத்த முகம் நரைத்த முடியாக வெளுத்துப் போய்விட்டது.*

*'ஊமைக்கனா கண்டாச்சு. என்னத்தைச் சொல்ல?' என்ற ரகசிய வேதனையோடு முகம் தாழ்ந்து... மனம் சிறுத்துப் போய் நகர்ந்தார். புலம்பக்கூட யோக்யதை யில்லாமல் போயிற்று.*

*ஊசிப்புல் தவிர ஒரு புல் பூண்டு கூட முளைக்காத உவர் மண்ணையே வியர்வையால் ஜெயித்தவர். வேப்ப மரத்தோப்பு படைத்தவர். ஓர் உவர் மனசை ஜெயிக்க முடியலியே...! ஒரு சின்னப் பயலோட மாய்மாலத்துலே ஏமாந்துட்டாரே....*

*இந்த ரணம், கட்டை வேகும் வரைக்கும் அந்த மனசில் துடித்துக் கொண்டேயிருக்கும்.*

**இதயம் பேசுகிறது, (15-8-99, 22-8-99 ஆகிய இருவார இதழ்களில் பிரசுரமானது)**

கங்கை

பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ்
23633094 -23631794